

vithai

# விதை

வானொலியில் விதைத்த நாடகங்கள்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை

## நாடகங்கள்

2020 ஆம் வருட அரச இலக்கிய
விழாவில் சிறந்த சிறுவர்நாடக
இலக்கியத்திற்கான அரச விருது
(சாகித்திய விருது) பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற ஆக்கங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| 2. | சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| 3. | பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| 4. | மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |
| 5. | வண்டல்மண் | சிறுவர் கதைகள் | 2018 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை Vithai(Seed))

வானொலியில் விதைத்த நாடகங்கள்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

'maravanpulo' sellam ambalavanar

ஆசிரியர் வெளியீடு

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விதை’

**(வானொலி நாடகங்கள்)**

(c) மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு : 2019

ISBN: 978-955-42626-6-9

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தினால்
அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

அம்பலவாணர், செல்லம் மறவன்புலோ
விதை / மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்
கொழும்பு : ஆசிரியர் , 2019
ப. XXXII, 146 செமீ. 21
ISBN 978-955-42626-6-9
i. 894.8112 டிவீ 23 ii. தலைப்பு
1. நாடகம்

பதிப்பாசிரியர் : செ. அம்பலவாணர்,
478/28 அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15
தொலைபேசி : 0714280809
e-mail : ambalam9591@gmail.com

அச்சுப்பதிப்பு : K.J.Enterprises
63, விகாரைலேன், கொழும்பு 06
0112058489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்.....

ஆண்டுகள் முப்பத்தொன்பது

அரவணைத்து

ஆளாக்கி ..

உயரவைத்து ..

உலகை உணரவைத்து

உலகுக்கெல்லாம் எனை உணரவைத்து

உலகை எலாம் எனக்குக் காட்டி ..

என்னுள் இருந்ததை எனக்குக் காட்டி ..

என்னை உலகுக்குக் காட்டி

என்னைத் தரணியிலே

தலைநிமிர்ந்து நடக்கவைத்த ..

என் உதிரத்துடன் கலந்த




ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநிலை தொலைத் தொடர்பு
# மூத்த நிறைவேற்று உதவிப் பொறியியலாளர்
# பிரம்மஸ்ரீ ச. சிவானந்த சர்மா அவர்களின்

## ஆசியுரை

"அம்பா சாம்பவி சந்த்ர மௌலி ரபலா அபர்ணா உமாபார்வதி காளி
ஹைமவதி ஸிவா த்ரிநயனீ காத்யாயனீ பைரவி
ஸாவித்ரி நவயௌவனா ஸுபகரீ ஸாம்ராஜ்ய லட்சுமி ப்ரதா
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி"



1980களில் தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் எம்முடன் தொலைத் தொடர்பு பயிற்சிப் பரிசோதகராக இணைந்து இன்று பலபடிகள் தாண்டி பிரதிப் பொதுமுகாமையாளராக கடமைபுரியும் எனது நண்பனாகிய மறவன்புலோவினைச் சேர்ந்த செல்லம் அம்பலவாணரின் 'விதை' என்ற இந்த நாடகநூலுக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

அம்பலம் என்னைத் தொடர்பு கொண்டு தனது நாடகநூலுக்கு எம்முடன் கடமைபுரிந்த சிவாசாரியாரின் ஆசியுரையே இடம்பெறவேண்டும் என்ற தனது விருப்பத்தைக் கூறியபோது நான் மறுத்த போதும், அம்பலத்தின் ஆக்கத்திற்கு ஒரு சிவாச்சாரியாரின் ஆசியுரையாக இல்லாது நண்பனின் ஆனந்தவுரை (மகிழ்வுரை)யாக வென்றாலும் தரலாம்தானே என்று அன்பு வேண்டுதலை வைத்த போது மறுக்க முடியாமல் மகிழ்வுடன் என்னுரையை வழங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 காலப்பகுதியில் ஸ்ரீலங்காரெலிகொம் எங்களை இணைத்தது. திணைக்களத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் இணைந்த காலத்தில் ஆளிப்பகுதியின் இரவு நேரப் பொறுப்பாளர்களாக நாம் இருவரும் கடமைபுரிந்த காலத்தினை எண்ணிப்பார்க்கிறேன். அது ஒரு பொற்காலம். கடமைவிடயத்தில் எதற்கும் விட்டுக்கொடுக்காது, தெரியாதவற்றை அது யாராகிலும் அவர்களிடத்தில் கேட்டு அறிந்து தெரிந்து கொள்ளும் ஆற்றலும், அனைத்து ஊழியர்களுடனும் அன்பாக பழகும் தன்மையும் அம்பலத்தை அடையாளப்படுத்தியது. என்னுடன் நெருக்கத்தை உண்டாக்கியது. அத்துடன் அவரும் புலாலுண்ணாதவராக இருந்தபடியால் எமக்குள் உணவு விடயத்திலும் ஒரு ஒற்றுமை.

பாடசாலைக் காலத்தில் முளைவிட்ட கலைத்திறன், தொழில் கிடைத்த போது வளரத்தொடங்கியதை அவரின் அன்றாட நடவடிக்கைகள் காட்டிக்கொடுத்தன. எம்முடன் பகிர்பவற்றிலிருந்து அறியக் கிடைத்தன. பிறந்த மண்ணை நேசித்தவர். இன்றும் நேசிப்பவர். மற்றவர்கள் 'குழைக்காட்டான்' எனக் கேலி செய்யும் போதும் அவர்களுடன் வாதம்புரிந்து, அதையிட்டுத்தான் பெருமைப்படுவதாகக் கூறி தன்னுடைய பெயருடன் தனது கிராமத்தின் பெயரையும் இணைத்து 'மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்' என்ற பெயருடன் தனது கலைப்பணிகளை மேற்கோண்டுவருபவர். என்றும் தனது குலதெய்வங்களின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டுள்ளவர்.

கடமையின் நிமித்தம் அம்பலம் கொழும்புக்கும் நான் திருகோணமலைக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்ல தொலைபேசியே எம்மை இணைத்துக் கொண்டது. அவர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று தொழில், சமயம், மற்றும் கலைத்துறைகளின் அகலக்கால் பதித்து படர்கொடியாகப் பரந்து வளர்ந்து சென்றமை உண்மையிலேயே பெருமைப்படத் தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்தொடர்புப் பரிசோதகராக இணைந்து பொறியியலாளர் பரீட்சையில் சித்தியெய்து பொறியியலாளராகி, எந்திரிமார் நிறுவன பட்டயப் பொறியியலாளராகி அதன்மூலம் பிரதிப் பொதுமுகாமையாளராகி, கொழும்பு பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரியாகி தனது திறமையை நிரூபித்தவர்.

தனது கலைத்துறைக்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தைக் களமாக்கி எண்பது வரையான நாடகங்களுக்கு குரல்கொடுத்து நாற்பது வரையான நாடகங்களை எழுதி தனது திறமையை வானலையிலும் பறைசாற்றியவர். இன்றும் பங்காற்றிவருகின்றவர். கடந்தவருடம் இலங்கையின் வானொலித்துறைக்கான உயர்விருதான அரசவானொலி விருதுவிழாவில் 'சிறந்த வானொலிநாடகப் பிரதியாளர்' என்ற விருது உட்பட பல விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

ஐந்து புத்தகங்களுக்குச் சொந்தக்காரன். இந்த விதை ஆறாவது. அவற்றில் நான்கு இலங்கை கலாசார அமைச்சின் சான்றிதழ் பெற்றவை. நான்காவது புத்தகமான **'விதை'** *2018* ஆம் ஆண்டு அரசவிருது விழாவில் 'சுயநாடக இலக்கியத்துறையில் சிறந்தநூலாக' சாகித்திய விருது பெற்றமை அவற்றின் தரத்திற்குச்சான்று. அதற்கு மேல் வேறு என்ன வேண்டும்.

இவற்றுடன் 'திருமுறை நெறிச்செல்வர்'. 'திருமுறைச் செம்மல்' போன்ற அணிமொழிகளுடன் ஆன்மீகப் பணிகளான பன்னிரு திருமுறை முற்றோதல், புராணபடனம், சமயச்சொற்பொழிவுகள் போன்றவற்றை சிறப்புடன் மேற்கொண்டு தான் ஒரு பல்கலைவாணர் என்பதனை நடைமுறையில் செயல்மூலமாக நிரூபித்து தன்னை அடையாளப் படுத்திய ஒரு அகில இலங்கை சமாதான நீதவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்ரீதியாக ஒருபொறியியலாளராக இருந்து கொண்டு, ஒரு கலைஞனாகவும், எழுத்தாளனாகவும், ஆன்மீகவாதியாகவும், திகழும் அம்பலவாணருக்கு இவை எம்பெருமான் திருஅருளால் கிடைத்த பேறுகளே. இதை அவரே 'அம்பலத்தாடியானுக்கு பிடித்தது. தந்துள்ளான். அவனுக்கன்றி வேறு யாருக்குச் செய்வது. கையில் வெண்ணெய் இருக்க நெய்யுக்கு அலையவேண்டியதில்லையே' என அடிக்கடி கூறுவார். அப்பேறுகளை தகுந்தமுறையில் நடைமுறைச் சாத்தியமானதாக்கி தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளார்.

எம்பெருமான் திருவருள் அம்பலத்துக்கு என்றென்றும் கிடைக்கும். துணைநிற்கும். அதுவே அம்பலத்தின் பலமுமாகும். சேவையிலிருந்து ஓய்வுபெறஉள்ள நீங்கள் ஓய்வுகாலத்தில் இத்துறைகளில் நீங்கள் நிச்சயம் பிரகாசிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனது நண்பனான மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் நிறைந்த வாழ்வு பெற்று, நோய் நொடியற்ற நிறைவான வாழ்வுவாழ்ந்து, தமிழுக்கும் சைவத்துக்கும் தொடர்ந்தும் தொண்டாற்றி சிறப்பான வாழ்வு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் கமலபாதங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருகோணமலை**

***27.10.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைநாள் தொலைத்தொடர்புப் பொறியியலாளர்

## திரு இ. நாகச்சந்திரன் அவர்களின்

# ஆசியுரை

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்" (வள்ளுவர் குறள்)



தனது ஆசானை மனதில் நிறுத்தி நன்றி சொல்லும் ஒருவராக செல்லம் அம்பலவாணர் திகழ்கின்றார் என்பதனை, எனது வீடுதேடி வந்து தனது ஆறாவது வெளியீடான 'விதை' என்ற நாடக நூலுக்கு எனது ஆசியுரையை வேண்டி நின்ற அவ்வேளையில் என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

1981ல் எமது தொலைத் தொடர்பு திணைக்களமானது யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு சில துடிப்பு மிக்க இளைஞர் யுவதிகளை பரிசோதகர்களாக நியமித்தது. அவர்களில் பெரும்பாலானோர் பாடசாலைக் கல்வியை முடித்த கையுடன் திணைக்களத்தில் சேர்ந்தமையால் கற்கவேண்டும் என்ற ஆவல் கொண்டவர்களாக, துடிப்புடன் வெள்ளை மனத்துடன் கடமையை மேற்கொள்ளும் பாங்கினையுடையவர்களாகக் காணப்பட்டனர். இன்றைய கால கட்டத்தினைப் போன்று அல்லாது அன்று வெளிவாரிக் கற்கைகளுக்கான நிறுவனங்களோ, இணைய வசதிகளோ பரந்தளவில் காணப்படாத காலகட்டம். கற்றலில் ஆர்வங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்களுக்கு அவர்களின் ஆவலைப்புரிந்து கொண்டு, கடமை நேரத்திலும் கடமைதவிர்ந்த நேரத்திலும் அவர்களின் எதிர்காலத்தையும் பதவி உயர்வுகளையும் கருத்திற் கொண்டு லண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவன பரீட்சைக்கான தயார்படுத்தலில் என்னாலான பங்களிப்பை எவ்வளவோ இடர்பாடுகளின் மத்தியில், இயன்ற வரை மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வழங்கினேன். அவர்கள் இலகுவாகப் பற்றிப் பிடிக்கக் கூடியவர்கள். பெரும்பாலோனோர் சிறப்புச் சித்திகளைப் பெற அதுவே அனைவருக்கும் தூண்டுகோலாக அமைந்தது எனக்கும் மிக மகிழ்ச்சியாக அமைந்தது. அவர்களில் ஒருவராகவும் எனது பொறுப்பிலிருந்த ஆளிப் பகுதியின் பரிசோதகராகவும் அறிமுகமானவர்தான் அம்பலவாணர். எனது ஓய்வின் பின்னரும் அவர் அதே பாதையில் தொடர்ந்து பயணித்து இலங்கை எந்திரிமார் சங்கப் பரீட்சையில் சித்தியெய்தி பொறியியலாளராக கடமைபுரிவதைக் கேள்வியுற்று பெருமையும் சந்தோசமும் அடைந்தேன்.

சகபயிலுனர்களுடன் பேசிக் கற்றுக்கொண்டதை நிலைநிறுத்தி, தெரியாததை, தெளிவில்லாததை வெளிப்படையாகவே தெரியாதெனக்கூறி அது எந்தநிலையிலுள்ளவர் என்றாலும் வெட்கப்படாது மனக் கூச்சமின்றி கேட்டறியும் பாங்கும், தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுடன் பகிரும் பாங்கும், இவரிடம் நான் அவதானித்த விசேடதன்மைகளாகும். உயர்தரத்தில் உயிரியல்பிரிவில் கற்றமையால் பொறியியல் துறையில் கற்கும் பொழுது முகம் கொடுக்கும் சவால்களை, தனது இந்த வெளிப்படையான தனித் தன்மையினால் வெற்றி கொண்டு பொறியியலாளரானவர் என்று கூறினால் மிகையாகாது. வாழ்க்கையில் கோபமற்ற ஆனால் சரியானவற்றுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்து வாதாடக்கூடிய, உயர் அதிகாரிகளை மதித்துப் பழகுகின்ற, மற்றைய ஊழியர்களைத் தரம் பாராது, பிரிக்காது மதித்து நடக்கும் மனிதத்தன்மை கொண்டவர். எதனையும் இலகுவில் பற்றிப் பிடிப்பவர்.

மேலேயுள்ள வள்ளுவர் குறளில் கூறப்பட்டுள்ளதைப் போன்று மனிதன் தன் சிற்றறிவால் காண முடியாதவற்றை இறைஅருளினால் உணரமுடியும். பகுத்தறிவானது ஓர் எல்லை வரையே செல்கின்றது. இந்த பகுத்தறிவையும் மீறி இறையருள் எம்மை முன்னோக்கி அழைத்துச் செல்கின்றது. பேரின்பம், தெய்வீக ஒளி போன்றவை மனிதனின் ஆசைகள் என்ற மேகத்தால் மூடப்பட்டு தன் ஒளியை இழந்து விடுகிடுகின்றது. இறைவழிபாட்டின் மூலம் இறையருளைப் பெற்று அதன்மூலமே நாம் தெய்வீக ஒளியைப் பெறமுடியும். இந்த உண்மையை உணர்ந்து கொண்ட அம்பலவாணர் பொறியியல் துறைக்கு மேலதிகமாக ஆன்மீக நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தியமையும் அவரின் வெற்றிக்கு ஒரு காரணமாகும் என்றே கூறவேண்டும்.

ஆன்மீக மற்றும் கலைத்துறைகளில் அவருக்கிருக்கும் ஈடுபாட்டினை எனது காலத்தில் அறிந்து கொள்ள முடியாமற் போனபொழுதும் தற்போது அதனை அறியும் பொழுது மிக மகிழ்ச்சியாகயும் பெருமையாகவும் இருக்கின்றது.

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளிற்கமைய தற்பெருமை, அகங்காரம், கோபம் போன்றவற்றை அறுத்த ஒருவன் உள்ளத்தில் இறைவன் குடிபுகுந்தால் அந்த அனுபவத்தை எம்மால் வாய்திறந்து சொல்லிவிடமுடியாது. இறைபக்தியும் இக்குணங்களும் கொண்ட அம்பலவாணருக்கும் அப்பாக்கியம் தொடர்ந்து கிடைத்து சகலதுறைகளிலும் வெற்றிகிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**நண்பன்**

**இ.நாகச்சந்திரன்**

**நல்லூர்**

**யாழ்ப்பாணம்**

***03.11.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநிலைதொலைத் தொடர்புப் பொறியியலாளர்

## முன்னைநாள் றோட்டறிக்கழகத் தலைவர்

## வானொலிக் கலைஞர்

## கலாநிதி பெல்ப்ஸ் ஜெகநாதன் அவர்களின்

# அணிந்துரை



என் நீண்ட கால நண்பனும் என்னுடன் நீண்ட காலம் ஒன்றாக தொலைத் தொடர்பு திணைக்களத்தில் இருந்து ஸ்ரீலங்கா டெலிகொம் கம்பனிவரை ஒன்றாக என்னோடு கடமை புரிந்தவரும் வானொலி நாடகத் துறையில் என்னோடு ஈடுபட்டவருமான மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அவர்களின் இந்த **'விதை'** என்ற நூலிற்கு அணிந்துரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது நட்பு *1981* ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பிராந்திய தொலைத் தொடர்பு அலுவலகத்தில் நாம் இருவரும் வேலை பார்த்த போதிலிருந்து ஆரம்பித்தது. அப்போது எனது சகோதரி ரெபேக்காவும் அதே அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். அம்பலம் அவர்களின் பகுதி தொழினுட்ப பராமரிப்பு வேலைகளைச் செய்து வந்ததனால் என்னைவிட அவரோடுதான் அதிகமாக அப்போது கருமமாற்றிக் கொண்டிருந்தார். அம்பலத்தை அவரும் மிகவும் உயர்வாகப் பேசுவதை வீட்டில் நான் கேட்டிருக்கின்றேன். அம்பலத்தின் மிகவும் சாதுவான சுபாவம் அவரோடு எல்லோரையும் இலகுவாக இணைத்துவிடும். அத்தோடு அவர் கடமைகளை மிகவும் சிரத்தையாக செய்யும் இயல்பு உள்ளவராகையால் மேலதிகாரிகளையும் அவர் பால் ஈர்த்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதிருந்து நான் அவருடன் மிகவும் நட்பாயிருந்தேன். அந்த நட்பு நாம் கொழும்புக்கு வந்த பின்பும் தொடர்ந்தது. ஏறக்குறைய 35 ஆண்டுகள் நாம் ஒன்றாக பயணித்திருக்கிறோம்.

அக்காலத்தில் வாழ்கை பலசவால்களை எமக்குமுன்னே வைத்திருந்தது. அரசஉத்தியோகம் கிடைத்தும் அக்கால வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் கொழும்பில் தவித்தது ஒருபுறமும், அக்காலத்தில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தால் தமிழராக போகுமிடம் எல்லாம் தீவிரவாதியா என சமூகத்தின் சந்தேகப்பார்வை மறு புறமும் என்று நமது வாழ்க்கைக்கே ஒரு அர்த்தத்தை தேடிக்கொண்டிருந்த வேளையிலே இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் ஒரு வானொலி நாடக எழுத்தாளராகச் சந்தர்ப்பம் கிடைத்தமை எமக்கும் இந்தநாட்டில் ஏதோ ஒன்று உள்ளது என்று ஓர் சிறு மகிழ்வைத் தந்தது.

எனது நண்பர் திரு தங்கவடிவேல் மூலமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவைக்கு நாடகப்பிரதிகள் எழுதும் வாய்ப்பு எனக்கு 1985 வாக்கில் கிட்டியது. சிறுவயது முதல் நாடகக்கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த எனக்கு அந்த அரிய வாய்ப்பை பெற்றுக்கொடுத்த திரு தங்கவடிவேல் அப்போது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் செய்திப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவ்வப்போது செய்தியும் வாசிப்பார். எனது ஓயாத தொல்லைகளினால் என்னை ஒரு நாள் அப்போதைய தமிழ் நாடகத்தயாரிப்பாளர் காலஞ்சென்ற திரு.ஜோர்ஜ் சந்திரசேகேரன் அவர்களை எனது ஒரு நாடகப்பிரதியோடு சந்திக்க ஒழுங்கு செய்தார்.

சில திருத்தங்களோடு எனது நாடகப்பிரதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அது நாடகமாக வானொலியில் ஒலிபரப்பப்பட்டபோது நான் மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்றேன். ஏனென்றால் அப்போது வானொலி நாடகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே தான் தமிழ் ரசிகர்களின் தேவையை ஒழுங்காகப் பூர்த்தி செய்த ஒரே சாதனமாகத் திகழ்ந்தது. அத்திபூத்தாற்போல் எப்போதுவது ஒரு தடவை அக்காலத்தில் இலங்கை ரூபவாஹினியில் தமிழ் நாடகம் ஒளிபரப்பப்படும். அன்றுதொட்டு எனக்கு என்நண்பர்கள் வட்டாரத்தில் பெரிய கௌரவம் கிடைத்தது. 15 நிமிட, 30 நிமிட குறுநாடகங்கள், தொடர்நாடகங்கள் மற்றும் கதம்பம் என்று எழுதி இப்படியாக நானும் ஒரு நாடகாசிரியராய் மாறினேன்.

அந்த நாட்களிலே எனது நாடகங்களை ஒழுங்காகக் கேட்கும் ரசிகர்களில் (நண்பர்களில்) ஒருவர் தான் அம்பலம். ஒவ்வொரு நாடகத்தை பற்றிய அவரது விமர்சனங்கள் எனக்கு ஊக்கத்தை மட்டுமன்றி எனது நாடகங்களை மேம்படுத்தவும் உதவியது என்றால் அது மிகையாகாது.

பேச்சுவாக்கில் அம்பலத்தின், நாடகத்தில் நடிக்க இருக்கும் ஆவலை புரிந்து கொண்ட நான் எப்படி அவருக்கு உதவலாம் என்று சிந்தித்தேன். ஏனெனில் அந்தக் காலத்தில் நினைத்த மாத்திரத்தில் நடிக்க வைக்க முடியாது. ஏறத்தாழ ஐந்து வருடத்துக்கு ஒரு முறை நடத்தப்படும் வானொலிக் கலைஞர் தேர்வில் சித்தியெய்தியிருந்தால் மட்டுமே வானொலி நாடகத்தில் பங்கெடுக்க முடியும். ஆகவே அவரை நாடக உலகுக்குள் பிரவேசிக்க வைக்க வேண்டி நான் ஒரு குறுக்கு வழியை கையாண்டேன். எனது 'அலைகடல் ஓடங்கள்' என்ற ஓர் தொடர் நாடகம் அப்போது ஒலி பரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அதில் மூன்று இளைஞர்கள் பங்கேற்கும் காட்சிகளை எழுதினேன். அந்த நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட கலைஞர்களின் பட்டியலில் இரண்டு இளைஞர்கள் மட்டுமே இருந்தார்கள். இதைப்பார்த்த காலஞ்சென்ற தயாரிப்பாளர்கள் ஜோர்ஜ் சந்திரசேகரன் அவர்கள் எப்படி நான் எமது வளங்களுக்கு மேலதிகமாக எழுத முடியும் என்று என்னைச் செல்லமாகக் கடிந்து கொண்டார். அந்தக்காலத்தில் பட்டியலிடப்பட்ட கலைஞர்கள் சுகவீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காரணம் நிமித்தம் கடைசி நேரத்தில் வராத சந்தர்ப்பங்களில் பட்டியலில் இடம் பெறாதவர்களை உள்வாங்கி நாடகத்தை தயாரிப்பதுண்டு. நான் தயங்கித்தயங்கி தயாரிப்பாளரிடம் என் நண்பன் ஒருவர் நடிக்கக் கூடிய ஆர்வம் உள்ளவர் என்றும் அனுமதி தந்தால் நான் அவரை அழைத்து வரமுடியும் என்றும் சொன்னேன். மேலும் இரண்டு பேருக்கு அந்த உப கதையை மட்டுப்படுத்தினால் கதையின் சுவாரசியம் கெட்டுவிடும் என்றும் நாசூக்காக எடுத்துரைத்தேன். இப்படித்தான் அம்பலத்தை இலங்கை வானொலியில் உள்ளே கொண்டு சென்றேன்.

அம்பலத்துக்கு அது ஒரு சுவீப் அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் முதலாவது மிகச்சிறந்த, கட்டுப்பாடுகள் கொண்ட தயாரிப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரனின் நாடகத்தில் பங்கேற்றமை. மற்றையது அது ஒரு தொடர் நாடகம் என்றபடியால் அதில் பல அங்கங்களிலும் பங்குகொள்ள அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்தத் தொடர் நாடகம் ஒரு விவசாய குடும்பத்தை மையமாக வைத்து எழுதப்பட்டபடியால் அம்பலத்தின் இயல்பான கிராமிய பேச்சு அந்த நாடகத்தில் மிகவும் சோபித்தது. அம்பலத்தின் திறமையினால் பின்பு சிறுவர் நாடகங்கள் எழுத வாய்ப்பு கிட்டி அதன் பின் அங்கீகரிக்கப்பட்ட நடிகராகும் வாய்ப்பும் கிட்டி, நாடக எழுத்தாளர் ஆகி இன்று ஒரு கலை விருட்சம் ஆகி இருக்கிறார். நான் 1993 ஆம் ஆண்டு தொழில் நிமித்தமாக மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு சென்றதனால் எனது கலை பங்களிப்பு அந்த நிலைக்கு மேல் அதிகம் வளரவில்லை என்று சொல்லலாம்.

இன்று தனது ஆறாவது நூலை வெளியிடும் அம்பலம் ஒரு பயிலுனர் பரிசோதகர் ஆக ஆரம்பித்து இன்று பிரதிப் பொது முகாமையாளராக ஸ்ரீ லங்கா டெலிகொம்மில் தொழில் ரீதியாகவும் உயர்ந்த நிலையை அடைந்து இருக்கின்றார். அவரது கடின உழைப்பும் விடாமுயற்சியும்தான் அவரை தொழில் ரீதியாகவும் நாடகக்கலைஞர் ஆகவும் இந்த நிலைக்கு உயர்த்தியது என்று சொன்னால் அது மிகை ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியில் எமக்கு கிடைத்த சந்தர்ப்பம் எமது வாழ்வில் மிகவும் முக்கியமானது. ஏனெனில் புகழ்பெற்ற பல முன்னணிக் கலைஞர்களோடு சேர்ந்து பணியாற்ற எமக்கு சந்தர்ப்பம் கிட்டியது. வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை, கே.எஸ்.பாலச்சந்திரன், வேதநாயகம், கமலினி செல்வராஜன், ஏ.எம்.சி.ஜெயஜோதி, அருணா செல்லத்துரை, ஜெயகிருஷ்ணா, பகவான், எஸ்.கணேஸ்வரன், ஆர். யோகராஜன், ஜெயரஞ்சன் யோகராஜா, லூக்கஸ், சீதாராமன் என்று புகழ் பெற்ற பெரும்பாலான கலைஞர்களோடும் பணியாற்றினோம்.

இப்போது இந்த நூலுக்கு வருவோம். முதலாவது நாடகமான வீரம், 'மாயாபஜார்' என்ற இதிகாசக்கதையை அடிப்படையை வைத்து பின்னப்பட்ட புகழ் பெற்ற திரைப்படக்கதை போல இருக்கின்றது. ஆனால் இதிகாசத்தில் வரும் ஒரு நிகழ்வை நாடகமாக்கும்போது ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் உயிரளித்து தனது கற்பனை மூலம் அந்த நிகழ்வை நம் கண்ணின் முன்பு நிறுத்தவேண்டிய பெரும் பொறுப்பை நாடகாசிரியர் எடுக்கிறார். நாடகாசிரியரின் மனக்கண்ணில் தெரிகின்ற பாத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் அவர் உயிரளிக்கின்றார். சாதாரண நாடகங்களில் வரும் பாத்திரங்கள் அவரே உருவாக்குவதனால் அவர் எப்படி வேண்டுமானாலும் எழுத முடியும். ஆனால் இதிகாசப் பாத்திரங்களோ சரித்திர பாத்திரங்களோ அப்படி அல்ல. அந்த பாத்திரங்களை ஏற்கனேவே பல நூல்களிலே விபரித்திருக்கிறார்கள். எனவே மிகவும் கவனமாக அந்த பாத்திரங்களை கையாள வேண்டிய கடப்பாடு அவருக்கு உண்டு. உதாரணமாக வீமனின் மகனான கடோற்கசனை மாயா பஜார் படத்தில் பார்க்கும் வரை எமக்கு கடோற்கசன் எப்படி இருந்திருப்பான் என்பதை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. எஸ்.வி.ரங்காராவின் தோற்றமும் நடிப்பும் அந்த பாத்திரத்துக்கு உயிர்கொடுத்திருந்தாலும் அந்தப்பெருமை அந்தக் திரைக்கதை எழுதியவர்களுக்கே பெரிய அளவில் உரித்தாகும் என்று நான் நினைக்கிறேன். அப்படி அவர்கள் அதை எழுதாவிட்டால் எப்படி ரங்கராவினால் அதற்கு உயிர் அளித்திருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வீரம்'** என்ற நாடகம் எப்படி அருச்சுனனை ஓர் நிகரற்ற வீரனாக உருவாக்குவதற்காக அவனை விஞ்சிய வீரர்களான கர்ணனும் ஏகலைவனும் தாழ்த்தப்பட்டார்கள் என்பதை காட்டுகிறது. சமுதாய ஏற்றத்தாழ்வுகளை தமது நோக்கங்களை நிறைவேற்ற எப்படி அந்தக் காலகட்டத்திலே உபயோகப்படுத்தினார்கள் என்பதை ஆசிரியர் அழகாக விளக்குகிறார். செந்தமிழிலே எழுதப்பட்ட உரையாடல்கள் மிக அழகாக இருக்கின்றன. சொல்லவந்த கருத்து மிக அழகாக வெளிப்படுகிறது. நாடகங்கள் என்பது வெறுமனே பொழுது போக்கு அம்சங்களாக இருக்காமல் அதைப்பார்ப்போருக்கு கேட்போருக்கும் ஏதாவது பாடங்களை புகட்டக்கூடிய ஊடகங்களாக இருப்பது நல்லது.

இரண்டாவது நாடகம் **'விதை'** முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற கருத்தை ஆழமாக சித்தரிக்கிறது. வேலைக்காரப் பெண்ணை துன்புறுத்தும் வீட்டுக்காரியின் கொடுமையும் அந்தக்கொடுமையிலிருந்து அந்த அப்பாவிப்பெண்ணை காப்பாற்ற முயலும் வீட்டுக்காரரின் இயலாமையையும் ஆசிரியர் அற்புதமாக வசனங்கள் மூலம் கொண்டு வருகிறார். சமுதாயத்தில் தீய காரியங்களை செய்பவர்கள் தாம் மாட்டப்படும் தருணங்கள் வரும் பொழுது இறைவனுக்கே லஞ்சம் கொடுப்பது போல பூசைகளுக்குப் பணம் செலவிட முன்வருவதை இந்த நாடகத்தின் 'வைரவா.. என்ரை கண் கண்ட தெய்வமே... என்னை இந்தச்சிக்கலுக்கை மாட்டிப்போடாதை... ஆடிச்செவ்வாய்க்கு வடை மாலை போடுவன். என்ற வசனங்கள் அற்புதமாகக் காட்டுகின்றது.

இப்படியான சமுதாய சீர்திருத்தங்களை அடிப்படையாக வைத்து அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி போன்றோர் எழுதிய திரைக்கதை வசனங்கள் சமுதாயத்தைச் சீர் திருத்தும் கருவிகளாய் கருதப்பட்டன. இப்படியான திரைப்படங்கள் இன்று மிகவும் அரிதாகவே வெளிவருகின்றன. இப்படியான நாடகங்கள் கேட்போரின் வாழ்வில் நிச்சயம் ஒரு பாதிப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே இப்படியான சமுதாய சீர்திருத்த நாடகங்களும் கதைகளும் எழுதப்பட்டு அதன் மூலம் சமுதாயத்தில் வேரூன்றிக் கிடக்கின்ற சீதனம், சாதி, மூடநம்பிக்கைகள் போன்றவற்றை பற்றி எழுத்தாளர்கள் எழுதினால் நமது சமுதாயத்தை ஓர் உயர்ந்த நிலைக்கு மாற்ற முடியும்.

மூன்றாவது நாடகமான **"விரல்"** சகுனி என்ற மகாபாரத கதா பாத்திரத்தைப் பற்றிய பொதுவான எண்ணக்கருத்தை மாற்றும் ஒன்றாகும். சகுனி என்ற பெயர் பேச்சு வழக்கில் கூட சூழ்ச்சி வேலைகளில் ஈடுபடுபவர்களை குறிக்க இன்றும் உபயோகிக்கப் படுகின்றது. இந்த நாடகத்தில் சகுனியை மகாபாரத கதாபாத்திரங்கள் எல்லோரிலும் விட சிறந்தவன் என்று காட்டப்படுகிறது. சகுனியின் குடும்பத்துக்கு பீஷ்மர் செய்த மிகப்பெரிய தீமைக்கு பழிவாங்குவதற்காக அவன் பாண்டவர்களை வேண்டுமென்றே தோற்கடித்து அதன் மூலமாக தனது குடும்பத்தை அநியாயமாக சிதைத்த கௌரவர்களை பழி வாங்குவதாக சித்தரிக்கப் படுகிறது. இந்த நாடகத்தில் கூட ஒரு பெரிய படிப்பினை காணப்படுகிறது. நாம் நமது பலத்தை பயன்படுத்தி பலமில்லாதவர்களை துன்புறுத்தினால் ஒரு நாள் அவர்கள் பலம் பெற்று எம்மை பழி வாங்க முடியும் என்பதே அது. செந்தமிழ் நடையில் நாடகம் மிக அழகாக விறுவிறுப்போடு புனையப்பட்டிருக்கின்றது.

நான்காவது நாடகமான **"வாக்குறுதி"** சமுதாயத்தில் பெரிய அந்தஸ்தில் இருக்கும் மனிதர்கள் எப்படி வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு தமது நலன்களை காக்க மற்றவர்களை பலி கொடுக்கவும் தயங்குவதில்லை என்பதை காட்டுகின்றது. ஏமாற்ற நினைப்பவர்கள் இறுதியில் ஏமாற்றத்தை அடைவர் என்பதை இந்த நாடகம் காட்டுகின்றது. ஆனாலும் ஒரு கொலைக் குற்றவாளிக்கு ஆசிரியர் இந்த நாடகத்தில் வழங்கிய தண்டனை போதாது என்பது எனது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நாடகமான **"வடிகால்கள்"** கல்வி சம்பந்தமான தந்தையினதும் மகனினதும் போராட்டத்தை வெளிப்படுத்துகிறது. படிப்பை தவிர மகன் எந்த பாடசாலை வெளிச் செயல்முறைகளிலும் ஈடுபடக்கூடாது என்ற தந்தையின் வாதமும் என்னால் அவற்றிலும் ஈடுபட்டு அதிக புள்ளிகளை படிப்பிலும் எடுக்க முடியும் என்ற மகனின் வாதமும் அழகாக நாடகத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இறுதியில் மகனின் வாதமே வெற்றி பெறுவதாக ஆசிரியர் முடிக்கிறார். உயர் தரப் பரீட்சைகளுக்கு இந்த வாதம் நடைமுறையில் சாத்தியமாவது சற்று கடினமாயினும் கீழ்த்தர வகுப்புகளிலே மாணவர்கள் ஏனைய செயல்முறைகளில் ஈடுபடாவிட்டால் அவர்கள் படித்து பட்டம் பெற்றாலும் தலைமை தாங்கும் பண்பு போன்றவற்றில் பின்னடைவுடையவர்களாகவே உருவாகுவார்கள். எனவே தாய் தந்தையர் ஓர் சமநிலையைக் கையாள முன்வரவேண்டும்.

இறுதியாக **"விதை"** என்ற இப்புத்தகத்திலே இடம் பெறும் எல்லா நாடகங்களையும் நோக்கும்போது இந் நாடகத்தொகுப்பு சமுதாயத்தில் சில நல்ல விதைகளை விதைக்க முயல்கிறது என்று சொல்லலாம். இலங்கை நாடக நூல்களில் இது ஓர் முக்கிய இடத்தை பிடிக்கும் என்பது என் ஆணித்தரமான கருத்து.

எனது நண்பன் அம்பலம் இன்னும் பல நாடக நூல்களை வெளியிட்டு உலகத் தமிழ் நாடகத் துறை வளர தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**சொய்சாபுர**

**மொரட்டுவை**

***12.11.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநிலை நிறைவேற்று தொலைத் தொடர்புப் பொறியியலாளர் திருமதி சுந்தரராணி கந்தசாமி அவர்களின்

# வாழ்த்துரை



பொன்னிலும் பொருளிலும் நிறைவு காணாமல் தவிக்கும் மனித உள்ளத்தை ஊனில் புகுந்து உணர்வைத் தொட்டு எழுப்பும் நாடகங்கள் புன்னகை பூக்க வைக்கின்றன. புளகாங்கிதமடைய வைக்கின்றன. அத்தகைய நாடகங்களை எழுதும் திறமை பெற்றவர்களைப் போற்றுவதில் தவறில்லைத் தானே. சுவையை நுகரும் நுண்ணுணர்வு கொண்டவையாக, நல்ல சிந்தனைகளை விதைப்பனவாக உருவாக்கப்படுகின்ற இந்த நாடகங்களை உலகத்திற்கு செவிப்புலன்வழியே பறைசாற்றும் விதமாக அமைவனவே வானொலி நாடகங்கள் ஆகும். இந்த வரிசையில், எனது உற்ற நண்பனும், உடன் பிறவாச் சகோதரனும் 'அம்பலம்' என்று சகநண்பர்களால் நட்புடன் அழைக்கப்படும் எங்கள் 'எண்பதுகளின் ஒருவனான' 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணரின் சிந்தனைகளை விதைத்து முளைவிட்ட **'விதை'** என்ற இந்த நாடகநூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மறவன்புலோவைப் பிறப்பிடமாகக் கொண்டு 1980ஆம் ஆண்டில் தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் அறிமுகமாகிய எமது நட்பு, நட்புக்கு வரைவிலக்கணத்தை வழங்கக் கூடிய ஒருபரிணாமத்தில் அதற்கும் மேலும் பரந்து விரிந்து உறவு என்கின்றவகையில் இன்றுவரை நாம் ஒரு குடும்பமாகவே இருப்பது எங்களின் 'எண்பதுகளின்' ஒரு விசேட தன்மை என்றால் எவரும் மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் மொழித்திறனும், கலையறிவுடனான கற்பனைத்திறனும், தொழிற்திறனும், மொழிமூலம் சைவத்தின் வழிநின்று சமயப் பணித்திறனும் ஒருங்கேயமைந்து பன்முகத்தன்மை கொண்ட அம்பலம் எங்களில் ஒருவனாக இருப்பதையிட்டு நாங்களும் பெருமைப்படுகின்றோம்.

1980 ஆம் ஆண்டுகளிலே தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் தொலைத்தொடர்புப் பரிசோதகராக எம்முடன் இணைந்து 90களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சேவையிலிருந்து வெறிதாக்கப்பட்டார். மீள உள்வாங்கலுக்காகக் காத்திருந்த இடைக் காலகட்டத்திற்தான் இலைமறைகாயாக இருந்த இவரின் பலவிதமான ஆற்றல்களும் வெளிப்படத் தொடங்கின. அதன் விளைவாக இலங்கை எந்திரிமார் நிறுவனத்தில் பட்டயப் பொறியியலாளராக உயர்ந்து, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டதாரியானார். இவர் தன் தேர்ச்சியால் தொலைத்தொடர்பு பயிற்சி நிலையத்தில் மும்மொழிகளிலும் வளவாளராகக் கடமையாற்றியது மட்டுமல்லாது, தாம்பெற்ற அறிவினை சகநண்பர்களுக்கு எடுத்துரைப்பதிலும், பயிற்றுவிப்பதிலும் திறமை மிக்கவர். தான் உயர்ந்தது மட்டுமல்லாது சக நண்பர்களின் பதவி உயர்வுகளுக்கும் தகுந்த அறிவுரை வழங்குவதில் முன்னிற்பவர். 1980களில் புகுந்த எமது குழாமில் இன்று தனக்கென ஒரு தனியிடம் பிடித்து அதியுயர் (A2) பதவி வகிக்கும் ஒரேயொரு தமிழ்நண்பர் அம்பலமே என்பதில் பெருமிதமடைகின்றேன்.

'மக்கள்தாமே ஆறறிவுயிரே' என்ற தொல்காப்பிய அடிகளுக்கமைய பகுத்தறிவும் மெய்யறிவும் ஒருங்கே இணையப்பெற்ற 'அம்பலம்' மதிநுட்பம் மிக்கவர். தேர்ந்தறிந்த கல்வியாளர். தீந்தமிழ்பாயும் நாநலம் வாய்க்கப் பெற்றவர். இவை அவருக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட கொடைகள் என்றே கூறவேண்டும். அதனால்தான் தொலைத்தொடர்பு பணிகளோடு மட்டுமல்லாது தன்னை ஒரு வானொலி கலைஞனாகவும் (நடிகன் மற்றும் எழுத்தாளன்) அடையாளப் படுத்தியவர். மரபுவழி நாடகங்களிலே அதிக ஆர்வம் கொண்ட இவர் ஈழத்தின் நாடக வளர்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினை நன்கறிந்து அதன் வழியில் பயணிப்பவர். நாடகத்தில் பல பரிமாணங்களை அறிந்து அதன்வழி தன்னைப் புடம்போட்டுக் கொண்டவர். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பொறியியல்துறையுடன் சமாந்தரமாக நாடகத்துறையிலும் தனது முத்திரையைப் பதித்தவர். பல்வேறு விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர் 2018ஆம் ஆண்டு அரசவானொலி விழாவில் பெற்ற 'சிறந்த நாடகப் பிரதியாக்கத்திற்கான விருது' மற்றும் 2019ஆம் ஆண்டு அரசஇலக்கியவிருது விழாவில் பெற்ற 'சிறந்த நாடக இலக்கியத்திற்கான விருது' போன்ற பெற்றுக் கொண்ட அதியுயர் விருதுகளே அவரது திறமைக்குச்சான்று. தான் எழுதிய நாடகங்கள் காலத்தால் கரைந்து விடக் கூடாது என்ற எண்ணத்தின் பாதையில் ஆறாவது நூலாக மலர்ந்திருக்கும் **'விதை'** யைத் தன்னை விருட்சமாக்கிய ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்குச் சமர்ப்பணமாக்கி நண்பர்களின் கருத்துக்களையும் பகிர்வது மகிழ்வைத் தருகின்றது.

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இவையே இவரின் வீரிய விதைகள் ஆகும். சமய சாஸ்திரங்களை ஆலயங்களில் ஓதி ஆன்ம ஈடேற்றத்துக்கும், சமயத்தொண்டாகவும் தொண்டாற்றிவரும் அம்பலம் 'திருமுறைநெறிச்செல்வர்' 'திருமுறைச்செம்மல்' போன்றவற்றிற்குச் சொந்தக் காரர் ஆவர்.

கடமையில் தவறாது, சமயசாஸ்திரங்களைத் தவறாது கைக்கொண்டு வாழ்வாங்கு வாழும் அம்பலத்தின் புனிதப்பணி ஒரு கலையூற்றாக வளம்படுத்த எல்லாம் வல்ல அம்பலத்தான் திருவடி வேண்டி வாழ்த்துகின்றேன்.

'கலை இன்பமே நில இன்பம்
வளர்க நின் கலைத் தொண்டு'

**பம்பலப்பிட்டி தொடர்மாடி**

**கொழும்பு *3***

***16.10.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை ..

## விதையை விதைக்க பின்புலமாயமைந்த வாழ்வின் முப்பத்தொன்பது வருட கதை....



வானொலியில் 90 களில் இருந்து தொடர்ந்து நாடகங்களை எழுதியும் நடித்தும் வரும் அதேவேளை, எழுதிய நாடகங்களை, இயலுமான சூழ்நிலை உள்ளபோது நூலுருவில் வெளியிடுதல் என்ற கருவுடன் வெளியிடும் எனது ஆறாவது நூலான **'விதை'** மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மில் 39 வருட காலம் சேவை செய்து ஓய்வுபெறும் இக்கட்டத்தில், ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு சமர்ப்பணமாகும் இந்த **'விதை'**யில் என்னுரையாக எனது கலைப்பயணத்திலிருந்து பிரிக்க முடியாத ரெலிகொம் வாழ்க்கையை என்னுரை மூலம் பகிர்ந்து கொள்வதில் தவறில்லை என எண்ணித் தொடர்கிறேன்.

27.10.1980 அன்று எனது 39 வருட வாழ்க்கைக்கு அனுமதி கிடைத்தநாள் அன்று எனது பிறந்தநாளும் கூட. ஆம் அன்று தான் 03.11.1980 அன்று கொழும்பு தபால் தொலைத் தொடர்புத் தலைமையகத்தில் தொலைத் தொடர்பு பயிற்சிப் பரிசோதகர் (IIT) ஆக கடமையை ஏற்கும்படி நியமனக் கடிதம் கிடைத்த நாள்.

03.11.1980 கொழும்பிலிருந்த தம்பியுடன் சென்று தலைமையகத்தில் கடமையில் இணைந்தேன். 01.01.1981 வரை கொழும்பில்.. பின் யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்திற்கு மாற்றம். அதேவேளை 17.01.1981 இலிருந்து உதவி வைத்திய பயிற்சியாளராக கைதடி மருத்துவபீடத்தில் இணைவதற்கான கடிதமும் வந்தது. ஒருபுறம் தொலைத் தொடர்பு பயிற்சிப் பரிசோதகர் (IIT) மறுபுறம் உதவி வைத்தியர் பயிற்சி (AMP), இரண்டில் எது என்ற நிலை. இறுதியில் வீட்டுப் பொருளாதார நிலையும் சோதிடமும் வென்றது. ஆம் இன்றுவரை அது பொய்க்கவில்லை. யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் தபால் தொடர்பு பயிற்சிப் பரிசோதகர் (IIT) ஆகத் தொடர்ந்தேன்.

எனது பகுதி மேலதிகாரியின் வழிகாட்டலில் City and Guilds கற்றலும் ஆரம்பமாகியது. பரீட்சையில் பெற்ற சித்திகள் வெற்றிப்படிகளாக வழிகாட்டியவரையும் என்னையும் ஊக்குவித்தது. தொடர்ந்து மொரட்டுவ பயிற்சி நிலையத்தில் பயிற்சி. தபால் தொலைத்தொடர்பு பரிசோதகர் (IPT) ஆனேன்.

எனக்கு தபாலகத்துடன் இணைந்திருந்த யாழ் நிலையத்தில் ஆளிப்பகுதியில் கடமை. பரீட்சைகளுக்கு ஆயத்தப்படுத்துவதனால் இரவுக்கடமையைத் தேர்ந்தெடுத்தேன். பன்னிரண்டு கிலோமீற்றர் துவிச்சக்கர வண்டிப் பயணம். நாங்கள் கமக்காரராகிய படியால் ஊரில் பகல் கமக்காரன். இரவில் வேலை. ஊரில் ‘அம்பலம் தபாற்கந்தோரில் காவலாளி’ என்ற முடிவு. ஜீரணித்துக் கொண்டேன். அப்பொழுது யாழ்ப்பாணம் கொழும்பு தொலைபேசி அழைப்பு எடுப்பது என்றால் பதிவு செய்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டும். எமது ஊரில் ஒரு மரணவீடு. கொழும்புக்கு அவசரமாக அழைப்பு எடுக்க வேண்டும். வந்தார்கள். கண்டார்கள். அழைப்பை எடுத்துக் கொடுத்தேன் கதைத்தார்கள். அன்றுதான் நான் எமது கிராமத்திற்கு தபால் தொலைத் தொடர்பு பரிசோதகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளிப்பகுதியிலிருந்து பராமரிப்புப் பகுதிக்கு மாற்றம். வைத்தியசாலை, செயலகம் உள்ளக தொலைபேசி பராமரிப்பு உட்பட யாழ் கிழக்குப் பிராந்தியம். மகிழ்ச்சியான காலம். ஊரில் வாசிகசாலை, நாடகமன்ற, விளையாட்டுக்கழக கோவில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நல்ல பெயர் எடுத்த காலப் பகுதி.. நண்பர்கள் வட்டம்.. ஊராரின் செல்லப்பிள்ளை. இன்றைய கலையுலக வாழ்க்கை கருக்கட்டிய காலம்.

City and Guilds முடிந்து. CEI முதலாம் பகுதியும் சித்தி. இறுதிப் பகுதி கொழும்பில் செய்வது சுலபம் என்றார்கள். காகம் இருக்கப் பனம்பழம் வீழ்ந்தது போல யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 1990 ஜனவரியிலிருந்து இடமாற்றம். ஒரு புறம் மகிழ்ச்சியான நண்பர்கள் வட்டம், வாசிகசாலை, நாடகமன்ற, விளையாட்டுக்கழக, கோவில் போன்ற சமூக, சமய நடவடிக்கைகளை விட்டுச் செல்லுகின்றேனே என்று கவலை. கலையுலக வாழ்வு கருவிலேயே கருகி விடுமோ என கலங்கினேன். மறுபுறம் பொறியியலாளராக வேண்டுமென்ற அவா. கொழும்பு சென்றேன்.

1990 யூன் யாழ்ப்பாணத்தில் அண்ணாவின் புதுவீடு கொண்டாடினேன். உள்நாட்டு யுத்தம் சூடு பிடித்தது. கொழும்பு திரும்ப முடியவில்லை. கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டதாக கடிதம் கிடைத்தது. என்ன செய்வது. துவிச்சக்கர வண்டியில் வவனியாவரை பயணித்து கொழும்பை வந்தடைந்து அலுவலகம் சென்றால் கடமைக்கு மீள உள்வாங்க காலம் எடுக்கும் காத்திருக்க வேண்டும் என்ற பதில். தொழிற்சங்கத்துடன் கதைத்தேன். அவர்கள் ஒருமாதிரிப் பார்த்தார்கள். என்ன செய்வது தலைவிதி என எண்ணி அம்பலத்தாடியான் மீது பழியைப் போட்டுவிட்டு தம்பியின் உழைப்பில் உண்டு வானொலியே தஞ்சமென்று அறையில் கிடந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பம் தான் என்னை ஒரு வானொலிநாடக எழுத்தாளனாக, கலைஞனாக உருவாக வழிசமைத்துக் கொடுத்து எனது கலை உலக வாழ்விற்கு கண்திறந்த காலம்.

சொந்த அலைச்சலினால் மீளஉள்வாங்கல் சரிவந்தது. ஆனால் முன்னுரிமைப் பட்டியலில் (seniority list) இறுதியாக அதாவது புதிதாக இணைந்த நிலைக்குத் தள்ளப்பட்டேன். பொறியியலாளராகியே தீருவது என்ற எண்ணம் மேலும் வன்மம் கொண்டது. CEI இறுதிப் பகுதியை தொடர இலங்கை எந்திரிமார் நிறுவனம் அனுமதி தந்தது. தொடர்ந்தேன். குழுக்கற்றலுக்காக கொழும்பில் கிடைக்காத நிழல் அம்பலாந்தோட்டையில் கிடைத்தது. அவர்களை என்றும் என் வாழ்வில் மறக்கமுடியாது. குழுமுயற்சி வெற்றியைத் தேடித்தந்தது.

பொறியியலாளர் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்பு திருமணம். எனக்குப்பிறக்கும் குழந்தையின் பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் தந்தையின் தொழில் 'பொறியியலாளர்' என்று இருக்க வேண்டுமென்ற எனது ஒரேநோக்கம் நிறைவேறியது.

பொறியியலாளராக முதல் நியமனத்திலேயே கழுத்தறுப்பும். தொழிற்சங்கத் தலையீடும். மிகப் பிரபல்யமான இடத்தில் பிராந்தியப் பொறியியலாளராக காலையில் நியமனம்.. மாலையில் இடமாற்றம். சிறிது காலம் தொங்கு நிலைப்பதவி. களஞ்சிய நடைமுறைகளை கணனிமயமாக்குதலுக்கு கால்கோளிட்ட அணியின் பொறியியலாளர்.

திடீரென, நிருவாகப் பிரச்சனையில் சிக்குண்டிருந்த நிருவாகத் தலைநகருக்கு மாற்றம். நம்பவேயில்லை. நல்ல அனுபவத்தைத் தந்த நிலையம். தொழினுட்பம், நிருவாக நடைமுறைகள், மனிதவள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம், மனிதத்தன்மை, மொழி, அனைத்தையும் கற்றுத்தந்த இடம். ஊழியர்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என எடுத்துக்காட்டாக என்வாழ்வில் கூறக்கூடிய சூழல். கற்ற அனுபவத்திற்கு மேலதிகமாக ஜப்பானுக்கான ஒன்பது மாத புலமைப்பரிசில். ஆனால் திரும்பி வர மீண்டும் கழுத்தறுப்பு. இடம் காலி.

மீண்டும் தொங்கல் நிலை. மீண்டும் அதே நிலை. வெளிக்கள நிலையக் கணனி மயமாக்கலுக்கு (OPMC) அத்திவாரமிட்டு நடைமுறைப்படுத்திய அணியில் நானும் ஒருவன். அத்துடன் 121 பழுதுகள்முறைப்பாடு செய்யும் பகுதிக்கான நடைமுறைப்படுத்தலும் கணனி மயப்படுத்தலுக்குமான பொறியியலாளர். இதன்மூலம் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் தடம்பதித்த பாக்கியம்.

இதே வேளை மேலிடத்திலிருந்து வடமாகாணத் தலைவர் பதவியை பொறுப்பேற்கும்படி வேண்டுகோள். பிள்ளைகளின் கல்வியினால் பின்வாங்க 121 பழுதுகள் முறைப்பாடு செய்யும் பகுதியின் மேம்படுத்தலான அழைப்பு மையத்தின் தொழினுட்பப் பகுதிக்கான தலைவர் என்ற நியமனம். என்னை ஸ்ரீலங்கா ரெலிகொம்மில் அடையாளப்படுத்திய காலம். பயிற்சி நிலையத்திலும் என்னை வளவாளராக அறிமுகம் செய்த காலம். இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, நியூசீலந்து, சீனா, ஹொங்ஹொங் போன்ற நாடுகளில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வழிசமைத்த காலம். மொழிமாற்றுனராகவும் அடையாளப் படுத்திய காலம். மகிழ்ச்சியான காலம். பொற்காலம். இங்கு ஏற்றங்கள் இறக்கங்கள், கழுத்தறுப்புகள். போன்றவற்றுக்குக் குறைவில்லை. இலங்கை எந்திரிமார் சங்கத்தில் பட்டயப் பொறியியலாளராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புப் பல்கலைக் கழக முதுமாணிப் பட்டதாரியாகவும் என்னை மெருகுபடுத்திக் கொண்டகாலம்.

உண்மையில் கழுத்தறுப்புக்கள் என்னை தனித்துவமுள்ளவனாக மிளரச்செய்தன என்றே கூறவேண்டும். முப்பத்தொன்பது வருட சேவை A2 தரத்தில் ஓய்வு. எமது 80 குழுவில் A2 தரம் கிடைத்த ஒருசிலரில் நானும் ஒருவன். ஒரே தமிழ் பேசுபவன். இதைவிடவேறு என்ன வேண்டும். நான் எடுத்துக்கொண்ட, பொறுப்பேற்றுக் கொண்ட, எந்தப் பகுதியை என்றாலும் எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாது நடந்து எனது பிள்ளைபோலப் பாதுகாத்துக் கொள்ளும் பற்றுறுதியைக் கொண்டவன். கிடைக்கும் வசதிகளுக்கு, எடுக்கும் சம்பளத்துக்குத் துரோகம் செய்யாது கடவுளுக்குக் கணக்குக் காட்டவேண்டும் என்ற கொள்கையுடனேயே பயணிப்பவன். எதையும் முடியாது என்று சொல்லுவதற்கு பின் வாங்குபவன். இன்னொருவரால் முடியும் என்றால் ஏன் என்னால் இயலாது என்று எண்ணுபவன். ஆம் அதை செயலுருவில் காட்டினேன். அதனால்தான் இன்று நீங்கள் அறிந்த அம்பலமாக உள்ளேன்.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மும் எனக்கு அனைத்துச் சிறப்புக்களையும் தந்தது. தனிப்பட்ட வாழ்விலும் சிறப்புக்களைப் பெறுவதற்கு காரணமாயமைந்தது. கலைத்துறை, வானொலித்துறை, சமயத்துறை, மொழிபெயர்ப்புத் துறை போன்றவற்றில் மிளிரச் செய்தது. சகலகலாவல்லவனாக என்னை அடையாளப்படுத்தியது. பிறநிறுவனங்களுக்கும் என்னை அடையாளப்படுத்தி அறிவுசார் பகிர்தலில் பங்கேற்க வழிகோலித்தந்தது.

புறங்கூறாது அனைத்தையும் நெற்றிக்குநேரே கூறுவதால் எனக்கு நண்பர்கள் என்று அலுவலகத்தில் சரி வாழ்க்கையில் சரி எவருமே இல்லையென்றே கூறலாம். ஆனால் ஆண்டவன் என்றும் என்னுடனேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் கொடுத்த கொடையை ஆவணப்படுத்துதல் வேண்டும் என்பது எனது குறிக்கோள். அதேவேளை ஒவ்வொரு வெளியீட்டிலும் என்னை ஏதோ ஒருவகையில் செதுக்கியவர்களுக்குச் சமர்ப்பணமாக்க வேண்டுமென்பது எனது அவா. அதன்படி **பஞ்சாமிர்தத்தை** பெற்றவரும் உடன் பிறந்தோருக்கும், **சட்டத்தின் திறப்புவிழாவை** மனைவி மைந்தர்களுக்கும், **பஞ்சாயுதத்தினை** உருவாக்கிய ஆசான்களுக்கும், **மனவைரத்தை** என்னை ம(ரு)றுமகனாக ஏற்று மனைவாழ்வை மலர்ப்பஞ்சணையாக வாழவழிகாட்டிய மாமா மாமிக்கும், **வண்டல் மண்ணினை** என் பிஞ்சுப்பாதங்களைத் தன் நெஞ்சில் சுமந்த மறவன்புலோ மண்ணிற்கும் சமர்ப்பித்த நான், இந்த ஆறாவது வெளியீடாக **விதை**யை என்னை மனிதனாக உலவவிட்டு இரண்டாவது வீடாக அமைந்து முப்பத்தொன்பது வருடம் நிழல்தந்த ஸ்ரீலங்காரெலிகொம்மிற்கு சமர்ப்பணமாக்குவதில் மகிழ்வடைகின்றேன். அதனால்தான் என்னுரையில் நூல் தொடர்பான குறிப்புக்களை விட்டு ஸ்ரீலங்கா ரெலிகொம் வாழ்வைப் பகிரலாமென எண்ணினேன்.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு சமர்ப்பணமாக்கும் இந்த நூலிற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் குடும்ப அங்கத்தினரிடமேயே செய்திகள் பெறவேண்டு என்பது அவா. ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாண அலுவலகத்தில் என்னுடன் கடமையாற்றிய சிவாச்சாரியாரிடமிருந்து ஆசியுரை, யாழ்ப்பாணத்தில் எனது முதலாவது மேலதிகாரியும் என்னைப் பொறியியலாளராக ஆக்குவதில் வழிகாட்டியாக பெரும்பங்கு வகித்தவரிடமிருந்து வாழ்த்துரை, முன்னாள் பொறியியலாளரும் எழுத்தாளரும், வானொலிக் கலைஞரும் என்னை வானொலியில் விதைத்தவருமான சமூகசேவகன், எமது குழாமில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஓரேநபர். அவரிடமிருந்து நூல் தொடர்பான அணிந்துரை, 80களில் எம்முடன் இணைந்து, எம்மை கலகலப்பாக அன்றிலிருந்து இன்றுவரை வைத்திருக்கும், இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் ஒரே சகோதரியிடமிருந்து வாழ்த்துரையையும், எனது அயலூர்வாசியும் குடும்ப நண்பனும் ஸ்ரீலங்காரெலிகொம் நிறுவனத்திலும் இறுதிக்காலத்தில் அடுத்த அறையில் முகாமையாளராகக் கடமைபுரிந்த என்னை நன்றாகப் புரிந்தவரிடமிருந்து நூலாசிரியர் அறிமுகம். பிறகென்ன.. அனைத்தும் ஸ்ரீலங்காரெலிகொம் உறவுகள் என்ற பூரணத்துவத்தை வழங்கியுள்ளார்கள். அதனையிட்டுப் பெருமைப்படுகின்றேன்.

இந்த நூலில் இடம்பெறும் ஐந்து நாடகங்களில் நான்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பானவை. மூத்த கலைஞர்களால் குரல் கொடுக்கும் பாக்கியம் பெற்றவை 'விதை' என்ற நாடகம் *2018* அரச வானொலி விருது விழாவில் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுக் கொடுத்த அதேவேளை பிரதியாக்கத்துக்கும், சிறந்த நடிப்புக்குமென இறுதிச் சுற்றுக்கு அழைத்துச் சென்று சான்றிதழ் பெற்றது. இவை காலத்தின் சுவடுகள்.

அதேவேளை இந்த விதை முளைத்து நூலாக முளைவிட பலவிதத்திலும் உறுதுணையாகவிருந்த, அதில் இடம்பெற்ற நாடகங்களிற்கு உயிரூட்டிய கலைஞர்கள், தயாரித்த தயாரிப்பாளர்கள் அச்சுவாகனமேற்றியவர்கள், வேலைப்பளுவின் மத்தியிலும் மனமுவர்ந்து தமது உரைகளைத் தந்தவர்கள், மற்றும் அனைவருக்கும் நன்றிகூறி நான் விதைத்து முளைவிட்ட **'விதை'** என்ற இந்த நாடக நூலை, ஸ்ரீலங்கா ரெலிகொம்மில் விதைத்து முப்பத்தொன்பது வருடங்களின் பின் ஓய்வு பெறும் இத்தருணத்தில் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

**நன்றி**

**உங்கள் அன்பு அம்பலம்**

***27.10.2019***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ‘விதை’ யின் உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | வீரம் | 03 |
| 2. | விதை | 27 |
| 3. | விரல் | 59 |
| 4. | வாக்குறுதி | 87 |
| 5. | வடிகால்கள் | 117 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வீரம்




துரோணர் - பரசுராமர் - அருச்சுனன் - கர்ணன் - ஏகலைவன்



சந்திரசேகரன் -ஜோக்கிம் - ஹூக்கஸ் - தக்கீசன் - அம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வீரம்

## (கற்பனை கலந்த இதிகாச நாடகம்)

**நாடக மாந்தர்கள் :**

- **துரோணாச்சாரியார்**
- **பரசுராமர்**
- **அருச்சுனன்**
- **கர்ணன்**
- **ஏகலைவன்**

**காட்சி : 1**

**இடம் : துரோணர் மாளிகை.**

**மாந்தர்கள் : துரோணர், கர்ணன்**

**களம் : துரோணர் அமர்ந்திருக்க கர்ணன் விற்பயிற்சி பெறும் எண்ணத்துடன் வருதல். பறவைகள் கீச்சிடுதல். அருவி பாய்தல். கானக ஒலி**

துரோ : என்ன தேரோட்டி அதிரதன் மகனே.. என்ன விடயமாக இங்கு வந்தாய்.. உன் தந்தையார் ஏதும் பணிவிடை கூறிவிட்டாரா..

கர் : தந்தையார் பணிவிடை ஒன்றும் கூறிவிடவில்லை குருநாதர் துரோணாச்சாரியரே.. ஆனால்..

துரோ : ஆனால் என்று இழுப்பதை விட்டு விட்டு காரணத்தைச் சொல்லு மகனே கர்ணா..

கர் : அதுவந்து குருநாதரே.. தந்தையார் அதிரதன் போன்று தேரோட்டியாய் இருப்பதற்கு எனது மனம் இடம் கொடுக்கவில்லை

துரோ : அப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர் : போர்க்கலைகளினைப் பயின்று போர் நடவடிக்கைகளில் சிறந்து விளங்க ஆர்வமாயுள்ளேன் குருநாதர் துரோணாச்சாரியார் அவர்களே..

துரோ : நல்லது கர்ணா.. உனது மனத்திலெழுந்த ஆசை மிகவும் நல்லது. அதற்கு.. இங்கு வந்த காரணம் யாதோ மகனே..

கர் : (தயங்கி) தங்களிடம் போர்ப்பயிற்சி பெறலாமென வந்தேன்..

துரோ : (சிரித்து) என்ன.. என்னிடம் நீ போர்ப் பயிற்சியா.. என்னுடன் விளையாடுகிறாயா கர்ணா..?

கர் : (தயங்கி) நான் விளையாட்டுக்காக கூறவில்லை.. உண்மையைத் தான் உரைத்தேன் குருநாதரே..

துரோ : (கோபத்துடன்) என்ன உண்மையைத்தான் உரைத்தாயா.. ஒரு தேரோட்டியின் மகனுக்கு அவ்வளவு தைரியம் வந்து விட்டதா..

கர் : ஏதோ.. இந்த ஏழையின் மனதில் ஒரு நப்பாசை.. தவறெனில் மன்னித்து விடுங்கள் குருநாதரே..

துரோ : (கோபத்துடன்) ஒரு தேரோட்டியின் வளர்ப்பு மகன்.. தாய் தந்தை தெரியாதவன்.. ம்..ம்..

கர் : (கவலையுடன்) குருநாதரே நீங்கள்..

துரோ : (சிரித்து) நான் சத்திரியர்களுக்கு மட்டும் தான்.. அதிலும் இராசகுமாரர்களுக்குத் தான் பயிற்சியளிப்பேன் என்பது இந்த உலகமே அறிந்த விடயம் அப்படியிருக்க. ஒரு தேரோட்டியின் மகன் நீ.. எவ்வளவு துணிவு உனக்கு...

கர் : ஏதோ ஆர்வத்தில் கேட்டுவிட்டேன்.. தவறுதான் மன்னித்து விடுங்கள் குருநாதரே..

துரோ : மன்னிப்பா.. இந்த எண்ணத்தை இப்போதே மறந்துவிடு.. இப்போதே தாமதியாது இவ்விடத்தை விட்டகன்று விடு.. போ.. கண்முன்னே நில்லாதே

......... **காட்சி மாற்றம்** .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 2

இடம் : துரோணர் இல்லம்

மாந்தர்கள் : ஏகலைவன், துரோணர், அசுவத்தாமன்

களம் : துரோணர் அமர்ந்திருக்க ஏகலைவன் விற்பயிற்சி பெறும் எண்ணத்துடன் வருதல். பறவைகள் கீச்சிடுதல். அருவி பாய்தல். கானக ஒலி

அசு : யார் நீ.. பார்வைக்கு வேடுவனாகத் தோற்றமளிக்கின்றாய்.. இராஜகுமாரர்கள் பயிலும் இவ்விடத்தில் உனக்கு என்ன வேலை..

ஏக : இராஜகுமாரனே.. நானும் இந்தக் கானகத்து ராஜாவின் புதல்வன் தான். இங்கு குருதேவர் துரோணாச்சார்ய பெருந்தகை பயிற்சி கொடுப்பதாக அறிந்தேன். அவரிடம் பயிற்சி பெற அனுமதி கேட்கத்தான் நானும் வந்தேன்..

அசு : (ஏளனமாக) கானகத்து ராஜாவின் புதல்வன் இராஜகுமாரர்களுடன் பயிற்சியா.. இது உனக்கே நியாயமாகத் தெரிகின்றதா வேடுவனே..

ஏக : நியாயம் அநியாயத்தைப் பற்றி நீர் எனக்குப் புகட்ட வேண்டிய தில்லை.. எனக்கும் அவை நன்றாகத் தெரியும் இராஜகுமாரனே..

அசு : (கோபமாக) திமிர்பிடித்த வேடுவச் சிறுவனே.. நான் அசுவத்தாமன் என்பதனால் பொறுத்துக் கொண்டிருக்கிறேன்.. மற்றவர்களென்றால் இந்நேரம்..

ஏக : அதுதானே பார்த்தேன்.. கேள்விப்பட்டது உண்மைதான்..

அசு : (கோபமாக) என்னத்தைத்தான் கேள்விப்பட்டாயோ..

ஏக : தருமராஜகுமாரன் தருமமே நிறைந்தவர் மற்றவர்கள் அகங்காரம் பிடித்தவர்கள் என்று கேள்விப்பட்டேன்.. அதனால் தான் நீர் குருநாதரின் புதல்வனாயிருந்தும் அவரைக்காண அனுமதிக்கிறீரில்லை. விடமாட்டேன் என்று அடம் பிடிக்கின்றீர். தருமராஜகுமாரன் என்றால் இந்நேரம் குருநாதரிடம் அழைத்துச் சென்றிருப்பார். உமது நேரத்தையும் எனது நேரத்தையும் வீணாக்கி விதண்டாவாதம் பண்ணிக்கொண்டு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோ : (இருமுதல்)

அசு : (மனதுள்) எல்லாம் விபரமாக அறிந்து வைத்துள்ளான்.. இங்குவா வேட்டுவ குமாரனே.. நமக்குள் ஏன் விதண்டாவாதம்.. அதோ குருநாதரே வருகிறார்..

ஏக : பார்த்தீரா.. இதைத்தான் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வருவது என்று.. கூறுவது புரிகின்றதா

அசு : சரி.. சரி..

துரோ : என்னது அசுவத்தாமா..

அசு : அது வந்து..

ஏக : வணக்கம் குருதேவா!

துரோ : யாரது மகனே, நீ யார்.. என்னை யாரென அறிவாயா..? பார்வைக்கு வேடுவச்சிறுவன் போலிருக்கின்றாய்.. அரச குமாரர்களுக்குப் பயிற்சிவழங்கும் இவ்விடத்தில் உன் தேடல் யாதோ?

ஏக : குருதேவர் துரோணாச்சார்ய பெருந்தகையே, நான் யாவும் அறிவேன். பக்கத்துக் காட்டில் வாழும் வேடர்களின் தலைவனான இரண்யதனுஸ் என்பவரின் மகன் நான். என் பெயர் ஏகலைவன். வில் வித்தையைச் சிறப்பாகக் கற்றுக் கொள்ளவிழைகிறேன். அவ்வித்தையைக் கற்பிப்பதில் தங்களை விடச் சிறந்த ஆசிரியர் எவரும் இலர் என்று கேள்விப்பட்டுத் தங்களையே குருவாக வரிக்க வந்திருக்கிறேன். என்னையும் தங்கள் சீடர்களில் ஒருவனாக ஏற்றுக் கருணைகூர வேண்டும் மகாகுருவே! (வணங்குகிறான்)

துரோ : எழுந்திரு வேட்டுவ மகனே! கல்வி தேடி குருவை நாடி வந்தவனை உதாசீனப்படுத்தக்கூடாது. ஆனால் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கே எனக்கு நேரம் போதவில்லை. அது மட்டுமல்ல உனது குலமும் அதற்குத் தடையாகவுள்ளது. இதனால் உனக்கு பயிற்சியளிக்க முடியவில்லை. என்றாலும் உன்னையும் என் சீடனாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகின்றேன். எப்போதும் விற்பயிற்சி செய்பவனாய் இரு. அதில் மிக்க பலம் உள்ளவனாக ஆவாய். இப்போது வீட்டிற்குத் திரும்பச்செல். என் மனமார்ந்த ஆசிகள்.

ஏக : தங்கள் கூற்றுக்குத் தலைவணங்குகிறேன் குருதேவர் துரோணாச்சார்ய பெருந்தகையே. தங்கள் இஷ்டம் அதுவானால் நான் என்ன செய்ய முடியும் குருதேவா.. தங்கள் ஆசி கிடைத்தமையே நான் பெற்ற பெரும்பேறு. தங்கள் கட்டளைப் படியே ஆகட்டும் குருதேவா. (வணங்கித் திரும்புகிறான்) (மனதுக்குள்) தங்களையே குருவாக வரித்து தங்கள் விம்பத்தின் முன் என் பயிற்சிகளை ஆரம்பிப்பேன், வழிகாட்டுவீராக.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 3**

**இடம் : அஸ்தினாபுர அரண்மனைத் தோட்டம்**

**பாத்திரங்கள் : துரோணர், அர்ச்சுனன்**

**களம் : அர்ச்சுனன் இருளில் விற்பயிற்சி செய்து கொண்டிருக்கிறான். அச்சத்தத்தைக் கேட்டு துரோணர் அவனை நோக்கி வருகிறார்.**

துரோ : அர்ச்சுனா, இந்த நேரத்தில் இவ்விருளில் என்ன செய்து கொண்டிருக்கிறாய் வீரனே?

அர் : வணக்கம் குருதேவர் துரோணாச்சாரியார் அவர்களே.. இரவில், விற் பயிற்சி தான் செய்து கொண்டிருக்கிறேன்.

துரோ : என்ன அர்ச்சுனா.. இரவில் அதுவும் கும்மிருட்டில் விற்பயிற்சியா..

அர் : ஆம் குருநாதா.. கண்தெரியாதவனுக்கு இருட்டே உலகமே இருள்போல இருக்கும் போது எல்லாவற்றையும் மாற்றான் துணையின்றிச் சரியாகச் செய்யவில்லையா.. அதனால் தான் நானும் இருட்டில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோ : (இடைமறித்து) அர்ச்சுனா அதற்கெல்லாம் காரணம் தினமும் செய்வதால் ஏற்பட்ட இயைபாக்கம்.. இது விளங்கவில்லையா உனக்கு

அர் : விளங்கியது.. அதனால்தான்.., பயிற்சியை தினமும் வில்லிலும் செய்தால்.. அதாவது விற்பயிற்சியை இருட்டிலும் செய்தால்..

துரோ : அப்படியா..?

அர் : ஆம்.. குருநாதரின் வார்த்தையில் கூறுவதாயின் இருட்டில் நாணேற்றுவது கைப்பழக்கத்திற்கு வந்தால் கஷ்டமாயிருக்காது என எண்ணினேன்.. முயற்சி செய்து பார்த்தேன்.. அதனால் தான் தங்களிடம் கூறாமல் வந்துவிட்டேன். தவறுதான் மன்னித்துக் கொள்ளுங்கள் குருநாதரே..

துரோ : மன்னிப்பா.. மகிழ்ச்சி.. மெத்த மகிழ்ச்சி. உன்னைப் போன்ற சிறந்த பயிற்சி, முயற்சி உடையவனை எனது வாழ்நாளில் கண்டிலேன். சொல்லித்தருவதை அப்படியே செய்வதிலும், அவற்றில் ஆராய்ந்து புதுமைகளைச் செய்வதிலும் உனக்கு நிகர் நீயே.. பாராட்டுகிறேன் அர்ச்சுனா..

அர் : நன்றி குருநாதரே..

துரோ : அதனால் இனி உலகில் உனக்குச் சமமான வில்லாளி இல்லை எனும் அளவுக்கு, வில்லிற்கு விஜயன் என்று உலகமே வியக்கும் படி உனக்குப் பயிற்சி தரப்போகிறேன்.

அர் : நன்றி குருதேவா! நான் பெரும் பாக்கியம் செய்தவன்! அதற்கான தகுதி எனக்குண்டாக ஆசீர்வதியுங்கள் பெருமானே!

துரோ : அங்ஙனமே ஆகுக, என் பிரிய சீடனே!

**....... காட்சி மாற்றம் .......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 4**

**இடம் : துரோணர் இல்லம்**

**மாந்தர்கள் : அசுவத்தாமன், கர்ணன்**

அசு : என்ன கர்ணா.. எப்படிப் போர்ப் பயிற்சிகள் போகின்றன.. பயிற்சிக்கென்று சென்று மாதக்கணக்காகின்றதுவே..

கர் : என்ன செய்வது அசுவத்தாமா.. என்பிறப்பென்ன என்பது நானுட்பட உலகமே அறியாதது ஒன்றல்லவா.. தேரோட்டியின் மகனாக வளர்வது, நான் தேடிக்கொண்டதா.. நான் செய்த தப்பா..

அசு : அப்படியா..

கர் : உனது தந்தை துரோணாச்சாரியார் அவற்றைக் காரணம் காட்டியே என் வேண்டுதலை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.. நான் ஏதோ.. எனக்கெட்டிய வரையில் பகலில் போர்க் கலைகளை ஆராய்ந்து எடுத்து சூரிய பகவானைக் குருவாக வரித்து இரவில் பயிற்சிகளைச் செய்து வருகின்றேன்.

அசு : அப்படியா மிகவும் மகிழ்ச்சி.. இப்படித்தான் அண்மையில் ஏகலைவன் என்றொரு வேடுவனுக்கும் நிகழ்ந்தது... என்ன செய்வது தந்தையின் பதவி மீதுள்ள இறுக்கங்கள்.. சில வேளைகளில் அவரை இரக்கமில்லாதவராக்கி விடுகின்றது. அது அவருடைய தவறில்லைத்தானே

கர் : அவருடைய தவறோ.. அன்றி.. என்னுடைய தவறோ.. அவரை எனது குருநாதராக அமையக் கொடுத்து வைக்கவில்லை அவளவு தான்..

அசு : அண்மையில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமான பாசறையில் அர்ச்சுனன் வில்வித்தையில் தனது அதீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையைக் காட்டி அவரின் பாராட்டுதலைப் பெற்று விசேட பயிற்சி முறைகளை அப்பாவிடமிருந்து தற்பொழுது பெற்றுக் கொள்ளுகின்றான்.

கர் : அப்படியா..? அப்படி என்ன தான் அர்ச்சுனன் செய்து காட்டினானோ..?

அசு : அருச்சுனன் ஒரு உயர்ந்த மரக்கிளையில் தொங்கவிட்டிருந்த கிளியின் ஒற்றைக் கண்ணின் மீது அம்பினால் அடித்தான்.

கர் : (ஏளனமாக) அட இதுவா.. என்னால் சுயபயிற்சியின் மூலம் கிளியின் இருகண்களையும் அதுவும் இரவுநேரத்தில் அடிக்க முடியுமென்றால் முறையாகப்பயிற்சி செய்த அருச்சுனனால் இதைச் செய்ததை பெருமையாகக் கூற வெட்கமாயில்லை..

அசு : அது அவரவர் அளவுகோல்.. நமக்கேன் வீண்வம்பு..

கர் : போட்டிக்கு வீரர்கள் இல்லாதவிடத்து கோழைகளை வீரரெனப் பட்டம் சூட்டுவது இயற்கையே. ஆலையில்லா ஊருக்கு இலுப்பம் பூ சர்க்கரை என்று தெரியாமலா முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்..

அசு : அப்படிக் கூறாதே கர்ணா..

கர் : எப்படிச் சொல்லச் சொல்லுகிறாய்.. நான், ஏகலைவன் இப்படி எத்தனையோ பேரினது ஆசையைக் கட்டிப்போட்டு விட்டு பயிற்சி நடாத்தி போட்டி வைப்பதை வேறு எப்படிக் கூறுவது..

அசு : மீண்டும் மீண்டும் அதையே திரும்ப திரும்ப ஏன்.. ஏன்.. வா போவோம்

கர் : ஆம் எப்படியும் முயற்சி செய்து நாமும் நம்மை நிரூபித்தே ஆக வேண்டும்..

....... **காட்சி மாற்றம்** .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 5

இடம் : கர்ணன் இல்லம்

மாந்தர்கள் : கர்ணன்

கர் : என்ன கூறியும் எனது மனம் அமைதியடைய வில்லையே.. இன்னொருமுறை முயற்சித்துப் பார்ப்போமே.. தெய்வீக ஆயுதங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான பயிற்சிகளுக்கு பரசுராமர் தான் சிறந்தவர். ஆனால் அவரோ பிராமணர்களுக்கு மட்டும் தான் கற்றுக் கொடுப்பவர்.. ஆம் ஆபத்துக்குப் பாவமில்லை என்பார்களே.. நானும் ஒரு பிராமணனாக பரசுராமரை அணுகித்தான் பார்ப்போமே..

....... காட்சி மாற்றம் .......

காட்சி : 6

இடம் : கர்ணன் இல்லம்

மாந்தர்கள் : கர்ணன், பரசுராமர்

பர : மகனே.. நீ உண்மையாக மனம் ஒன்றி வித்தைகளைக் கற்றுக் கொண்டதனால்.. உனது கடுமையான முயற்சியினால் போர்க்கலை மற்றும் வில்வித்தைகளில் எனக்கு நிகரான வனாகத் திகழ்கின்றாய். உன்னைப் பாராட்டுகிறேன் கர்ணா..

கர் : நன்றி குருநாதர் பரசுராமரே.. உங்களிடத்தில் சிஷ்யனாக இருந்தபடியாற்தான் தெய்வீகக்கலையுடன் போர்க்கலையையும் புகட்டினீர்கள் குருவே..

பர : மகனே.. உனது அதீத திறமையினாலும் ஈடுபாட்டினாலும் தான் அவற்றை உனக்குக் கற்றுக் கொடுத்தேன்.. இவைகளைக் கற்றுக் கொண்ட முதல் மாணவனும் நீயே தான்

கர் : தங்களை குருநாதராக அடைந்தது நான் முற்பிறப்பில் செய்த பாக்கியம் குருவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர : நித்திரை வருவது போல இருக்கின்றது. அந்தத் தலையணையை எடுத்துவா.. இந்த மரநிழலில் தூங்கலாமென நினைக்கிறேன்.. வீசுகின்ற இளம் தென்றல் காற்று இதமாகவும் இருக்கிறது.

கர் : தலையணை எதற்கு குருநாதரே தங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் எனது மடியிலேயே தலை வைத்துத் தூங்கலாமே...

பர : கர்ணா..

கர் : ஆம் குருநாதரே.. நீங்கள் சம்மதம் தெரிவித்து என் மடியில் உறங்கினால் அதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் ஐயா..

பர : சரி.. உனது ஆசையை ஏன் நிராசையாக்குவான்.. இப்படிவா மகனே..

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 7**

**இடம் : துரோணர் இல்லம்**

**மாந்தர்கள் : துரோணர், அர்ச்சுனன்**

அர் : (துரோணரைப் பார்த்து) வணக்கம் குருநாதரே! 'உனக்கு மேம்பட்ட சீடன் எனக்கில்லை' என்று ஒரு முறை அன்புடன் கூறி இருக்கிறீர்கள். அப்படியிருக்க தங்களுக்கு என்னைவிட மேம்பட்ட சீடன் ஒருவன் இருக்கிறானே, அதெப்படி குருவே ?

துரோ : என்ன கூறுகிறாய் அர்ச்சுனா, சற்று விளக்கமாய் புரியும்படி சொல்.

அர் : குருதேவா, நேற்று உங்களிடம் அனுமதி பெற்று நாங்களும் கௌரவர்களும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றோமல்லவா?

துரோ : ஆமாம் அர்ச்சுனா.. அதற்கென்ன இப்போ..

அர் : எங்களுடன் வந்த எனது அன்புக்குரிய நாய், பலமாகக் குரைத்துக் கொண்டே ஒரு கரிய வேடுவ இளைஞனை நோக்கி ஓடியது. ஆனால் சிறிதே நேரத்தில் எதுவித சத்தத்தினையும் கேட்காததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப்பார்த்தோம்.. அப்போது காட்டினுள் சென்று பார்க்கும் போது ஓர் அம்பினால் ஆயிரம் துளைகள் இடப்பட்டு இறந்து கிடந்தது...

துரோ : அப்புறம்.

அர் : அங்கு ஒரு வேடுவன் நின்றான். இவ்வளவு திறமையுடன் அம்புகளை எய்தவர் யார் என்று உருட்டிக் கேட்டேன். அப்பொழுது அவன் மிக்க கர்வத்துடன் கூறினான்

ஏக : வீரர்களே, நான் இக்கானக வேடுவத்தலைவனின் மகன். என் பெயர் ஏகலைவன். தனுர் வேதத்தில் பயிற்சி பெற்றுவருகிறேன். துரோணரின் மாணவன் நான். அவரின் கற்பித்தலில் கற்ற வித்தையால் நான்தான் எனது மானசீகக் குருவின் சிலையைச் சிறுநீரால் அசுத்தம் செய்த உனது நாயை எய்தேன்.

அர் : இப்போது கூறுங்கள், குருதேவரே, அவன் எவ்வாறு உங்கள் சீடனானான், எப்போது விற்பயிற்சி பெற்றான், எங்களுக்கும் தெரியாத வித்தைகளை அவன் எப்படிக் கற்றான்?

துரோ : வீரனே அர்ச்சுனா.., அவசரப்பட வேண்டாம். என்னுடன் வந்து அவனைக் காட்டு. அவன் முன்னிலையிலேயே நீதான் என் ஆத்மார்த்த சீடன் என்பதை நிரூபிக்கிறேன். வா, செல்லலாம்.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 8**

**இடம் : வனம்**

**மாந்தர்கள் : துரோணர், அர்ச்சுனன், ஏகலைவன்**

**களம் : ஏகலைவன் துரோணரைப் போன்று மண்ணால் செய்யப்பட்ட சிலையின்முன் வணங்கிவிட்டு தொடர்ந்து அம்புகளை எய்தவண்ணம் விற்பயிற்சியில் இருக்கிறான். துரோணர் வருவதைக் கண்டவுடன் ஓடிவந்து அவர் பாதங்களில் விழுந்து வணங்குகிறான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக : வணக்கம் குருதேவரே, இந்த ஏழையின் இடத்திற்கு விஜயம் செய்தமை நான் பெற்ற பெரும் பேறு

துரோ : நல்லது.. நீ

ஏக : நான் தங்கள் சீடன் ஏகலைவன். உங்களிடம் வந்து ஆசி பெற்று வில் வித்தையை ஆரம்பித்து தங்கள் கிருபையால் தனுர்வித்தை ஓரளவு கைவரப் பெற்றிருக்கிறேன். மேலும் பயிற்சியைத் தொடர்ந்து செய்து வருகிறேன். அருள்பாலியுங்கள் குருநாதரே!

துரோ : ம்.. தற்போது புரிகின்றது.. நன்று.. மகிழ்ச்சி ஏகலைவனே, உன் திறமை கண்டு போற்றுகிறேன்.

ஏக : நன்றி குருநாதரே..

துரோ : ஆகட்டும்.. ஏகலைவா.. அதிருக்கட்டும் நீ என் சீடன் என்றால் எனக்கு குரு காணிக்கை கொடுக்க வேண்டுமல்லவா அப்போது தானே கற்ற வித்தைக்குப் பலன் உண்டாகும்?

ஏக : மன்னித்து விடுங்கள்.. மறந்து விட்டேன்.. இந்தச் சந்தர்ப்பத்திலாவது நினைவுபடுத்தியமைக்கு நன்றி பெருமானே.. காணிக்கை கொடுக்காது விடின் கற்றவித்தை பாழ் எனத் தந்தையார் கூறியிருக்கின்றார்.

துரோ : நல்லது ஏகலைவா..

ஏக : பெருமானே, நான் தங்களுக்கு காணிக்கையாக என்ன கொடுக்க வேண்டும்? ஆயத்தமாக.. தயாராக.. உள்ளேன்.. கட்டளை இடுங்கள் !

துரோ : என் பிரிய சீடனே, குரு காணிக்கையாக உன் வலது கைக் கட்டை விரலைத் தருவாயா?

ஏக : குருதேவரே, இது தானா.. வலது கைக் கட்டை விரல் தானே.. என்னவோ ஏதோ என்று பயந்துபோய் விட்டேன். சற்றுப் பொறுங்கள் குருநாதரே..

துரோ : சரி ஏகலைவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக : இதோ உங்கள் காணிக்கை, ஏற்றுக் கொள்வீர்களாக !. (இவ்வாறு கூறிக்கொண்டே தன் வலக்கைக் கட்டை விரலை வெட்டி துரோணரிடம் தருகிறான் ஏகலைவன். துரோணரும் வாய்ப் பேச்சற்றவராக கைகளை உயர்த்தி ஏகலைவனை ஆசீர்வதித்த வண்ணம் அர்ச்சுனனைப் பார்க்கிறார், 'உன் போட்டியை ஒழித்துவிட்டேன் பார்த்தாயா' என்ற குறிப்பு தோன்ற)

துரோ : ஏகலைவா.. குருதி உன்குரு பக்தி வாழ்க.. உன் வித்தை சகலவழிகளிலும் வெற்றி பெறட்டும். ஜயம் உண்டாகட்டும்..

அர் : ஏகலைவா, என்னே உன் குருபக்தி! நீ நீடூழி வாழ்க!.. குருதி கொப்பளிக்கின்றதே..

ஏக : கொப்பளிக்கும் குருதி பச்சிலைக்கு அடங்கிவிடும்.. ஆனால் கொடுக்காத குருதட்சணை கொடுக்கத் தவறியவன் என்ற பாவத்தை எதுவுமே அடக்கமாட்டாது அர்ச்சுனரே..

அர் : உண்மைதான் ஏகலைவா..

துரோ : அர்ச்சுனா.. இப்போது உண்மையைப் புரிந்தாயா.. உன் வார்த்தை சரியானதென்று எண்ணுகின்றாயா..?

அர் : தவறுதான் குருநாதரே.. ஏற்றுக் கொள்கிறேன்.. மன்னித்துக் கொள்ளுங்கள் குருநாதரே..

துரோ : அர்ச்சுனா.. அதிலும் ஒரு நல்லவிடயம் இருந்தது புரிய வில்லையா..

அர் : சுவாமி..

துரோ : விருட்சமாக வளரவிருந்த ஒரு மரத்தை கிள்ளிவிட்டேன் பார்த்தாயா..?

அர் : புரியவில்லையே

துரோ : புரிந்து கொள்.. உன் போட்டியை ஒழித்து விட்டேன் பார்த்தாயா..

அர் : தற்போது புரிகின்றது. என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் குருதேவரே

**....... காட்சி மாற்றம் .......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 9**

**இடம் : துரோணர் இல்லம்**

**மாந்தர்கள் : கர்ணன், பரசுராமர்**

பர : (வியப்புடன்) கர்ணா.. இதென்ன.. மனிதக்குருதி.. என் முகத்தையே நனைத்து விட்டதே.. என்ன கர்ணா.. என்ன.. என்ன சம்பவம் நிகழ்ந்தது..

கர் : அது ஒன்றுமில்லை குருநாதரே.. நீங்கள் தூங்குங்கள்..

பர : என்முகத்தையே குருதி நனைத்ததன் பின்பு என்னைத் தூங்கும்படி கூறுவது உனக்கே சரியாகவுள்ளதா.. கூறு கர்ணா கூறு..

கர் : (தாழ்ந்து) அ..து.. ஒ..ன்று..மில்லை.. குருநாதரே

பர : உன்னைப்பற்றி சகலதும் அறிந்தவன் நான்.. கர்ணா.. நீ ஏதோ ஒன்றை மறைக்க முற்படுகின்றாய்.. அது மட்டும் உண்மை.. மறைக்க வேண்டாம் நடந்ததைக்கூறு கர்ணா.. யாருக்கு என்ன நடந்தது.. இந்தக் குருதி எப்படி இவ்விடத்தில்.

கர் : ஒரு வண்டு என்னுடைய தொடையை கடித்துவிட்டது. துளையும் இட்டுவிட்டது. இதன் காரணமாக இரத்தம் கசிந்து வரத்துவங்கியது. என் மடி மீது உறங்கும் உங்களுடைய தூக்கம் கலைந்துவிடக்கூடாது என்பதற்காக நான் வலியைத் தாங்கிக் கொண்டு இருந்தேன்

பர : (கோபத்துடன்) கர்ணா.. என்ன உனது தொடையில் வண்டு துளைத்து குருதி ஆறாகப் பெருக்கெடுத்து என் முகத்தினை நனைத்த போதும் சிறிதும் அசையாது வலியையும் தாங்கிக் கெண்டு இருந்தாய் என்கிறாய். நீ யார்?.. உனது மர்மம் என்ன..?

கர் : அது வந்து..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர : வந்தும் போயும்.. கர்ணா.. இவ்வளவு பெரிய துளையைப் போட்டும் நீ வலியைப் பொறுத்துக்கொண்டு இருந்திருக்கிறாய் எனில் இது ஓர் அந்தணனால் இயலாதது. நீ நிச்சயம் அந்தணன் அல்ல சத்திரியனாகவே இருக்க வேண்டும்... மறைக்காதே.. உண்மையைச் சொல். நீ உண்மையில் பிராமணன் தானா.. அன்றேல் சத்திரியனா..

கர் : குருநாதரே..

பர : உனது தாமதம், நீ பொய் கூறுகிறாய் என்பதை வெளிக் காட்டுகிறது. உண்மையைச் சொல் நீ யார்.. நீ சத்திரியனா? இல்லை பிராமணனா?

கர் : நான் தேரோட்டி ஒருவரின் வளர்ப்பு மகன். எனது பெற்றோர்கள் யாரென்பது எனக்குத் தெரியாது. எனது ஞானத்தினை வளர்த்துக் கொள்கின்ற ஆசையினால் நான் உங்களிடம் அந்தணன் என்று பொய் சொல்லி சீடனாக சேர்ந்துவிட்டேன். என்னை மன்னித்து அருள் பாலிக்க வேண்டும்

பர : அடப் பாவி.. நீ பிராமணன் என்றெண்ணியல்லவா.. அதுவும் ஆர்வமுள்ளவன் என்பதனால் எவருக்கும் கற்பிக்காத வித்தைகள் எல்லாவற்றையும் கற்பித்தேனே.. நீ பொய் சொல்லி என்னிடமிருந்து வித்தைகளைக் கற்றிருக்கிறாய் அதிலும் உனது குரு சத்திரியர்களுக்கு எதிரானவர் என்று தெரிந்திருந்தே உன்னுடைய கோத்திரத்தையும் சூத்திரத்தையும் மாற்றிச் சொல்லி என்னிடம் வித்தை கற்றிருக்கிறாய்.

கர் : இல்லை குருநாதரே.. வேண்டுமென்று செய்யவில்லை..

பர : நீ என்ன சமாதானத்தைச் சொன்னாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை.. நினைத்துப்பார். இதென்ன ஒரு நாளில் மட்டும் நீ செய்த தவறு என்று எண்ணுகிறாயா..? இது.. ஒவ்வொரு நாளும் அபிவாதனம் சொல்லி என்னை வணங்கி பயிற்சியைத் தொடங்கும் போதும் இடைவேளையிற் பிரிகின்ற போதும், மீண்டும் வரும்போதும் இறுதியில் அன்றைய தினம் முடியும் போதும் சொல்லுகிற பொய்யாயிற்றே.. இதை மறுக்கிறாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர் : இல்லை குருநாதரே.. நான் பொய் சொல்லவில்லை என்று தங்களுடன் விதண்டாவாதம் செய்ய வரவில்லை.. செய்தது தவறு என்று தான் கூறுகிறேன்.. தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள் குருநாதரே..

பர : குருவிடமே பொய்சொல்லி தந்திரமாக வித்தைகளைக் கற்றிருக்கிறாய்.. உனக்கு.. உனக்கு.. என்னிடமிருந்து கற்றுக் கொண்ட பிரம்மாஸ்திரப் பயன்பாடு உள்ளிட்ட அனைத்து தெய்வீகப் போர்க்கலைகளுட்பட்ட கலைகளும், மந்திரங்களும் தேவையான தருணத்தில் பயனற்றதாகுக.. உனக்குச் சமமானவனோடு போரிடும் போது இங்கு என்னிடம் கற்ற வித்தைகள் அனைத்தும் உனக்கு நினைவில் தங்காது போய்விடுவதாக.. என் எதிரில் நிற்காதே போய்விடு.. போ.. என்முன் ஒருகணமும் நிற்காதே..

கர் : (அழுதுகொண்டு) குருநாதரே.. அறியாமற் செய்த தவறுக்கு இவ்வளவு பெரிய சாபமா குருநாதரே.. கற்ற வித்தைகள் மறக்க வேண்டும் எனவும் தக்க சமயத்தில் பயனற்றுப் போக வேண்டும் என்றும் சாபமிடுமளவுக்கு நான் தெரிந்து என்ன துரோகம் செய்தேன்.

பர : (கடும் தொனியில்) கர்ணா..

கர் : தனது பிறப்பு எது என்று தெரியாத எவனும் இவ்விடத்தில் இருந்திருந்தால் இதையே செய்திருப்பான் என்பதனை எண்ணிப் பார்த்தீர்களா சுவாமி..

பர : (ஆக்ரோசமாக) கர்ணா.. சாபம் இட்டது இட்டதுதான்.. சமாதானம் தேவையில்லை.. அதுமட்டுமல்ல மீளப்பெற முடியாதது.. இது நீ அறியாததொன்றல்ல..

கர் : (அழுது கொண்டு) அன்று சப்தவேதி வித்யா பயிற்சியின் போது தவறுதலாகப் பிராமணர் ஒருவரின் பசுவைக் கொன்றதால் சிக்கலான சூழலில் நான்.. எனது கவனம் பகைவரிடமிருந்து சிதறடிக்கப்பட்டு உதவியற்றவனாகி இருந்து கொல்லப்படுவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சாபத்துக்குள்ளானேன்.. பின்பு சிறிய குழந்தைக்கு உதவுவ்தாக எண்ணி தெரியாமல் பூமாதேவிக்கு வலியை உண்டாக்கியதால் முக்கியமான கட்டத்தில் எதிரிகளுக்கு என்னைப் பலவீனமாக்கிவிடுவேன் என்ற சாபம்.. இன்று குருநாதரே தங்களது சாபம்.. நான் என்ன பாவம் செய்து இம்மண்ணில் பிறந்தேன்.. சாபம்.. சாபம்.. சாபம்.. தாய்தந்தை யாரென்று தெரியாத எனக்கு வெவ்வேறு ரூபத்தில் நான் செய்யாத தவறுகளுக்காக சாபங்களே தொடர்கின்றன.. இதற்கு முடிவேயில்லையா.. (கேவி அழுதல்)

பர : (அமைதியாக) கர்ணா உனது நிலைமை புரிகின்றது.. என்ன செய்வது.. இட்ட சாபம் இட்டதுதான்.. நடப்பது நடக்கட்டும்.. எல்லாம் ஆண்டவன் விட்ட வழி என்று இரு.. அழாதே எழுந்திரு..

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 10**
**காலம் : சில வாரங்கள் கழித்து ஒரு மாலை**
**இடம் : துரோணர் இல்லம்**
**மாந்தர்கள் : அர்ச்சுனன், துரோணர்**

அர் : (பதறிக்கொண்டே ஓடி வருகிறான். துரோணரைப் பார்த்து) நாம் மோசம் போய்விட்டோம் குருதேவா! மோசம் போய்விட்டோம் அந்த வேடுவன் ஏகலைவன் உங்களை ஏமாற்றிவிட்டான்.

துரோ : என்ன பதட்டம் இது அர்ச்சுனா, எதைக்கண்டு இப்படி?

அர் : ஆம் குருதேவரே, இன்னொரு முறையாக இப்போதுகூட ஏகலைவனின் வில் திறனை நான் பார்க்க நேர்ந்ததே காரணம்.

துரோ : அப்படியா..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : நேற்றிரவு ஏகலைவன் கானகத்தில் ஆற்றோரம் ஒரு பசுவைக் கொல்ல வந்த புலியின் வாயை அம்புகளால் கட்டி விரட்டியடித்த விந்தையை நட்சத்திர ஒளிக்கிடையே நான் கண்டேன். இருளிலும் சப்தங்களைக் கேட்டே அம்பைக் குறி வைக்கும் திறனை அவனிடம் பார்த்தேன்.

துரோ : அப்படியா..?

அர் : நான் அன்று இரவில் பயிற்சி செய்யும் போது என்னைப் பெருமைப்படுத்தினீர்கள். பின்பு அந்த வேடுவனிடம் வலது கைப் பெருவிரலை வெட்டி வளரவிருந்த விருட்சத்தை வெட்டியதாகப் பெருமைப்பட்டீர்கள். ஆனால் இன்று அதையே அவனிடம்.. அதே வேடுவன்.. இது எப்படி சாத்தியமாயிற்று அவனுக்கு? அவன் ஏதோ ஏமாற்று வேலை செய்திருக்கிறான் என்றே நினைக்கிறேன் குருதேவா !

துரோ : இருக்காது அர்ச்சுனா.. ஏமாற்று வேலை செய்பவர்களுக்கு இவ்வகையான வித்தைகள் பலிதமாகாது.. வீரனே, என்னை நம்பு.

அர் : குருநாதா..

துரோ : என்னுடைய வித்தை பலிக்கின்றது என்றால் அவர்கள் பொய்யர்கள் அல்லர். அதை மறந்திடாதே. அதேவேளை இன்னமும் நீதான் என் தலையாய நம்பிக்கைக்குரிய சீடன். அதையும் மறந்திடாதே.. எனினும் நீ கூறியது என்னை சங்கடப்படுத்துகிறது

அர் : குருநாதா.. என் இரு கண்களாலும் கண்ட காட்சியைத் தான் கூறினேன் குருதேவா..

துரோ : சரி எதற்கும் நாமிருவரும் நாளை ஏகலைவனைச் சந்தித்து உண்மையை அறிவோம். அதுவரை பொறுமை காத்திரு அர்ச்சுனா...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர் : குருதேவா, என்னைவிடச் சிறந்த வில்லாளி என்னிடம் ஏற்படுத்திய மன உளைச்சலில் தங்கள் மனதை சங்கடப்படுத்தியதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள் பெருமானே !

துரோ : சென்று வா வீரனே, வீரம் வெல்லட்டும் ! நேர்மை நின்று தழைக்கட்டும்.

அர் : வணங்கி விடை பெறுகிறேன் குருவே.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 11**

**காலம் : மறு நாள் காலை**

**இடம் : கானகம்**

**மாந்தர்கள் : ஏகலைவன், துரோணர், அர்ச்சுனன்**

**களம் : ஏகலைவன் குருவின் சிலையின் முன் வணங்கி கண்களை மூடித் தியானத்தில் இருக்கிறான்.**

ஏக : ஓம் ஓம்.. ஓம்.. (மந்திர உச்சாடணம்)

துரோ : அர்ச்சுனா பார்த்தாயா.. நிஷ்டையிலிருக்கும் ஏகலைவனின் கூப்பிய கைகளைப் பார்த்தாயா..?

அர் : கவலையாகத்தான் இருக்கின்றது.. ஒன்பது விரல்களுடன்..

துரோ : மாயமும் இல்லை மந்திரமும் இல்லை.. ஏகலைவன் விசுவாசமுள்ளவன்

அர் : ஏற்றுக் கொள்ளுகின்றேன். என்றாலும்.. என் கண்ணால் கண்டதைப் பொய் என்கிறீர்களா சுவாமி..
(துரோணரும் அர்ச்சுனனும் கதைக்கும் சலசலப்பு சத்தம் கேட்க, கண் திறந்து துரோணரைப் பார்த்துவிட்டு அவரை வணங்குகிறான்)

ஏக : சுவாமி.. தாங்கள் இவ்வேளையில் இங்கு.. நமஸ்கரிக்கிறேன் ஸ்வாமி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோ : வாழ்க மகனே, ஒன்பது விரல்களைக் கொண்டு கைகூப்பி வணங்கும்படி உன்னைச் செய்து விட்டேனே, என் விபரீத கோரிக்கையை பொறுத்துக் கொள்வாயாக !

ஏக : சுவாமி..! அப்படிச் சொல்லாதீர்கள் குருவே!..

துரோ : இன்னமும் உன் வில் வித்தை ஆசை போகவில்லை போலிருக்கிறதே. நேற்று முன் தினம் இரவு நீ ஒரு புலியின் வாயைக்கட்டி விரட்டியதை அர்ச்சுனன் பார்த்தானாம். என்னிடம் சொன்னான். வலக்கை கட்டைவிரல் இழந்தும் இது எப்படி சாத்தியமாயிற்று என்று எனக்கே வியப்பாக இருக்கிறது!

ஏக : குருதேவரே ! உங்கள் பரிபூரண ஆசி இருக்கும்போது எதுதான் சாத்தியமாகாது?

துரோ : நல்லது ஏகலைவா.. ஆனால்

ஏக : அது எப்படிச் சாத்தியம் என்றுதானே கேட்க வருகிறீர்கள்.. குருவே..

அரு : ஆமாம்..

ஏக : நீங்கள் வலக்கை கட்டை விரலைத் தானே பெற்றுப் போனீர்கள்? நான் இடக்கைப் பழக்கம் உள்ளவனாயிற்றே! அதனால் என் வில் வித்தைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.. இனியும் இருக்காது.

(ஏகலைவன் கூற்றைக் கேட்ட துரோணரும் அர்ச்சுனனும் திகைத்துப் போகிறார்கள்.)

துரோ : என்னை மன்னித்து விடு , என் பிரிய சீடனே, நான் முதலிலேயே உன்னிடம் உண்மையைக் கூறியிருக்க வேண்டும். அர்ச்சுனன் தான் என்றும் என் சிறந்த சீடன் என்று அவனிடம் வாக்களித்திருந்தேன்

ஏக : அப்படியா சுவாமி..

துரோ : உண்மையைச் சொல்லுகிறேன். அவனைவிட நீ வில் வித்தையில் சிறந்து விளங்குவதை அவனால் பொறுத்துக் கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. என் வாக்கும் பொய்த்துப் போய் விடும் போலிருந்தது. எனவேதான் உன்னைச் செயலிழக்கச் செய்ய உன் வலக்கை கட்டைவிரலைக் காணிக்கையாகப் பெற்றேன். ஆனால் என் பொய் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. உன் இடக்கைப் பழக்கம் உன் வித்தையைக் காப்பாற்றி விட்டது. (அர்ச்சுனனைப் பார்த்தவாறே) அர்ச்சுனனும் என்னை மன்னிக்கட்டும் ! நான் வருகிறேன். (திரும்ப எத்தனிக்கிறார்)

ஏக : குருசிரேஷ்டரே, இவ்வார்த்தைகள் தங்கள் திருவாயிலிருந்து வரலாமா? தாங்கள் என்னிடம் காணிக்கை கேட்டபோதே தங்கள் நோக்கத்தை நான் உணர்ந்திருக்க வேண்டும். அதற்கேற்ப என் இடக்கைக் கட்டை விரலை தங்களுக்குக் காணிக்கையாக தந்திருக்க வேண்டும். நான் வேட்டுவன் தானே, அரசாளும் சத்திரியர்களுக்கு உள்ள சாமர்த்திய புத்தி எனக்கில்லையல்லவா?

துரோ : அப்படி உன்னையே தாழ்த்தி என் மனதைக் கீறாதே..

ஏக : இப்போதும் கேளுங்கள். இன்னொருமுறை காணிக்கையாக என் இடக்கைக் கட்டை விரலையும் தரத் தயார்!.

துரோ : (இடை மறித்து) வேண்டாம் குழந்தாய், வேண்டாம். நான் இழைத்த ஒரு குற்றமே போதும்!

அர் : (இடைமறித்து) நண்பனே ஏகலைவா, போதும். உன் குரு பக்தியையும் விற்திறனையும் கண்டு நான் வெட்கப்படுகிறேன், பொறாமைப்படுகிறேன். என் தகுதி எனக்குத் தெரிந்து விட்டது. நீ மேலும் உன்னை வருத்திக் கொள்ள வேண்டாம்.

ஏக : மன்னிக்க வேண்டும் குருதேவரே! நான் இன்னொரு உண்மையையும் சொல்ல வேண்டும். உங்களுக்கு என் இடக்கை கட்டைவிரலைக் காணிக்கையாக்கி விட்டு நான் சும்மா இருக்க மாட்டேன். வில் வித்தையின் மேலுள்ள என் ஆர்வம் என்றுமே தீராதது. தொடர்ந்தும் பயிற்சி செய்ய ஆரம்பிப்பேன். குருவருளால் வெற்றியும் பெறுவேன். ஆனால் குருவின் எண்ணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றாத பாவியாகிவிடுவேன். இடதுகை விரலல்ல.. எல்லா விரல்களையுமே உங்களுக்குக் காணிக்கை ஆக்கத் தயாராக இருக்கிறேன். கட்டளை இடுங்கள் குருநாதரே!

துரோ : (திடுக்கிட்டு) ஏகலைவா, என்ன விபரீதம் இது? எங்களை மேலும் கொடூரர்களாக ஆக்க முயற்சிக்காதே. என் வாக்கு பொய்த்ததாகவே இருக்கட்டும். அர்ச்சுனனை நான் வேறு வழிகளில் சமாதானப்படுத்துகிறேன். எல்லாம் விதிப்படி நடக்கும்.. உன் குரு பக்தி இணையில்லாதது. எங்களை மீண்டும் மன்னித்துவிடு. நாங்கள் விடை பெறுகிறோம்.

ஏக : குருதேவரே, கொஞ்சம் பொறுங்கள்.. உங்கள் பெரிய மனது எனக்குப் புரிகிறது. ஆனால் என்னைக் கடமை தவறியவனாக ஆக்கிவிடாதீர்கள். உங்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன். அதை உங்கள் மீது பழியில்லா வண்ணம் என் விரல்களை வெட்டிக் கொள்ளாமலேயே நிறைவேற்றும் வழி உண்டு என்று நினைக்கையில் எனக்கு மகிழ்ச்சி மேலிடுகிறது.

துரோ : ஏகலைவா..

ஏக : ஆம், இக்கணம் முதல் நான் வில்லைத் தொடமாட்டேன். என் வேட்டுவத் தொழிலுக்காக ஈட்டி, கத்தி, கம்பு, கை போன்றவைகளையே பயன்படுத்துவேன். இது உறுதி, அந்தணரும் சத்திரியரும் அறிய, கானும் வானும் அறிய, என் வில்லும் அம்புகளும் அறிய இது உறுதி. இச் சபதம்தான் குருவுக்கான என் காணிக்கை. மன மகிழ்வுடன் ஏற்று என்னை வாழ்த்தி அருளுங்கள் குருதேவரே !

(துரோணரின் கால்களில் விழுகிறான்)

துரோ : (ஏகலைவனை தூக்கி நிறுத்தி மார்புடன் அணைத்து) குழந்தாய் ஏகலைவா ! உன் சபதம் என்னை மெய் சிலிர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிறது. எவர் வேண்டுமானாலும் என் தலை சிறந்த சீடனாக இருக்கலாம். ஆனால் குருபக்தியில் எந்தச்சீடனும் உன்னை மிஞ்ச முடியாது. இது சத்தியம். சத்திரியர்களையும், அந்தணர்களையும் இன்று வெட்கப்படச் செய்துவிட்ட வேட்டுவ வீரனே, வீரத்துக்கும் நற்பண்புகளுக்கும் குலம் ஒரு தடையல்ல என்று நீ நிரூபித்து விட்டாய்.

அர் : நன்றி குருநாதரே..

துரோ : என்ன அர்ச்சுனா. ஏகலைவனுக்கு நன்றி கூறுகின்றாயா..? அன்றி எனக்கு நன்றி கூறுகின்றாயா..

அர் : அது வந்து குருநாதரே..

துரோ : அர்ச்சுனா.. அன்று பரசுராமரின் சாபம் கர்ணனின் திறமைகளை எல்லாம் கட்டிப்போட்டு அவனை ஒரு நடைப்பிணமாக்கி உனக்கு நிகரான போட்டியாளன் ஒருவனை இல்லாமற் செய்தது. இன்று ஏகலைவனின் சபதம் வில்வித்தையில் உன் போட்டியாளனை இல்லாமற் செய்து விட்டது. பார்த்தாயா பார்த்தா சாபமும் சபதமும் உன்னை நிகரில்லா வீரனாக, சிறந்த வீரனாக நிலை நிறுத்தியுள்ள விசித்திரத்தை. விதியும் அதிர்ஷ்டமும் சாபம், சபதம் என்ற உருவில் உன்னை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளது.. ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதே.. குருபக்தியிலோ ஏகலைவன் தான் சிறந்தவன். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை..

....... **நிறைவு** .......

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் 19.09.2016 இரவு 9.30 இற்கு முதன்முதலில் ஒலிபரப்பானது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரல் கொடுத்த கலைஞர்கள் ஒலிப்பதிவின் போது
கே.சந்திரசேகரன் - துரோணர், யோக்கிம் பெர்னான்டோ - பரசுராமர்
அம்பலவாணர் - ஏகலைவன், லூக்கஸ் திருச்செல்வம் - அர்ச்சுனன்



சிவராசா தக்கிசன் - தயாரிப்பாளரும் கர்ணன்
யோக்கிம் பெர்னான்டோ - பரசுராமர், அம்பலவாணர் - ஏகலைவன்,
லூக்கஸ் திருச்செல்வம் - அர்ச்சுனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ. விதை




பத்மினி - கந்தசாமி - குமரேசன் - ராதை - பரிமளம்



ஜெயஜோதி - அம்பலம் - ஹூக்கஸ் - ஸ்ரீஜனனி - நெய்றஹீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. விதை

**நாடக மாந்தர்கள் :**

- **பத்மினி – வீட்டுத் தலைவி**
- **கந்தசாமி – வீட்டுத் தலைவன்**
- **ராதை – வேலைக்காரச் சிறுமி**
- **பரிமளம் – அயல் வீட்டுப் பெண்**
- **குமரேசன் – கந்தசாமியின் மகன்**

**காட்சி : 1**

**இடம் : பத்மினி வீடு**

**பாத்திரங்கள் : பத்மினி, ராதை, கந்தசாமி**

பத் : (எரிச்சலுடன்) ராதை.. எடியேய் ராதை.. எங்க போய்த் துலைஞ்சாள் இவள்.. ராதை.. ராதை.. எந்தொரு அலுவலுக்கும் தேவையான நேரம் அவளைக் கண்ணிலையும் காணக் கிடையாது.. எல்லாத்தையும் நான் செய்து முடிச்சாப்பிறகு தான் ஆடி அசைஞ்சு வருவள்.. கறுமம்.. கறுமம்.. இந்த இழவை எங்கை தேடிப் பிடிச்சாரோ இவர்.. ராதை.. எடியேய் ராதை.. வரத்தான் வேண்டாம்.. நான் இந்தக் காட்டுக் கத்துக் கத்துறன்.. ஏன் எதுக்கெண்டு குரல்குடுக்க வேண்டாம்.. இந்த நேரம் எண்டு பாத்து எங்கை போய்த் துலைஞ்சாளோ..

ராதை : (ஓடிவந்து) சொல்லுங்கோம்மா.. ஏனம்மா.. ஏனம்மா கூப்பிட்டனீங்கள்.. என்னம்மா.. என்ன செய்ய வேணும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : என்ன செய்ய வேணுமோ.. எங்கையடி போன நீ இவ்வளவு நேரமும் மூதேவி.. எவ்வளவு நேரமாய்க் கத்துறனடி.. செவிட்டுக் கழுதை..? தம்பி குமரேசன் ஒஸ்ரேலியாவுக்குக் கொண்டு போக முட்டைமா வறுக்க வேணுமெண்டெல்லே சொன்னனான். மறந்து போனியே..

ராதை : இல்லையம்மா.. ஆனால் ஐயாதான்

பத் : ஐயாவோ.. எதுக்கும் நல்லசாட்டு ஐயா.. நல்லொரு ஐயா.. எடியேய்.. ரெண்டு கிழமைக்குத் தேவையான வைச்சுத் தின்னக் கூடியதாய்.. வேணுமெண்டெல்லே ஏஜன்சிக்காரங்கள் சொன்னவங்கள். பத்துப் பன்னிரண்டு கிலோ தன்னும் வேண்டாமே.. வறுத்தெடுக்க எவளவு நேரம் எடுக்கும் எண்டு தெரியும்தானே.. எல்லாத்தையும் மறந்து போட்டு எங்கையடி சுத்தப் போனனி. நாடுவிட்டு நாடு போறதுகள் அங்கத்தைச் சாப்பாடு ஒத்து வருமட்டும் நாக்கு மரத்துப் போகாமல் தின்ன வேண்டாமே..

ராதை : அடுப்பு பத்தவைச்சுக்கிடக்கு.. தாச்சியும் சுடவைச்சிருக்கு.. கனநேரம் செல்லாதம்மா

பத் : கழுதை.. எனக்குக் கதைசொல்லுறியோ.. சேத்துக்கை கிடந்ததுகளை கட்டிலை வைச்சால் உதுதான்.. தின்ன வழியில்லாமல் வந்ததுகள்.. கூப்பிட்டாலும் மறுமொழி இல்லாமல் உலாத்துக்கு வெளிக்கிட்டிட்டுதுகள்.. அதுக்கை வாய் வேறை.. வாடி இஞ்சை.. (அடித்தல்)

ராதை : ஐயோ.. அடிக்காதீங்கம்மா.. நோகுது.. அம்மா.. அம்மா.. உங்களைக் கும்பிட்டுக் கேக்கிறன். அடிக்காதீங்கம்மா.. அடிக்காதீங்கம்மா.. ஐயோ.. கடவுளே.. அம்மா..

பத் : என்னடி குரல்வைச்சுக் கூப்பிடுறியோ.. ஆரையடி கூப்பிடுறாய். ஆள்காட்ட வெளிக்கிடுறியோ.. உஸ்.. பொத்தடி வாயை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம்.. மூச்சு.. மூச்சுக் காட்டக் கூடாது.. மீறிச்சத்தம் வைச்சியோ அடிச்சுக் கொண்டே போடுவன் உன்னை.. எருமை மாடு.. எங்கையடி போனனி இவ்வளவு நேரமும்.. சொல்லு.. சொல்லடி..

ராதை : மாட்டுக் கொட்டிலுக்கை நிண்டனானம்மா..

பத் : மாட்டுக் கொட்டிலுக்கையோ அங்கை என்னடி வேலை ஆரைப் பார்க்கப் போனனி.. சொல்லித் தொலையேண்டி.. ஐயோ கொய்யோ எண்டு அவனைத்தான் இப்ப சத்தம் போட்டுக் கூப்பிடுறியோ.. சொல்லடி.. உனக்கு.. உனக்கு.. வந்து.. உன்னை சொல்லியோ அடிச்சோ திருத்தேலாது.. பனை மாதிரி வளந்திருக்கிற உனக்கு இதுகள் எங்கை ஏறப் போகுது.. எருமை மாட்டிலை மழை பெய்தது மாதிரித்தான்.

(அடுப்பிலிருந்த விறகினால் சுடுதல்)

ராதை : ஐயோ.. அம்மா.. அம்மா.. விறகு நெருப்பாலை சுடாதையுங்கோ அம்மா.. வலிக்குது.. எரியுது. அம்மா.. அம்மா.. ஐயோ.. அடியுங்கோ ஆனால் நெருப்பாலை சுடாதையுங்கோ அம்மா.. அம்மா.. அம்மா.. வலிக்குது.. எரியுது. அம்மா. ஐயோ.. ஆண்டவனே.. பெரியையா தான் மாட்டுக்குப் புண்ணாக்கு வைக்கச் சொன்னவர். அது தான் போனனான்..

பத் : மூடு.. மூடு.. வாய்.. மூடடி.. செய்யிறதைச் செய்து போட்டு ஞாயம் வேறை.. அரிசி மா வறுக்கவேணும் எண்டு தெரியும் தானேடி

ராதை : ஐயோ.. அம்மா.. அம்மா.. அதுதானே அம்மா தாச்சியை அடுப்பிலை வைச்சனான்.. ஐயா சொன்னதாலை தான். போனனான்.. ஐயோ ஐயா.. ஆண்டவனே..

கந் : (வந்து கொண்டு) என்ன.. என்னப்பா.. என்ன கூக்குரல்.. விடிஞ்சாப் பொழுதுபடு மட்டும் கூத்தும் கூக்குரலும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : நான் படுறபாடு எனக்கெல்லோ தெரியும்.. உங்களுக்குக் கூத்தும் கும்மாளமுமாய்த்தான் தெரியும்.. நீங்கள் தான் அவளுக்கு இடத்தைக் குடுத்துக் கெடுத்து வைச்சிருக்கிறியள். சொல்லுக் கேக்கிறாளில்லை.. ஒரு வேலை செய்யிறாளில்லை.. பரிமளமும் இப்ப வெளிநாட்டுப் பொம்பிளையெண்டு ஒரு கையுதவிக்குத் தன்னும் வாறேலை.. அவவும் வெளிநாட்டுக் காறியாகிட்டா.. நான் தனிக்கையாலை என்னபாடு படுறனெண்டு ஆருக்குத் தெரியும்..

கந் : (வந்து கொண்டு) தனிக்கையாலை ஏலாதெண்டு தானே ராதையைப் பிடிச்சு வர நீ அவளோடை எந்த நேரமும்.. எடுத்த எல்லாத்துக்கும் மல்லுக் கட்டிக் கொண்டு நிண்டால்..

பத் : நீங்கள் என்னிலை தான் பிழை பிடியுங்கோ.. இதுதானே எப்பவும் இஞ்சை நடக்கிறது.. என்ரைகஷ்டம் ஆருக்குத் தெரியப் போகுது

கந் : எடியப்பா.. இதென்ன வில்லண்டம்.. இப்ப எல்லாம் முடிஞ்சு கடைசியிலை என்னிலை பாய வெளிக்கிட்டிட்டியோ.. ஈட்டுக்கும் பாட்டுக்கும் என்னைத் தான் கண்டு கொண்டாய். இஞ்சைபார் பத்மினி.. நீயும் ரெண்டுபிள்ளையைப் பெத்தனி தானே.. இதை மூண்டாவது பிள்ளை எண்டு பாப்பாய் எண்டு நினைச்சால். எப்பவும் அவளோடை மூஞ்சூறும் பூனையுமாய் நிண்டால் நான் என்ன செய்யிறது.

பத் : நான் குமரியில்லை இரண்டு பிள்ளை பெத்தனான் தான்.. அதை நான் இல்லையெண்டே சொல்லுறன்.. ஆனால் அதுகளை அப்பிடி வளத்திருக்கிறன்.. ஓ.. அதை மறந்திடாதையுங்கோ.. மூத்தவள் அமெரிக்காவிலை.. இப்ப தம்பியும் நாளைக்கோ நாளையிண்டைக்கோ ஒஸ்ரேலியாவிலை.. அதை நினைவிலை வைச்சிருங்கோ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : அதைப் போலை தான் இந்தப் பிள்ளையையும் நினை எண்ணிறன். அதுகளின்ரை கஸ்டத்திலை வீட்டு வேலைக்கு வந்தாப் போலை காலுக்கை போட்டு மிதிக்கிறதே.. சொல்லு பாப்பம்.. இந்தா ராதை எழும்பு.. அழுதது காணும் எழும்பு.. எழும்பி வா

ராதை : ஐயா (கூட அழுதல்)

கந் : என்ன.. என்னது கால்லை என்ன.. அழுதது காணும் எங்கை.. காலைக் காட்டு..

ராதை : ஐயா (அழுதல்)

கந் : இஞ்சைபார்.. எடி படுபாவி.. என்ன வேலை செய்திருக்கிறாய். அவள் என்ன செய்து போட்டாள் எண்டு இந்தவேலை செய்தனி.. நாலு அடி அடி.. ஏசு. பேசு பறவாயில்லை.. இப்பிடியே உயிரோடை எரிக்கிறது அதுவும் ஒரு தாய்.. போயும் போயும் எரியிற விறகு கட்டை தான் கிடைச்சுதோ.. என்ன பிறப்பப்பா நீ.. எழும்பு எழும்பு.. எழும்பு ராதை.. உந்த மருந்தை எடுத்தாப்பா

ராதை : அம்மா.. ஐயா (அழுதல்)

பத் : இந்தாங்கோ புடியுங்கோ..

கந் : ராதை.. காலை நீட்டு.. எங்கை நேராய்.. இதைப் போடு.. அது கெதியிலை மாறியிடும். அழாதை.. இந்தா இதைப் போடு..

ராதை : ஆ.. ஆ.. எரியுது.. ஐயா.. அம்மா

கந் : மனிசர் பாக்கிற வேலையே பத்மினி பாத்திருக்கிறாய்.. இஞ்சைபார் எவளவு பெரிய காயம் எண்டு.. அவங்களாரோ உந்த சிறுவர்களைப் பாதுகாக்கிற சங்கக்காரங்கள் அறிஞ்சாங்க ளெண்டால் நீ சாகும் மட்டும் கம்பி எண்ண வேண்டித் தான் வரும்.. அதை நினைப்பிலை வைச்சிரு

பத் : ஆர் உந்தப் பிள்ளைபிடி காரங்களோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : அவங்கள் பிள்ளை பிடிகாரங்களில்லை பிள்ளையளை சித்திரவதை செய்யிறாக்களைப் பிடிக்கிறவங்கள்..

பத் : எந்த துலைவாங்களோ.. உங்களுக்கும் என்னைக் கம்பி எண்ண வைக்கிறது தானே ஆசையாய்க் கிடக்குது..

கந் : உன்னோடை கதைச்சு வெல்லேலாது..

பத் : உள்ளதைச் சொல்ல குத்திக்கொண்டு வருகுதோ..

கந் : சரி அது குத்தட்டும்.. போ.. போய் ஆக வேண்டியதைப் பார்.. (போய்க் கொண்டு).. என்ன பிறப்பெண்டுதான் தெரியேலை.. இந்தா ராதை.. அழுறதை நிப்பாட்டு பிள்ளை.. மருந்து போட்டிருக்குது தானே.. தொடர்ந்து நேரத்துக்கு நேரம் மறவாமல் இதை காலுக்கு வடிவாய்ப் போடு.. ரெண்டு நாளிலை காய்ஞ்சிடும்.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 2**

**இடம் : பத்மினி வீடு**

**மாந்தர்கள் : பத்மினி, கந்தசாமி, குமரேசன்**

கந் : பத்மினி இஞ்சேரும்.. எனக்கெண்டால் உந்த ஏஜன்சிக் காரன்ரை கதையைக் கேக்க ஒருமாதிரியாய்க் கிடக்குது..

பத் : என்ன ஒரு மாதிரியாய்க் கிடக்குதெண்ணிறியள்.. அவன் கட் அன்ட் றைற்றானவன்.. அதாலைதான் அப்பிடி நறுக்காய்க் கதைக்கிறான்.

கந் : இல்லையப்பா.. விசாவும் இல்லை.. ரிக்கற்றைப் பற்றியும் கதையில்லை.. ஆனால் வாறகிழமை பயணம் எண்ணுறான்.. அதாலை தான் யோசிக்க வேண்டிக்கிடக்குது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : அவன் தானே தான் எல்லா ஒழுங்கும் செய்து கொண்டு போய் ஒஸ்ரேலியாவிலை விடுறன் எண்ணுறானே.. பிறகென்ன அவன்ரை கதையிலை பிழைபிடிக்கிறியள்

கந் : இல்லை.. தம்பி குமரேசன் அரசாங்க வேலையையும் றிசைன் பண்ணிப் போட்டெல்லே போகவேணும். நாங்களும் முன்னுக்குப் பின் யோசிச்சுத் தானே செய்யவேணும்.

பத் : கண்டறியாத கவுண்மேந்து உத்தியோகம். ஒஸ்ரேலியா போனால் நாலு நாளிலை உழைச்சுப்போடலாம். இஞ்சை இத்தினை வரியம் உழைச்சு என்னமிச்சத்தைக் கண்டான்.. இடைநரை வந்தது தான் மிச்சம்

கந் : கொஞ்சம் ஆற அமர ஆராய்ஞ்சு செய்யலாம் போலை கிடந்துது சொன்னன்.

பத் : இது எல்லாம் வடிவாய் ஆற அமர யோசிச்சுச் செய்யிற விசயமில்லை சந்தர்ப்பம் சரிவந்தால் பட்டபட்டெண்டு எல்லாத்தையும் முடிக்க வேண்டியது தான். இஞ்சை பாருங்கோ ஐயர் வருமட்டும் அமாவாசை நிக்காது.. உங்கடை நேரம் காலம் வருமட்டும் ஏஜன்சிக்காரன் காத்திருக்க மாட்டான். நாங்கள் மாட்டமெண்டால் போறதுக்கு எத்தினை பேர் காத்திருக்குதுகள் தெரியுமே.. நாங்கள் தான் காத்துள்ள நேரம் தூத்த வேணுமெண்டு சொல்லுவியளே.. அது மாதிரித்தான்.

கந் : இல்லையப்பா.. அது வந்து

பத் : என்ன வந்தும் போயும்.. எடுத்த முடிவு எடுத்ததுதான்.. அவனும் சம்மதிச்சு இவளவும் செய்தாப்பிறகு ஒவ்வொண்டு சொல்லிக் கொண்டு இருந்தால்..

கந் : அவன் மட்டுமில்லை நானும் சம்மதிச்சனான் தான். ஆனால் இப்ப ஒண்டுமில்லாமல் பயணமெண்டு சொல்லேக்கை தான் யோசிக்க வேண்டிக்கிடக்குது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : உந்தா குமரேசனே வாறான் கேளுங்கோ..

கும : ஏன் என்ன அப்பா..

பத் : வீசா ரிக்கற் எங்கையாம். அது இல்லாமல் போறது எப்பிடியாம்.

கந : ஓம் மோனை

கும : நானும் கேட்டனான் தானப்பா.. ஏதோ அதுகளுக்குத் தான் பொறுப்பாம்..

பத் : இஞ்சை பாருங்கோ.. ஏதேன் தலை மாத்திற கீத்திற கேசெண்டால் ஏஜன்சிக்காரங்கள் லேசிலை வெளிவிடாங்கள். அப்பிடி ஏதேனாக்கும்

கும : நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்.. எல்லாம் அங்கை விபரமாய்ச் சொல்லுறமெண்டு தான் சொன்னவங்கள்..

கந் : வேலையை விட்டிட்டு வெளிநாடு போறதே றிஸ்க் தம்பி.. அதிலையும் வீசா ரிக்கற் எப்பிடியெண்டு விபரம் தெரியாமல் போறது அதிலும் றிஸ்க்.. அதிலும் தம்பி நினைக்கிற மாதிரி தலைமாத்திற தெண்டால் இன்னும் றிஸ்க்.. பிடிபட்டால் மறியல்தான்.. மீட்சியே கிடையாது. எதையும் விபரமாய்த் தெரிஞ்சு காலை வைக்கவேணும்.

கும : நீங்கள் சொல்லுறதும் சரிதானப்பா.. எண்டாலும்

பத் : தம்பி உதுகளெல்லாம் பாத்து ஒஸ்ரேலியாவுக்குப் போற தெண்டால் என்ன சும்மாயே.. எத்தினை லச்சம் முடியும்.. தெரியுமே..

கந் : எத்தினை முடிஞ்சாலும் பயமில்லையேயப்பா.. பவுத்திரமாய்ப் போகலாம்.. ரெண்டு மூண்டு கூடக்குடுத்தாலும் வீசா ரிக்கற் ஒழுங்காய் இருந்தால் பயமில்லை.. றிற்றெண் ரிக்கற்றோடை போறதுகள் எத்தினை தங்களுக்குப் பிடிக்கெலை எண்டவுடனை திரும்பி வரேலையே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : இஞ்சை பாருங்கோ.. தகப்பனைத்தின்னியளாய் இருந்தாலும் உந்த பரிமளம் பெட்டையளை வெளிநாடு அனுப்பேலையே.. என்ன.. லச்சக் கணக்கிலை வச்சுக் கொண்டே அனுப்பினவள்.. றிற்ரேண் ரிக்கற்றோடையே போனதுகள்..

கந் : எங்களுக்கேனப்பா அடுத்தவயின்ரை கதை. எங்கடை பிள்ளையின்ரை கஷ்ட நஷ்டங்களை நாங்கள் தானே யோசிக்க வேணும்.. அதாலை சொன்னன்..

கும : யோசிக்கத்தான் வேணும்.. விசாரிச்சதிலை அவையளையும் இந்த ஏஜன்சிதானாம் அனுப்பினது. அதாலைதானப்பா நம்ப வேண்டிக்கிடக்குது.. ஆனால் அட்வான்ஸ் குடுத்தது விசா எடுக்கிறதெண்டுதான்.

கந் : அதுகள் போனவிசயம் சரி. அதுகளும் இப்பிடித்தான் போனதுகள் எண்டு தெரியுமே..

பத் : இஞ்சை பாருங்கோ எல்லாம் தெரிஞ்சு.. நாலுபேரை வடிவாய் விசாரிச்சுத்தான் இதிலை இறங்கினது.. இப்ப என்னிலை பிழை பிடிக்கிறதை விட்டிட்டு போய் நடக்க வேண்டியதைப் பாருங்கோ.. சும்மாய் பயணம் வெளிக்கிட்ட நேரமும் அதுவுமாய் தம்பியின்ரை மனதையும் குழப்பி.. ச்சீ.. நச்சுப் பல்லி மாதிரி நச்சரிச்சுக் கொண்டு நிக்காமல் உங்கடை அலுவலைப் பாருங்கோ...

கந் : அதுதானே மௌனமே கலகநாசம் எண்டு.. கண்ணும் தெரியேலைக் காதும் கேக்கேலை எண்டு நான் என்ரை பாட்டிலை இருக்கிறன். ஏதோ பெத்த மனம் கேக்குதில்லை சொன்னன்.

....... காட்சி முடிவு .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 3**

**இடம் : பத்மினி வீடு**

**மாந்தர்கள் : பத்மினி, ராதை, பரிமளம்**

**களம் : வெளியிலிருந்து பரிமளம் கூப்பிடுதல்**

பரி : பத்மினி அக்கா.. பத்மினி அக்கா..

பத் : ராதை இஞ்சைபார்.. அங்காலை இஞ்சாலை என்ன நடந்தாலும் கேளாதது மாதிரி இரு. எடி செவிடு.. படலைக்கை ஆரோ கூப்பிடுறது கேக்கேலையே..

ராதை : கேட்டதம்மா.. ஆனால் அவ பரிமளம் அம்மா உங்களைத் தானே கூப்பிடுறா.. பிறகு அவவுக்கு நான் பதில்சொல்ல.. நீங்கள் என்னைப்பேச.. அதுதான்..

பத் : அமசடக்கி.. அப்ப ஆரெண்டு தெரிஞ்சு கொண்டு தான் இருந்தனியோ.. உனக்கிப்ப வாய்க்கொழுப்பும் கூடிப் போச்சு.. ஓ

ராதை : இல்லையம்மா

பத் : பார் வாய்க்கு வாய் காட்டிறதை.. இந்தா தேங்காயைத் திருவு.. நான் பரிமளத்தோடை கதைச்சிட்டு வாறன்..
(பத்மினி கதவைத் திறத்தல்)

பரி : (வந்து கொண்டு) ஆ.. பத்மினி அக்கா வீட்டில தான் நிக்கிறியளோ..?

பத் : ஆரது.. எடட.. பரிமளமே.. கரடியனார் பிறைகண்டது மாதிரிக் கிடக்குது.. வாவா.. எடை ஆளே மாறிப் போனாய்.. என்ன உன்னைக் காண்றதே பெரிய பாடாய்க்கிடக்குது.. இவ்வளவு நாளாய் எங்கடியாத்த போய் இருந்த நீ..

பரி : நான் எங்கை போகப் போறன்.. ஒரு ரெண்டு மாச லீவில மகளின்ர வீட்டுக்குத்தான் போய் நிண்டிட்டு வந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : மகள் வீட்டுக் கெண்டால்..? மறவன்புலோவுக்கோ.. இப்பதான் றெயினோடுதே.. போக்குவரத்துச் சுகம்தானே..

பரி : இல்லை.. மூத்தவளிட்டை.. அவள் தன்ரை பிள்ளைப் பெறுவுக்கு எண்டு 2 மாசத்துக்கு என்னைக் கூப்பிட்டவள்.

பத் : (ஆச்சரியமாக) அப்ப லண்டனுக்குப் போனனியோ..? தனியவே..?

பரி : ஓமக்கா லண்டனுக்குத்தான்.. எனக்குத் தனியாகப் போகக் கொஞ்சம் பயமாய்த் தானிருந்தது.. ஏதோ அம்பலத்தாடி வைரவற்றை துணையோடை போட்டு வந்திட்டன்.

பத் : எட.. இந்த ஊரைத்தவிர.. இங்கிலிசு ஒரு வார்த்தைகூட பேசத் தெரியாத உனக்கு அதிஸ்டம் எப்பிடி வேலை செய்திருக்குது பாத்தியே..!

பரி : அப்பிடிச் சொல்லாதையுங்கோ அக்கா..! கஸ்டப்பட்டுப் படிப்பிச்சு ஆளாக்கி விட்டதாலை இண்டைக்கு என்ரை மகள் டாக்குத்தராயிருக்கிறாள். அவள் எல்லா ஒழுங்கும் செய்தாள்.. இல்லையெண்டால் போய்வருவனே..

பத் : ஓமோம்.. அதுவும் சரிதான். அதுக்கும் அதிர்ஷ்டம் இருந்தா தானே கைகூடும் பரிமளம் இஞ்சைபார் நீ கூட.. பார் ஒரு வார்த்தை சொல்லாமல் தானே போட்டு வந்திருக்கிறாய்..

பரி : ஐயோ அக்கா..! கொழும்புக்குப் போற அண்டைக்குக்கூட உங்களிட்டைப் பயணம் சொல்லிப் போட்டுப் போகத்தான் ஓடி வந்தனான். உங்கட வீடுவாசல் எல்லாம் பூட்டிக் கிடந்ததாலை நான் என்ன பண்ணுவன். நீங்கள் கொழும்புக்கோ நீர்கொழும்புக்கோ போனதாய் உவர் அழகண்ணை தான் சொன்னார்

பத் : ஓமடியாத்தை.. மகன் குமரேசனுக்கு ஒஸ்ரேலியா போக நல்ல ஒரு இடம் சரிவந்துது.. அவனுக்கும் வாற கலியாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தட்டுப் பட்டுக் கொண்டே போகுது. இப்ப யாழ்ப்பாணத்துப் பெட்டையள் கலியாணம் எண்டவுடனை மாப்பிளை எந்த நாடு எண்டு கேக்கிற அளவுக்கு வந்திட்டுது..

பரி : அக்கா..

பத் : அவனுக்கும் இஞ்சை அரசாங்க வேலை சம்பளம் காணாது எண்டும் அவளவு மனசுக்கு ஒட்டேலை. ஏதோ வேண்டா வெறுப்பாய்த்தான் போய் வந்தான். வெளிநாடு வெளிநாடு எண்டு நிண்டான். நல்ல இடம்.. சீப்பான ஏஜன்சி சரிவந்துது.. அதுதான் அவனை அனுப்பப் போனனாங்கள்.

பரி : அப்ப என்ன நீங்களும் இனி ஒஸ்ரேலியா போய்வருவியள் எண்டு சொல்லுங்கோ..

பத் : இல்லாமலே.. நீயே போய்வரேக்கை.. ஏன் நான் மட்டும் போகக்கூடாதே..?

பரி : இல்லையக்கா ஒரு பேச்சுக்குச் சொன்னனானெல்லே... இந்தாங்கோ சொக்கிலேற்றுக் கொஞ்சம் லண்டனாலை கொண்டந்தனான். வேறையொண்டும் பெரிசாக் கொண்ட ரேலையக்கா.

பத் : (அருவருப்போடு வேண்டாமென்று).. உதெதுக்கு பரிமளம் கொண்டு வந்தனி.. வீட்டை கொண்டு போய் உன்ரை பேரப்பிள்ளையளுக்குக் குடன்.. மகனும் ஒஸ்ரேலியாக்குப் போட்டான்.. அவரும் சீனிக்காறன்.. இஞ்சை எந்தக் குழந்தைப் பிள்ளை தின்னப் போகுது.

பரி : உது சீனி வருத்தக் காரருக்குக் கொடுக்கிற சொக்கிளேட்டக்கா. உங்களை நினைச்சுத்தான் வேண்டிக்கொண்டு வந்தனான்.

பத் : வேண்டாம் பரிமளம்.. உதுகளை இஞ்சை ஆரும் தொட்டும் பாக்காயினம்.. இஞ்சை கிடந்து வீணாய் எறும்பு மொய்க்கிறது தான். நீ கொண்டு போ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : சரியக்கா.. அதுசரி இவள் ராதை எங்க.. வீட்ட போட்டாளோ..?

பத் : ஓ.. அந்த மூதேவி எங்கை போறது.. உங்கினையுக்கை தான் நிக்கும்.. என்ன செய்யிறது. நாங்கள் எவ்வளவு நல்லாப் பார்த்தாலும் நன்றியே சொல்லுதுகள்.

பரி : ஏனக்கா.. அப்பிச் சொல்லுறியள்.. ஆ இந்தா வாறாள்.. உனக்கு நூறு வயசடி.. என்ன நொண்டிக் கொண்டு வாறாள்

பத் : அவளுக்க நூறுவயசு.. அதுக்குமுந்தி என்னைக் கொண்டு போடுவாள்..

பரி : ஏனக்கா..

பத் : அதுகளைக் கேளாதை பரிமளம்.. மூதேவியோடை நான் படுற பாடு எனக்கெல்லோ தெரியும். அதுதான் எங்கையோ இடறிவிழுந்து காயம்

பரி : ஏனக்கா.. வேலை செய்யாளே..

பத் : வேலை செய்யாளோவோ..! அவளுக்கு நான் வேலை செய்ய வேண்டிய நிலையிலை இருக்கு. போதாதத்துக்கு நீயும் வாறதாயில்லை. என்ரைபாடு பெரிய திண்டாட்டம் தான் பரிமளம்.

பரி : நானென்னக்கா செய்யிறது.. சின்னவள் வரட்டாம் வரட்டாம் என்று ஒரே கேட்டபடி. பிள்ளை பள்ளிக்கூடம் போறவளெல்லே.. கொஞ்சக்காலம் போய் அவளோடையும் நிண்டு போட்டு வரலாம் எண்டிருக்கிறன்.

பத் : அப்ப இனி நீயும் வீட்டு வேலையளுக்குப் போகமாட்டாய் போல.. என்ன..?

பரி : என்னாலையும் ஏலாது.. பிள்ளையள் வசதியாயிருக்குதுகள். அதுகளுக்கும் அவளவு விருப்பமில்லைத்தான்.. எனக்குச் செலவு தருகுதுகள்.. அதுகள் சொல்லுறதையும் கேக்கத்தானே வேணும். அக்கா அப்ப நான் வரட்டே.. சூரியனும் உச்சிக்கு வந்திட்டுது.. நல்லா நேரம் போட்டுது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : சரி.. சரி.. போட்டுவா.. நேரங்கிடைக்கேக்கை கையுதவியாய் வந்தும் இடைசுகம் ஏதுஞ் செய்து தாப்பா.. எங்கையிவள் ராதை..? இதிலை நிண்டாள் மாயமாய் மறைஞ்சிட்டாள்.. ராதை.. எடியேய் ராதை..

பரி : அக்கா பெட்டை சின்னப்பெட்டையாயிருக்கிறாள்.. கண்டபடி அடிச்சுக் கிடிச்சுப் போடாதையுங்கோ.. பிறகு பொலிசு கிலிசெண்டு அதுகள் போனால் நாங்கள்தான் கம்பியெண்ணவேண்டி வரும்

பத் : நீ என்ன சொல்லுறாய் சுந்தரி.. என்ன நீயும் வரமாட்டன் எண்டு அவளிட்டையும் ஒண்டும் சொல்லிச் செய்விக்க வேண்டாம் என்னையே முறியச் சொல்லிச் சொல்லுறியோ..

பரி : உள்ளதைச் சொன்னன்.. எப்பிடியெண்டாலும் எடுங்கோ.. நான் வாறன்..

பத் : அவரும் பொலிசு.. கம்பி எண்ணுறது எண்டார்.. இவளும் பொலிசெண்ணுறாள்.. என்ன இழவோ.. ஏதோ நடக்கிறது நடக்கட்டும்.

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி : 4**

**இடம் : பத்மினி வீடு**

**பாத்திரங்கள் : கந்தசாமி, பத்மினி, ராதை**

கந் : ராதை.. ராதை.. உந்த இறப்பிலை மண்வெட்டி செருகிக் கிடக்கு எடுத்து வா. நேற்றுப் பெய்த மழைக்கு அந்த மூடக்கு வயலிலை உடைச்சுக் கடவானாக்கிப் போட்டுது.. ரெண்டு கடகம் மண்போட்டு அடைச்சு விடுவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை : (வந்து கொண்டு) இந்தாங்கோ ஐயா.. காலால் இரத்தம் வடிகிறது. முகமும் வீங்கிக் கிடக்கிறது கந்தசாமி கண்டு விட்டார்.)

கந் : உதென்னடிமோனை காலாலை ரத்தம் ஒழுகுது.. முகம் வேறை வீங்கிப்போய்க் கிடக்குது.. என்னடி நடந்தது.. இண்டைக்கும் சூடுதானோ.. அழுதனியே..?

ராதை : ஒண்டுமில்லை ஐயா.. இது பழக்கப்பட்டது தானே.. எங்களைப் போலை வேலைக்கெண்டு வாற ஆருக்கெண்டாலும் இது தானே ஐயா சீதனம்..

கந் : அடி பாவி... (கூப்பிடுதல்) பத்மினி.. பத்மினி..

பத் : என்னப்பா.. பத்மினி.. பத்மினி எண்டு ஏலங் கூறுறியள்.. என்ன பிரச்சனை.. மம்பட்டியை வாங்கினால் போய்க் கடவானைக் கட்டிறதுக்கு..

கந் : உனக்கென்னடி ஆத்தை பைத்தியமே ஆ.. இந்தச் சின்னப் பொட்டையைப் போட்டு இந்த அடி அடிச்சிருக்கிறாய். உனக்கென்ன விசர் கிசர்.. பிடிச்சிட்டுதே.. சின்னப்பிள்ளையளை வேலைக்கு வைச்சிருக்கிறதே இப்ப பெரிய குற்றம் அதுக்கிள்ளை அடி உதை வேறை. எத்தினை தரமப்பா உனக்குச் சொல்லுறது. அதுகளோ அல்லாட்டில் ஆரேனுமோ பொலிசுக்கு கிலிசுக்குச் சொன்னால் நீமட்டுமில்லை எல்லாரும் குடும்பத்தோடை கூண்டோடை கயிலாயம் தான். அதை நினைவிலை வைச்சிரு..

பத் : ஓ.. சீமாட்டி அதுக்கிடையிலை சொல்லிப் போட்டாவோ..? போற போக்கைப் பாத்தால் அவள் சொல்லுறதைக் கேட்டு நீங்களே பொலிசுக்கு சொல்லிக் குடுப்பியள் போலை கிடக்குது..

கந் : அவள் ஒண்டும் சொல்லயில்லை.. கால்தான் சொல்லுதே..

பத் : இஞ்சாருங்கோ ஆரை எந்த இடத்திலை வைக்க வேணுமெண்டு எனக்குத் தெரியும். நீங்கள் பேசாமல் இருங்கோ.. அவளவயின்ர இஷ்டத்துக்கு விட்டால் எங்கட தலையிலை மிளகாய் அரைச்சுப் போடுவாளவை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : உன்னைத் திருத்தேலாதப்பா.. என்னமோ கெடுகுடி சொல் கேளாது.. (போய்க்கொண்டு) கொல்லும் வியாதி மருந்தைக் கேளாது.. எண்டாங்கள். பட்டு அனுபவி அப்பதான் உணருவாய்.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 5**

**இடம் : பத்மினி வீடு**

**பாத்திரங்கள் : கந்தசாமி, பத்மினி, குமரேசன்**

**களம் : டெலிபோன் அடிக்குது பத்மினி எடுத்து**

பத் : ஹலோ.. ஹலோ.. ஆர் கதைக்கிறது..

குும : அம்மா நான்தான் குமரேசன் பேசிறனம்மா.. அப்பாவை ஒருக்கால் பேசச்சொல்லுங்கோ அம்மா..

பத் : என்ன மகன். குரல் ஒருமாதிரிக் கிடக்கு.. எத்தினை மாசம் மோனை.. ஒரு கோல் எடுக்கேலாமல் போச்சுதே.. நாங்கள் இஞ்சை என்னவோ ஏதோ எண்டு கலங்கிக் கொண்டிருக்கிறம். எப்பிடிச்சுகமாய் இருக்கிறியோ..? ஏன் போனதுக்குக் கதைக்கேலை.. வேலையெல்லாம் பிடிச்சுதோ..? சம்பளம் நல்லாத் தாறாங்களோ.. எப்பிடி கொண்டு போன முட்டைமாக் காணுமே. அனுப்பி விடவோ

குும : எல்லாம் நல்லாயிருக்குதம்மா.. நானும் நல்லாய் இருக்கிறன். அப்பாவை ஒருக்கால் பேசச் சொல்லுங்கோ அம்மா.. அவசரமாய்க் கதைக்க வேணும்..

பத் : அப்பிடியென்ன அவசரமடாப்பா..? போனதுக்கு ஒஸ்ரேலியாவிலை இருந்து முதல் முதல்லை கதைக்கிறாய்.. விசேசத்தை விபரமாய்ச் சொல்லுவம் எண்டில்லை.. அப்பா அப்பா எண்டு அவசரப்படுறாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குும : அதம்மா..

பத் : காசு போகுதெண்டால் சொல்லு.. நம்பரைத்தா இஞ்சையிருந்து எடுக்கிறம்.. எங்கடைபோனுக்கு நம்பர் விழுகிறதில்லையடா.. அல்லாட்டில் உன்ரை ஸ்கைப் அட்றசைத்தா.. காசும் போகாது.. முகத்தையும் பாத்துக்கதைச்சதாய் இருக்கும்.

குும : பிறகு ஆறுதலாய் எடுத்து எல்லாம் விபரமாய்ச் சொல்லுறனே அம்மா..

பத் : என்னடா நீ.. குரலும் ஒரு மாதிரியாய் இருக்குது.. நீயும் ஒண்டும் சொல்லுறாயில்லை..

குும : அது சிக்னல் ஏதோ குறைவு போலை.. விபரங்கள் பிறகு ஆறுதலாய் எடுத்து வடிவாய்ச் சொல்லுறன் எண்டு சொல்லுறனே.. பிறகென்னம்மா..

பத் : ஏதோ கதைச்சதே காணுமடா.. இண்டைக்குத்தான் வயிறு நிறைஞ்சிருக்கு.. கொஞ்சம் பொறு அப்பாவைக் கூப்பிடுறன். கொஞ்சம் பொறு.. இஞ்சாருங்கோ.. எங்க வெளியிலை நிக்கிறியளே..?

கந் : என்னப்பா என்ன விசயம் சொல்லு..?

பத் : தம்பி குமரேசன் கதைக்கவேணுமாம். கெதியாய் வாருங்கோ.. (கந்தசாமி வந்து வாங்கிக் கதைத்தல்)

கந் : ஹலோ சொல்லுமகன். ஏனப்பன்.. போனதுக்கு ஒரு கோல் எடுக்க இவளவு காலமே.. சொல்லு

குும : அப்பா.. அதுகளை பிறகு கதைக்கிறன்.. இப்ப அவசரமாய் ஒரு முக்கியமான விசயம் சொல்லுறன் அதைச் செய்யுங்கோ

கந் : அப்பிடி என்ன மோனை.. சொல்லு..

குும : கொழும்பிலை நான் சொல்லுற விலாசத்துக்கு உடனை நாளைக்கு கொண்டுபோய் ஒரு லட்சம் ரூபா குடுங்கோ.. அங்கை எல்லாம் விபரமாய்ப் பாக்கலாம் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : ஒரு லச்சமோ.. என்னத்துக்கடா.. பாக்கலாமோ.. என்னத்தையடா.. விபரமாய்ச் சொன்னாலெல்லோ புரியும்.

கும : அது இஞ்சை இருக்கிற ஒரு பெடியனுக்கு அவசரமாய் வேண்டிக் கிடக்காம். அதுதான்..

கந் : அட அப்பிடியே.. நான் ஏதோ என்னவோ எண்டு பயந்து போனன்.. அவன் உன்ரை விபரமெல்லாம் சொல்லுவனே..

கும : ஓமோம்.. அப்ப.. வைக்கிறன்.. ஆறுதலாய் நாளைக்குக் விபரமாய்க் கதைப்பமே..

கந் : சரி.. சரி.. எல்லாம் ஏதோ தலைச் சுத்தாய்த்தான் கிடக்குது சரிமகன் வைக்கிறன்.

பத் : என்னவாம் அப்பா.. என்ன சொன்னவன்..? என்ன தலைச்சுத்து..

கந் : அது ஒண்டுமில்லையப்பா.. ஒஸ்ரேலியாவாலை ஆரோ வந்திருக்கினமாம்.. போய்ச்சந்திக்கச் சொன்னவன்.. ஒரு லச்சம் காசும் குடுக்கட்டாம்...

பத் : ப்பூ.. இதை என்னட்டைச் சொன்னா நான் சொல்ல மாட்டேனாமா.. மடப்பெடியன்... நானும் என்னவோ ஏதோ எண்டு பயந்தெல்லே போட்டன். ஏனப்பா தலைச்சுத்து எண்ணுறியள்.. என்ன லச்சமெண்டாப் போலையே.. சிநேகிதங்களெண்டால் உதவத்தானே வேணும். அதுவும் கண்காணாத தேசத்திலை

கந் : போனதுக்கு முதல்கோல்.. ஒண்டும் சீராய் விளங்கேலை அதுதான் பத்மினி..

பத் : மெய்யே.. எங்கையாம் போய்ச் சந்திக்கட்டாம்..

கந் : வேறையெங்கை.. கொழும்பிலதான்..

பத் : கொழும்புக்குப் போகவேணுமாமே.. இஞ்சாருங்கோ இந்தப் புதினத்தையும் கேளுங்கோவனப்பா..

கந் : சொல்லு என்னவாம்..

பத் : எங்கடை பரிமளம் இருக்கிறாளெல்லே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : ஆரையப்பா சொல்லுறாய்..

பத் : வேறையார்.. எங்களிட்ட வேலைக்கு வந்த பரிமளம் தெரியாதே உங்களுக்கு..

கந் : அவளையேன் வேலைக்காறியெண்டு சொல்லுறாய்.. எங்கட வயித்தியநாதரின்ரை பெண்சாதி எண்டு சொல்லன்.

பத் : ஓமோம் அப்பிடிச் சொல்லாட்டி அவ குறைஞ்சு போவா தானே.. அவவின்ரை எழுப்பத்தைப் பாக்க வேணும் நீங்கள்.

கந் : ஏன் அவளுக்கென்னவாம்..?

பத் : லண்டன் மாப்பிளைக்கு மகளைக் கட்டிக் குடுத்தவை எல்லோ..

கந் : அதுக்கென்ன.. பெடியனும் பெட்டையும் விரும்பினாங்கள் அவள் கட்டிக்குடுத்தாள். அதுகளும் முன்னேறத்தானே வேணும்.

பத் : இவ்வளவு நாளும் இஞ்ச வந்து வேலை செய்து பிழைச்சவ தானே மூன்று மாதம் லண்டனுக்குப் போட்டு வந்தவளாம் இனிவர நேரமில்லையாம். அதுமட்டுமில்லை உவள் ராதைக்கும் அடிக்கக்கிடிக்க வேண்டாமெண்டு புத்திமதி வேறை..

கந் : அதுக்கென்ன.. உள்ளதைத்தானே சொல்லியிருக்கிறாள்

பத் : அப்ப நீங்களும்..

கந் : ஓம் நான் மட்டுமில்லை இந்த ஊர் உலகம் கூட..

பத் : உங்களுக்குத் தான் அவளைக் குறைசொன்னால் பிடியாதே..

கந் : நீயேன் அவளைக்குறை சொல்லுறாய். இப்ப மக்கள் நல்லாயிருக்கினம். அவளைப் பார்ப்பினம் தானே. அதாலை சொன்னன்.. இந்தாபார் உன்ர மகளும் அமெரிக்கா போய் எத்தினை வருஷமாய்ச்சு.. ஒரு நாள்ல வாம்மா எண்டு உன்னைக் கூப்பிட்டிருக்கிறாளே. எல்லாத்துக்கும் நல்ல மனசும் கொடுப்பினையும் வேணுமடியாத்தை..

பத் : உங்கட கதையைப் பார்த்தால் ஏதோ எனக்கு நல்ல மனம் இல்லையெண்டாப் போலையெல்லே பேசிறியள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : அதுதானே உண்மை பிறகென்ன.

பத் : இருந்து பாருங்கோ அமெரிக்காதான் போகேலை.. மகன் குமரேசன் கூப்பிட ஒஸ்ரேலியா போறனோ இல்லையோ இருந்து பாருங்கோ..

கந் : ம்.. சரி சரி.. நீ கனாக் காண். நான் வாறன். (போய்க் கொண்டு).. என்னவோ கூழுக்கழேக்கை கொண்டை பூவுக்கழுதுதாம்.. ம்.. நான் இப்ப லட்சம் பிரட்ட வழிபாக்க வேணும்..

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 6**

**இடம் : பத்மினி வீடு**

**பாத்திரங்கள் : பத்மினி, ராதை, கந்தசாமி**

**களம் : வானொலிச்செய்தி**

(இலங்கை இனிய தமிழ்வானொலி செய்திகள்.. முதலில் தலைப்புச் செய்திகள்)

- இடைக்கால வரவு செலவுத்திட்ட வரைவுகள் படிப்படியாக அமுலாக்கம்
- அவுஸ்திரேலியாவுக்குப் படகுமூலம் சென்று நாவுறு தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமில் தீபரவி மூவர் மரணம் இலங்கையர் உட்பட முப்பத்து நான்கு பேருக்கு காயம்.. காயமடைந்த இலங்கையர் விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.
- 14 வயதுச் சிறுவன் ஒருவனை வேலைக்கமர்த்தி சித்திரவதை செய்த 49 வயது பெண் சிறுவனின் சாதுரியத்தினால் சிறுவர் அதிகாரசபை ஊழியருட்பட்ட குழுவினரால் கைது.
- கடும் மழை காரணமாக அநேகமான நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நியூசீலந்துக்கெதிரான (குசினிக்குகள் ஏதோ விழுந்து சத்தம் கேட்கிறது ராதையைக் கேட்கிறாள்) இறுதி ஒருநாள் போட்டியில் சங்க்க்காரவின் அபார சதத்துடன் இலங்கை ஆறுதல் வெற்றி

பத் : ராதை என்னத்தையடி போட்டு உடைக்கிறாய். எந்த நேரம் பார் கவுட்டுக் கொட்டுறதும். போட்டு உடைக்கிறதும் தான் தொழில். சனியன். ஏதாவது உடைச்சிருக்கட்டும் உன்ரை முதுகை உடைக்கிறன் பார். நல்லமாட்டுக்கு ஒரு சூடு எண்ணுவாங்கள்.. உனக்கு எத்தினை சூடுபோட்டும் பிரயோசனமில்லை

ராதை : ஒண்டுமில்லையம்மா.. தகரக் கோப்பை தான் விழுந்தது.

பத் : விழும்.. விழும்.. எல்லாம் விழும்.. வந்துபாத்தால் எல்லோ விழுகிறது என்னண்டு தெரியும். சாமான்களையெல்லாம் கழுவித்துடைச்சுப் போட்டு ஆட்டுக்கல்லைக் கழுவி உழுந்தை நல்லா அரைச்சு வையடி.

ராதை : சரி அம்மா..

கந் : பத்மினி.. உந்த உடுப்பு பாக்கைத்தா.. அங்கசன்ரை வான் கொழும்புக்குப் போகுதாம் நானும் கையோட போட்டு வந்திடுறன்.

பத் : ஏனப்பா வீண்காசு..? றெயினிலை போனால் ஐநூறு ரூபாய் தானேயப்பா.

கந் : உடனை போறதெண்டால் ரிக்கற் எடுக்கிறது முயற்கொம்பெல்லே..

பத் : சரி.. சரி.. ஏதோ சுகமான வழியைப் பாருங்கோ..

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி** : **7**

**இடம்** : **பத்மினி வீடு**

**பாத்திரங்கள்** : **பத்மினி, பரிமளம், ராதை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : என்ன பரிமளம் இந்த நேரம்

பரி : இல்லையக்கா.. சின்னவள் விசா அனுப்பி ஆரோ அவளோடை சிநேகிதம் ரிக்கற்றும் செய்தது.. ஒருக்காப் போட்டு வருவம் எண்டு..

பத் : ஆ அப்பிடியே.. அப்ப எந்தமட்டிலை பயணம்

பரி : நான் நாளைக்கு கொழும்பு போய் புதன் கிழமை பிளையிட் அதுதான் சொல்லிப் போட்டுப் போவமெண்டு..

பத் : ம்.. உனக்கு இப்ப வெளிநாடு பக்கத்து வீடுமாதிரி யாயிட்டுது..

பரி : ஏனப்பிடிச் சொல்லுறியள்.. நீங்களும் இனியென்ன ஒஸ்ரேலியா விசிற் பண்ண வேண்டியது தானே..

பத் : இல்லாமலே.. மகன் ஆரையோ போய்ச் சந்திக்கச் சொல்லி கோல் பண்ணி அவரும் இண்டைக்கு கொழும்புக்குத் தான் போட்டார்.. இனியென்ன.. இண்டைக்கு அவர்.. நாளைக்கு நான் ஒஸ்ரேலியா தானே.. இஞ்சை பார் ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வராமலே போகும்..

பரி : ஏனக்கா அப்பிடிச் சொல்லுறியள்

பத் : இல்லை நீதான் ஏதோ வெளிநாட்டுக்காறி எண்டு தம்பட்டம் அடிச்சாய் அதுதான் சொன்னனன்.

பரி : இதென்னக்கா புதுக்கதை.. நான் எப்ப அப்பிடிச் சொன்னனான்

பத் : நீ சொல்லேலைத் தான்.. ஆனால் செய்கையிலை காட்டினாய்.. அதுமட்டுமில்லை ராதையைக் கொண்டு வேலை செய்விக்க வேண்டாம் எண்டும் குத்திக்காட்டினாய்.

பரி : நான் ஒண்டும் செய்கையிலை காட்டவும் இல்லை குத்திக் காட்டவும் இல்லை.. ஏதோ நடக்கிறதைச் சொன்னனன். அதுக்குப்போய் இப்பிடி எடுத்தால்..

பத் : சரி சரி.. உன்ரை பந்தாவைக் காட்டுறவைக்குக் காட்டு.. கதையைச் சொல்லுறவைக்குச் சொல்லு.. கதைக்க நேரமில்லை.. அவள் பாவியை உழுந்தரைக்கச் சொன்னனான்.. என்ன பண்ணியிருக்கிறாள் எண்டு பாக்க வேணும்.. சரி சரி..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரி : என்ன செய்யிறது.. நல்லதுக்குக் காலமில்லை.. நான் வாறன். ம். தடியைக்குடுத்து அடி வாங்க வேண்டியிருக்குது.. அவையவையும் பட்டுத் தெரிஞ்சாத்தான் தெரியும்..

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 8**

**இடம் : பத்மினி வீடு**

**பாத்திரங்கள் : பத்மினி, கந்தசாமி, குமரேசன், ராதை**

(வான் கோண் சத்தம்)

பத் : எடி ராதை.. வாசலிலை கோண் அடிச்சுக் கேக்குது.. ஆரெண்டு பாரடி.. அசையாள்.. ஒரு ஆத்திரம் அவசரம் எண்டு நினையாள்.. தன்ரை அலுவலுகள் எண்டால் எல்லாம் சரியாய் செய்வாள்..

ராதை : ஓமம்மா நான் பாக்கிறன்.. ஒரு வெள்ளைவான் வந்து நிக்குதம்மா.. நான் பாக்கிறன்..

பத் : வெள்ளைவானோ.. சிலவேளை பிள்ளைபிடிகாரரோவும் தெரியாது. இவள் பரிமளமும் சொன்னவள் வேலைக்காரப் பிள்ளையளை வைச்சிருந்தா வருவாங்களெண்டு.. அவரும் சொன்னவர். இண்டைக்கு றேடியோ நியூசிலையும் சொன்னது.. ராதை.. நீ போகவேண்டாம்.. வேண்டாம் அது வானிலை வந்தது ஆரெண்டு நான் பாக்கிறன்.. நீ உன்ரை அலுவலைப் பார்.

ராதை : இல்லையம்மா.. நான் கிணத்தடியிலைதான் நிக்கிறன். நான் பாக்கிறனம்மா.

பத் : என்ன இவள் இண்டைக்கு உசாராய் நிக்கிறாள். இவள்தான் ஏதும் சொல்லி அவங்கள் வந்து நிக்கிறாங்களோ.. ம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் இல்லாத நேரத்திலை.. இப்ப நான் என்ன செய்யிறது.. நான் இல்லை எண்டு சொன்னாலும் அவள் சொல்லிக் குடுத்திடுவாளே.. ஆ..

(மீண்டும் வான் கோண் சத்தம்)

ராதை : அம்மா கோண் அடிக்குது பாக்கட்டே..

பத் : அவங்களும் விடுறாங்களில்லை.. அவளும் இண்டைக்கு இதென்ன சோதினை அப்பா..

ராதை : அம்மா நான்... போகட்டே...

பத் : அது நான் பாக்கிறன். கொஞ்சம் பொறு கண்ணாடியை எங்கையோ வைச்சிட்டன்.. பொறு.. பொறு போறன். ம்.. வானில்லை அம்புலன்ஸ் போலைகிடக்குது. என்ன இடியோ.. அவளுக்கு சூடு வைச்சதை ஆரோ சொல்லிப் போட்டினம். அதுதான் அம்புலன்ஸிலை வந்திருக்கிறாங்கள். மாட்டுக் கொட்டிலுக்குப் போறன் எண்டு அடிக்கடி போய் உவள்தான் சொல்லிக் குடுத்தாளோ.. காலிலை சூட்டுக்காயமெண்டும் சொல்லியிருப்பாள். அதுதான் அம்புலன்ஸ் ஆக்கும். ம்.. அல்லாட்டில் சாடைமாடையாய் இந்தப்பக்கம் வந்து அசுகை பாத்து பரிமளம் தான் ஏதேனும். போட்டுக் குடுத்தாளோ.. ஆர் சொல்லியோ இப்ப படலையுக்கை வந்திட்டாங்கள். (பெருமுச்சு) ம்.. எல்லாம் என்ரை காலம். (மீண்டும் வான் கோண் சத்தம்)

பத் : வாறன்.. வாறன்.. அவங்களும் விட்டபாடாயில்லை.. கொஞ்சம் பொறுங்கோ.. அப்புலன்ஸ் தான். ம்.. அது.. அது அது என்ன அவர்.. கதவு.. இறங்கிறார் போலை.. அவரே தான்.. இண்டைக்குத் தான் வாறனெண்டவர். ஆனால் அம்புலன்ஸ்.. அங்கசன்ரை வானிலை எல்லோ போனவர்.. கொழும்பாலை வந்து மெயின் றோட்டிலை இறங்கேக்கை அவரையும் சேர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாங்கள் போல.. கடவுளே.. எல்லாரும் சொல்ல இந்த மரமண்டையுக்கை ஏறிச்சுதே.. இப்ப எல்லாம் சரி.. பிள்ளை பிடிகாரங்கள் மனிசனையும் பிடிச்சுக் கொண்டு அம்புலன்சிலை வந்திருக்கிறாங்கள். இனியென்ன கம்பி எண்ண வேண்டியது தான்.. (சமாளித்துக் கொண்டு) என்னப்பா.. அங்கசன்ரை வானிலை போனியள். அம்புலன்ஸிலை வந்திருக்கிறியள். உங்களை உவங்கள் எங்கையப்பா பிடிச்சவங்கள்..

கந் : என்ன கதை நீ கதைக்கிறாய் பத்மினி..

பத் : மெல்லமாய்க் கதையுங்கோ.. அவங்களுக்குக் கேக்கப் போகுது..

கந் : ராதை.. ராதை..

பத் : நான் மெல்லமாய்க் கதைக்கச் சொல்லுறன்.. நீங்கள் அவளைக் கத்திக் கூப்பிடுறியள்.. ஏனப்பா அவங்கள் அவளையும் கொண்டு போகப்போறாங்களே.. அல்லாட்டில் அவளிட்டை எல்லாத்தையும் கேக்கப் போறாங்களே.. வைரவா.. என்ரை கண்கண்ட தெய்வமே.. என்னை இந்தச் சிக்கலுக்கை மாட்டிப் போடாதை.. ஆடிச் செவ்வாய்க்கு வடைமாலை போடுவன்.. அம்பலத்தாடி வைரவா..

கந் : என்னப்பா.. அம்புலன்ஸ்காரன் காத்துக் கொண்டு நிக்கிறான். நீ ஏதோ வடைக்கதை கதைச்சுக் கொண்டு நிக்கிறாய். அவளைக் கூப்பிட்டால்.. அவளையும் காணேலை.. உந்தக் கேற்றைத் திறந்து விடு.. அம்புலன்சை உள்ளுக்கை எடுக்க..

பத் : என்ன அம்புலன்சை உள்ளுக்கை எடுக்கவோ.. ஏன் உள்ளுக்கை.. (தடுமாறி) அதுதான் நான் வந்திட்டனே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : என்ன நீ வந்திட்டியோ.. என்ன பத்மினி அலட்டிறாய்.. இந்தா ராதையும் வந்திட்டாள்.. ராதை.. அம்மாவோடை உந்தக் கேற்றைத் திறந்து விடு.. அம்புலன்ஸை உள்ளுக்கை எடுக்கவேணும்..

ராதை : சரி ஐயா..

பத் : வீட்டுக்குள்ளை அம்புலன்சை எடுக்கவேணும் எண்ட உடனை உசாரைப் பாருங்கோ.. என்னவாய் ஓடுறாள்.

(அம்புலன்ஸ் சத்தம்) (கதவு திறத்தல்)

கந் : ராதை.. அந்தக் கட்டிலை ஓடிப்போய் வடிவாய்த் தட்டிப் போடு.. கெதியாய்ப் போ.. தம்பியவை கவனமாய்.. கொஞ்சம் பொறுங்கோ..

பத் : என்ன இந்தாள் கட்டிலைத் தட்டிப் போடச் சொல்லுது.. அவங்களை கவனமாய் எண்டும் சொல்லுது.. கடவுளே..

கந் : என்ன பிள்ளை சரியே..

ராதை : ஓம் ஐயா..

கந் : தம்பியவை கவனமாய்.. ம்.. அப்பிடியே கவனமாய் ஸ்ரெச்சரோடை கொண்டு போங்கோ.. எல்லாத்துக்கும் சுகம்.. இல்லாட்டில் தூக்கிப்பறிக்க கஷ்டமாயிருக்கும்.. நித்திரை போலை.. அதுதான் நல்லது

பத் : என்னப்பா.. ஆரப்பா.. ஆர் நித்திரை.. அப்ப.. அப்ப (ஸ்ரெச்சரில் மகனைக் கொண்டு வரும் போது மகனின் முகத்தைக் கண்டு) ஆ.. குமரே.. சு.. வீரிட்டு அழுதல்.. தம்பீீபீ.. இஞ்சேருங்கோ.. இஞ்சேருங்கோ.. தம்பி.. என்னடா.. என்னடா.. இஞ்சேருங்கோ.. என்ன நடந்தது.. என்னப்பா நடந்தது.. தம்பீ.. (அழுதல்)

கந் : இஞ்சேரப்பா.. அவன் அயர்ந்து தூங்கிறான்.. கத்திக் குழறாதை.. ராதை.. இந்தா இந்தச்சாமான்களை எடுத்துக் கொண்டு போய் உள்ளுக்கை வை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை : ஐயா.. ஓமையா.. சின்னையாவுக்கு..

கந் : இவ வேறை.. இனி ஆளாளுக்கு விவரிக்க வேணும்..

பத் : என்னப்பா.. என்ன நடந்தது.. என்னப்பா நடந்தது..

கும : (இருமுதல்).. அ....அ.. ஆ.. அம்மா..

பத் : என்னடா ராசா.. என்னடா..

கந் : இஞ்சே பத்மினி.. அவன் தன்ரை வேதினை.. நீ என்னடா எண்டா புதினம் கேக்கிறாய்..

பத் : என்னப்பா நீங்கள்.. சொல்லுறியளுமில்லை.. அவனைக்கேக்க விடுறியளுமில்லை.. (கெஞ்சி) என்னப்பா.. என்னப்பன்.. தம்பி எப்பிடியப்பா இஞ்சை..

கும : (இருமுதல்).. அழுது அ..ம்..மா.. அம்மா.. (தொடர்ந்து இருவரும் அழுதல்)

கந் : சரி தம்பியவை.. இந்தாங்கோ.. சரியாய் இருக்குதோ எண்டு எண்ணிப் பாருங்கோ.. கவனமாய்ப் போட்டு வாங்கோ.. (வான் புறப்படல்).. ராதை உந்த படலையைச் சாத்தி விடு

பத் : (அழுதழுது) என்னடா தம்பி.. ஒஸ்ரேலியா எண்டு போனாய்.. ஒஸ்ரேலியாவிலை இருந்து கதைக்கிறன் எண்டு ரெண்டு சொல்லுக் கதைச்சாய். இப்ப.. இந்தக் கோலத்திலை.. என்னடா.. என்னங்கோ நீங்கள் தன்னும் சொல்லுங்கோவன்..

கந் : சொல்லுறதென்ன.. நீயே பார்.. (கட்டிலில் கிடக்கும் போது கீழ் பக்கம் கிடந்த பெற்சீட்டை அகற்ற ஒரு கால் முழங்காலுக்குக் கீழ் அகற்றப்பட்டும் மற்றைய கால் கீழ்ப் பகுதி எரிகாயங்களுக்கு மருந்து போடப்பட்டும் இருக்க)

பத் : (உரத்துக் கத்தி) தம்பீ.. (அழுது) இ..தெ..ன்..ன டா.. ஒரு.. ஒரு.. என்னடா ஒரு கால்.. ஏதேன் அக்சிடென்ரேடா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும : (அழுது) அம்மா.. இல்லையம்மா.. அது.. அது வந்து.. நெருப்பிலை எரிஞ்சதாலை அங்கையே கழட்டிப் போட்டாங்களம்மா..

பத் : எ..எ..என்ன.. நெருப்பிலை எரிஞ்சதோ.. நெருப்பிலையோ.. காலோ.. எங்கை இஞ்சையோ.. ஒஸ்ரேலியாவிலையோ..

கந் : (கோபத்துடன்) ம்.. அவவுக்கு இனி விளக்கம் வேணும்.. காலோ கையோ.. இஞ்சையோ.. ஒஸ்ரேலியாவிலையோ..

கும : (அழுது) அப்பா.. அம்மா.. அம்மாவைப் பேசாதையுங்கோ அப்பா.. நீங்கள் என்னைக் கொழும்பிலை கண்டவுடனை பட்டபாட்டை மறந்திட்டியளே.. அதைப்போல தானே.. அம்மாவுக்கும்.. அம்மாவும்..

பத் : ஓமடா செல்லம்.. என்ரைதுரை.. இது என்ன கோலமடா..

கந் : தாயாச்சுது.. பிள்ளையாச்சுது

கும : அம்மா.. அது வந்தம்மா.. அங்கை எங்களை வைச்சிருந்த நாவுறு தீவிலை ஒரு காம்ப் ஒண்டு நெருப்புப் பிடிச்சு..

பத் : காம்பிலையோ.. நெருப்புப் பிடிச்சு.. (?)

கும : அவசரத்திலை ஓடேலாமலும் போச்சுது.. அதிலை வலக்கால் சதைப்பிண்டமாயே போச்சு.. இடக்கால்லை.. கொஞ்சம் எரிகாயம் தான்..

பத் : என்ரை செல்லம்.. வதைச்சுப் போட்டுதோடா..

கும : வலக்கால் அப்பிடியே இருந்தால் ஏற்பாக்கி உயிருக்கு ஆபத்தாய்ப் போடுமெண்டு அங்கையே கழட்டிப் போட்டாங்களம்மா..

பத் : பிறகு..

கும : ஒருகிழமை அந்தத் தீவிலை இருக்கிற ஹொஸ்பிற்றலிலை காயப்பட்ட எல்லாரையும் வைச்சிருந்திட்டு முந்தநாள் அவையவையின்ரை நாட்டுக்கு திருப்பி அனுப்பிப் போட்டாங்க அம்மா..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத் : தம்பி

கும : ஓமம்மா.. நாங்கள் முறை முறையாய் விசா எடுத்து ரிக்கற் செய்து போகாததாலை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பிப் போட்டாங்களம்மா..

பத் : அப்ப.. நீ.. விசா எடுத்து ரிக்கற்செய்து போகேலையே..

கந் : சொல்லு.. விலாவாரியாச் சொல்லு.. பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுட வெளிக்கிட்டவ.. சொன்னன்.. எத்தினை தரம் எத்தினை விதமாய்ச் சொன்னன்.. ஏறிச்சுதே... தெரியாமலே சொல்லுறது கெடுகுடி சொற்கேளாதெண்டு..

கும : ஓமம்மா.. ஏஜன்சிக்காரன் கடலுக்காலை கப்பலிலை கொண்டு போய்விடுறனெண்டு கூட்டிக்கொண்டு போனான்.

பத் : விசா ரிக்கற் இல்லையெண்டால் கரையிலையே இறங்கியிருக்கலாம் தானே..

கும : உண்மைதான்.. ஆனால் நடுக்கடலிலை போய்த்தானே உண்மையைச் சொன்னான்.

கந் : அது.. அது அவன் சொல்லத் தேவையில்லை எங்களுக்கப் புரியவேணும்.. அவ பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுட வெளிக்கிட்டவ.. இப்ப

கும : பிறகென்ன.. அங்கையும் ஒரு தீவிலை முகாம்தான்..

கந் : அதாலை தானே தம்பி நீயும் கதைக்கேலை

கும : ஓமம்மா.. ஒருவசதியுமில்லை.. அது ஒருநரக வாழ்க்கை..

பத் : அங்கையுமோ..

கும : முகாம் தானே.. சட்டவிரோதக் குடியேற்ற வாசிகள் எண்டால் சொல்லவேணுமே..

பத் : (பெருமூச்சு)ம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமு : திடீரெண்டு ஒருநாள் நாங்கள் ஒரு நாப்பது பேர் மட்டிலை இருந்த காம் நெருப்புப் பிடிச்சுது.. பிறகென்ன.. எனக்கு கால் மட்டும் தான்.. இன்னும் நாலைஞ்சு பேருக்கும்.. ரெண்டு மூண்டு பேர் செத்தும் போய்ச்சுதுகள்.

பத் : ஆண்டவனே.. அம்பலத்தாடி வைரவா.. நீ பிள்ளையின்ரை உயிரைக் காப்பாத்தி விட்டாய்.. கடவுளே.. ஏதோ உயிருக்குப் பழுதில்லாமல் காலோடை போச்சுது..

கந் : வைரவர் காப்பாத்தி விட்டார் எண்டு சொல்லாதை.. வைவைர் கண்ணுக்கு முன்னாலை காட்டிப் போட்டார் எண்டு சொல்லு..

குமு : அப்பா.. அப்பா என்ரை காலமப்பா.. என்ரை காலம்.. அதுக்கு ஏன் அம்மாவைப் பேசிறியள்..

பத் : ஏதோ நான் தான் செய்த மாதிரி என்னிலை பழியைப் போடுறியள்..

கந் : ஓம்.. நீ செய்யேலைத்தான்.. ஆனால் அவள் ராதைக்கு எத்தினை சூடு போட்டிருப்பாய்.. அவள் கத்தக் கத்த.. குழறக் குழற.. விட்டு வைச்சாயே.. அவள் எத்தினை கெஞ்சுக் கெஞ்சியிருப்பாள்.. எத்தினை கடவுளைக் கூப்பிட்டிருப்பாள்.. இராட்சசி மாதிரி ஆடினாய்.. இப்ப..

பத் : ஓமப்பா.. புரியுது.. அவளின்ரை அழுகை.. கண்ணீர்.. கடவுள்.. கடவுளே.. இப்ப என்ரை பிள்ளை..

கந் : கடவுள் எண்டு மட்டும் சொல்லாதை..

பத் : (அழுதல்) ஆண்டவனே.. நான் செய்தது பிழை தான்.. பிழை தான். ஆனால் அதுக்கு நீ என்னை.. என்னை கொண்டிருக்கலாமே.. ஒண்டும் தெரியாத பிள்ளையைப் போய்.. அவனுக்கு இப்பிடி ஒரு நிலையைக் குடுத்திட்டியே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் : செய்யிறது எல்லாத்தையும் நீயே செய்து போட்டு.. இப்ப ஏன் கடவுளைக் கூப்பிடுறாய்.. (உறுக்கி) கடவுளை மட்டும் குறை சொல்லாதை.. தெரியாமலே சொல்லுறது. பெத்ததுகள் செய்யிறது பிள்ளையளைச் சேருமெண்டு.. இஞ்சைபார் ஒண்டை மறந்திடாதை.. நீ விதைச்ச விதை.. அதை மறந்திடாதை.. நீ விதைச்ச விதை வீண்போகேலை.. இண்டைக்கு அவளின்ரை கண்ணீரிலை முளைச்சு விருட்சமாய் உன்ரை கண்ணுக்கு முன்னாலையே கொண்டந்து நிப்பாட்டியிருக்கு..

பத் : ம்.. இப்ப தெரியுது.. ஆரைச்சொல்லி என்ன.. விதைச்சவன் விதைச்சதைத்தானே அறுக்கவேணும்..

....... **நிறைவு** .......

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் *19.09.2016* இரவு *9.30*ற்கு முதன்முதலில் ஒலிபரப்பானது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 அரச வானொலி விழாவில் சிறந்த நாடகப் பிரதி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டு சான்றிதழ் பெற்றது
செ.அம்பலவாணர் - விதை.
சிறந்த நடிகைக்கான விருது A.M.C. ஜெயஜோதி - "விதை"





பங்குபற்றிய கலைஞர்கள் ஒலிப்பதிவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௩. விரல்




சுபலன் - தருமன் - துரியோதனன் - கிருஷ்ணன் - திரௌபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. விரல்

**(கற்பனை கலந்த இதிகாச நாடகம்)**

**நாடக மாந்தர்கள் :**

- **சகுனி மகாபாரதத்தின் சூழ்ச்சி நாயகன்**
- **சுபலன் – சகுனியின் தந்தை**
- **தருமன் – பாண்டவர்களில் மூத்தவன்**
- **துரியோதனன் – கௌரவர்களின் மூத்தவன்**
- **கிருஷ்ணன் – மகாபாரதத்தின் இயக்குனர்**
- **திரௌபதி – பாண்டவர்களின் மனைவி**

**காட்சி : 1**

**களம் : பீஷ்மரின் சிறை**

**பாத்திரங்கள் : சகுனி, சுபலன்**

(தன் முன்னே கை நீட்டி விரல்கள் விரித்து கண்மூடி அமர்ந்து இருக்கும் தந்தை சுபலனைக் கண்டான் சகுனி)

சகு : (அழுதழுது) தந்தையே.. இந்தக் கைகள்தானே என்னை வாரியணைத்தவை. இந்த விரல்கள்தானே இந்தச் சகுனியின் கண்ணீரைத் துடைத்தவை. இந்தக் கைகள் தானே எனக்கு வாள்வீசக் கற்றுத் தந்தவை. இன்று.. அதே விரல்களை என் கைகளாலேயே வெட்டச் சொல்லிக் கூறுகின்றீர்களே தந்தையே..

சுப : மகனே சகுனி.. உன் தந்தை சுபலன் எதற்கும் வேதனைப்பட மாட்டான்.. கிறுங்கமாட்டான்.. யோசியாதே.. மனம் தளராதே.. நான் கூறியபடி இந்தச் குறுவாளால் எனது விரல்களை ஒவ்வொன்றாக வெட்டு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : தந்தையே.. மனசாட்சி விடுகின்றது இல்லையே.. தங்களது உதடுகள் வேதனைப்படவில்லை என்று கூறினாலும் வலிதாளாமல் உதடு கடித்து சத்தம் வராமல் வாய் மூடி கண்கள் தெறிக்க அமர்ந்து இருப்பதை என்னால் உணர முடிகின்றது தந்தையே..

சுப : அது.. விரல் போகின்றதே என்றல்ல.. சம்பவங்களை நினைத்த மனவேதனையினால் உள்ளம் அழுகின்றது மகனே.. (பெருமூச்சு) மகனே சகுனி. நமது குடும்பம் எவ்வளவு அழகான குடும்பம். காந்தாரி என்ற அழகு மகள். வீரத்திற்கு இலக்கணமாக அழகான புதல்வர்கள். காலம் செய்த கோலத்தைப் பார்த்தாயா.. என்று அந்தக் கண்ணில்லாதவனுக்காக எங்கள் குடும்பத்தின் மீது பீஷ்மரின் பார்வை பட்டதோ அன்று தொடங்கியது..

சகு : தந்தையே !.. நாம் என்னதான் தவறு செய்தோம்?.. எதற்காக பீஷ்மர் நம்மை அழிக்கத் துணிந்தார்?.. ஏன், சகோதரி காந்தாரியைக் கூட அவர் வந்து கேட்டதால் தானே திருதராஷ்டிரனுக்கு மணமுடித்து கொடுத்தோம்?.. என்னைத் தாய்க்குத்தாயாக வளர்த்த காந்தாரியை ஒரு குருட்டு அரசனுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டாமென்று எவ்வளவு பாடுபட்டேன்.. கெஞ்சிக்கேட்டேன்.. நீங்களும் அப்போது அதைப் பொருட்படுத்த வில்லையே..

சுப : நான் பொருட்படுத்தவில்லை என்று கூறாதே மகனே.. பீஷ்மர் கேட்ட போது திருதராட்டினனுக்குப் பெண்கொடுக்க எனக்கும் சம்மதமில்லைத் தான்.

சகு : அப்போ.. மறுத்திருக்கலாம் தானே..

சுப : மறுத்தால் பீஷ்மர் காந்தாரத்தையே அழித்துவிடுவார் என்ற பயம் இருந்தது. ராஜநீதியாக நாட்டின் நலனை உத்தேசித்தே காந்தாரியை மணமுடித்துக் கொடுத்தேன்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : அதுதானே.. அவர்களே விரும்பிக் கேட்டு நடந்த திருமணம்.. மறுப்பில்லாமல் நடந்தது தானே அப்படியிருந்தும் நமக்கு ஏனிந்த முடிவு?

சுப : அதுவந்து.. காந்தாரியின் ஜாதக பலன்படி அவளுக்கு முதல் கணவனாக வருபவன் உடன் பலியாவான் என இருந்ததால். ஒருவருக்கும் தெரியாமல் ஒரு ஆட்டுக் கடாவை சாஸ்திரப்படி திருமணம் செய்து அதனை பலியிட்டோம். அதன்பின் சில காலம் கழித்தே அவளுக்கு திருதராஷ்டிரனை மணமுடித்தோம். இது பீஷ்மருக்கு தெரிந்தவுடன் கோபப்பட்டார்.

சகு : ஏன் தந்தையே.. இதற்கு ஏன் கோபப்பட வேண்டும்..

சுப : ஆடாகவே இருந்தாலும் முதலில் சாஸ்திரப்படி திருமணம் செய்து அது பலியானதால்.. காந்தாரி ஓர் விதவைதானே.. ஓர் விதவையை தன் குலத்தில் கட்டிவைத்து தன் குலப் பெருமையை சீரழித்து விட்டோமென்பது அவரது வாதம்..

சகு : அதற்காக..

சுப : நாங்கள் வெளியில் இருந்தால், அந்த ரகசியம் வெளிப்பட்டு, அதனால் உலகமே நாளை தன் குலத்தையே கேவலமாகப் பேசுமே என பொங்கியெழுந்த பீஷ்மர் நம்மை இந்த பாதாளக் கிணற்றுச் சிறையிலடைத்து தன் தர்மத்தை நிலைநாட்ட தினமும் ஒரு கைப்பிடி உணவு தருகிறார்.

சகு : இந்த அற்ப விடயத்துக்காக எமது குலத்தையே அழிக்கத் துணிந்தாரா..

சுப : ஆம்.. மகனே.. உன்னை உயிர்ப்பித்தது.. நம் குலத்தை வளர்க்க அல்ல. பீஷ்மரின் குலத்தை நிர்மூலமாக்கவே...

சகு : அப்படியா தந்தையே..

சுப : அதனால்தான் நம் குலத்தையே அழிக்க எண்ணிய பீஷ்மரின் குலத்தை ஒட்டுமொத்தமாய் வேரறுக்க ஒருவராவது உயிருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும் என முடிவெடுத்து, அவரின் கண்ணில் மண்ணைத் தூவி எங்கள் அனைவருக்கும் என்று தினமும் வழங்கப்பட்டுவரும் ஒரு பிடி உணவையும் ஒரு சுரைக் குடுவை தண்ணீரையும் உனக்கே தந்து ஒவ்வொருவராய் இறந்து கொண்டிருக்கிறோம் எங்கள் ஒவ்வொருவர் இறப்பையும் நேரில் கண்ட உன் கண்கள் நாளை பீஷ்மரின் குலத்தில் ஒவ்வொருவரின் இறப்பையும் கண்டு மகிழ வேண்டும். அதற்கும் காரணமாக நீயே இருக்க வேண்டும்.. இதுவே என் இறுதி ஆசை.

சகு : தந்தையே.. தங்கள் ஆசை அதுவாக இருக்கலாம். ஆனால் (அழுது) அனைத்தையும் இழந்தபின்.. எப்படி தந்தையே.?

சுப : மகனே பலம் உடல் வலிமை சார்ந்ததல்ல. மனவலிமை சார்ந்தது. அதை உன் புத்தியின் வழியே பிரயோகப்படுத்து. திட்டங்களால் எதிரிகளை தகர்க்க முயற்சிசெய்..

சகு : அது வந்து தந்தையே..

சுப : எவரையுமே நேரடியாக எதிர்க்காதே. வேறு எவரையாவது தூண்டிவிட்டு நீ நினைப்பவரை அழி. உகந்த சந்தர்ப்பத்திற்காக மட்டும் காத்திரு.. மகனே... குழப்பங்களை உண்டாக்கு. உன் எதிரிகளை அவற்றால் முடிந்தளவு நிர்மூலமாக்கு.. இன்றிலிருந்து சகுனி என்ற பெயருக்கு இதுதான் பொருளாக இருக்க வேண்டும். மகனே சகுனி.. இன்னொன்று..

சகு : கூறுங்கள் தந்தையே..

சுப : மகனே நீ வெட்டிய என்விரல் எலும்புகளை எடுத்து தாயப் பகடைகளாக உருவாக்கி வைத்துக்கொள். அதில் என் ஆத்திரம் முழுவதும் நிறைந்து இருக்கும். என் மன எண்ணங்கள் அனைத்தும் வைரம் பெற்றிருக்கும். நீ எந்த எண்ணை நினைத்து உருட்டினாலும் அந்த எண்ணாக நான் வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுவேன். நீயே எப்பொழுதும் வெற்றி பெறுவாய். தகுந்த நேரத்தில் இதைப் பயன்படுத்துவதுதான் உன் திறமை.. ஆம் மகனே தாயப் பகடை ரூபத்தில் நீ வைத்துக் கொள்ளும் என் விரல்களே உன் பழிவாங்கும் படலத்தை கொண்டு செல்லும் அதை ஒருபொழுதும் மறந்து விடாதே..

சகு : ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள் தந்தையே..

சுப : நீ பலமில்லை என்று சொன்னாயே.. அதற்குத் தான் சொல்லுகின்றேன்.. என் விரல்கள் தான் உனக்குப் பலம்.. ஆம் தாயப் பகடைகளான என் விரல்கள்தான் உனக்குப் பலம். அதுவே உன் இலட்சியத்தை அடைவதற்கான கருவி.. ஆனால் அதைக் கையாளுவது உந்தன் திறமை.

சகு : தங்களின் இறுதி ஆசையை எப்படியும் நிறைவேற்றுவேன் தந்தையே..

சுப : (தழுதழுத்து) மகனே.. எனது உயிர் என்னை விட்டுப் போகும் தருணம் நெருங்கி விட்டது.. வா.. என்னருகில் வா மகனே..

சகு : வந்தேன் தந்தையே.. கூறுங்கள்.. ஆ.. ஆ.. (அலறுதல்).. (சுபலன் உயிர்போகும் தறுவாயில் தன் ஒட்டுமொத்த உயிர்ச் சக்தியையும் தன் இன்னொரு கையில் கொண்டு வந்து தன் வாளினை எடுத்து சகுனியின் கணுக்காலை வாளின் பின்புறத்தால் அடித்து உடைத்தான். வலி தாளாமல் அலறுதல்) ஆ..ஆ.. (அலறுதல்).. அருகில் வரச் சொல்லிவிட்டு என் கணுக்காலை

சுப : அதுவந்து..

சகு : (தொடர்ந்து.. அழுதழுது) ஐயோ.. தந்தையே என்ன இது? ஏன் இப்படி ஒரு காரியம் செய்தீர்கள்? நான் உயிர்வாழ வேண்டுமென்று கூறிவிட்டு.. அருகில் வரச்சொல்லி அழைத்து விட்டு.. ஏன் தந்தையே.. எனது கணுக்காலை தங்களின் வாளின் பின்புறத்தால் அடித்து உடைத்தீர்கள்..

சுப : மகனே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : (கோபம் கலந்த கவலையுடன்) தந்தையே என்ன இது? என் கணுக்காலை உடைத்து வாழ்நாள் முழுதும் என்னை ஊனமாக்கி விட்டீர்களே. கால் நொண்டி நொண்டி ஊனமாக நான் நடப்பதைப் பார்த்து உலகத்தவர் அனைவரும் ஏளனம் செய்வார்களே!.. அதுகூடப் புரியவில்லையா உங்களுக்கு

சுப : புரிகின்றது.. புரிந்து தான் செய்தேன்..

சகு : ஒரு தந்தை மகனுக்கு செய்யக் கூடிய காரியமா இது?..

சுப : மகனே.. என்னை மன்னித்து விடு. இனி உன்னைப் பார்க்கும் எவரும் ஏளனமாகவே பார்க்க வேண்டும். அது உன் நெஞ்சில் கேவலமாகப் பதிய வேண்டும். கோபத்தையும் வெறுப்பையும் அவர்கள் மேல் உண்டாக்க வேண்டும்.. அப்போது தான் அது எரிதழலாய் உன் மனத்தில் பரவும்... அதனாலேயே எவரிடத்தும் உன்னால் அன்பு கொள்ள முடியாது..

சகு : (ஆச்சரியத்துடன்) தந்தையே..

சுப : எம்முடைய இந்த இழிநிலைக்கு காரணம் பீஷ்மர் மட்டும் தான் என்று எண்ணாதே.. அவர் காக்க நினைத்த இந்த கௌரவகுலமும் தான்.. இவற்றை அழிப்பதே உன் நோக்கம். இனி நீ நடக்கும் போது நொண்டும் ஒவ்வொரு தடவையும் கௌரவர் செய்த அநீதியை நினைவிற் கொள்.. அவர்களை மன்னிக்காதே.. எனக்கு வாக்கு கொடு.. (தொடர்ந்து)

சகு : உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவேன்.. வாக்குக் கொடுக்கிறேன்.. (அழுது) தந்தையே.. நான்.. நான்.. அனைவரையும் இழந்த.. தனியன். என்ன செய்வேன்.. என்ன செய்வேன்.

சுப : மகனே.. அப்படிக்கூறாதே.. நான் இறந்ததும் உனக்கு இச்சிறையிலிருந்து விடுதலை கிடைக்கும். காந்தாரியிடத்தில் அரவணைப்பைப் பெறு. அவள் மூத்த மைந்தன் துரியோதனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவனாக இரு. அந்தக் கயவன் தான் நீ நினைத்ததை முடிக்க உகந்தவன்.. கலங்காதே.. (தழுதழுத்து) என் உயிர்ப்பறவை பறக்கின்றது.. சுதந்திரமாகப் பறக்கப் போகின்றது.. எனக்கு விடைதா.. (இறத்தல்)

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 2**
**களம் : துரியோதனனின் அரண்மனை**
**பாத்திரங்கள் : துரியோதனன், சகுனி**

சகு : (வஞ்சகமாக) என்ன மருமகன் துரியோதனனே.. பாண்டவர்களின் இந்திரப் பிரஸ்தத்தில் இருந்து வந்தநாள் முதல் ஒரு மாதிரி இருக்கிறாய். மனம் நொந்து போயிருக்கிறாய் போலிருக்கின்றது..

துரி : ஆம் மாமா.. எனது உள்ளக்கிடக்கைகளை முற்றுமுழுதாக உணர்ந்த, உங்களிடமன்றி வேறுயாரிடம் இதைக் கூறுவேன்..

சகு : புரிகின்றது.. மனம் கோணாதே.. கூறு.. உனது மனதை வாட்டுவது என்னவோ.. கூறத்தயங்காதே என்னிடத்தில்..

துரி : நாகர்களும் கொடிய விலங்குகளும் வாழும் அடர்ந்த காடு தானே என்று கொடுத்தேன். (பெருமூச்சு விட்டு) இன்று பார்க்கும் பொழுது.. சுவர்க்கலோகம் போலல்லவா இருக்கின்றது..

சகு : துரியோதனா.. கொடுத்தது காடாயிருக்கலாம் ஆனால் அந்தக் காட்டை அழித்தது கிருஷ்ணன்.. இந்திரனுக்கு வேண்டு கோள் விடுத்தது கிருஷ்ணன்.. இந்திரனின் வேண்டுதலில் நகரத்தை அமைத்துக் கொடுத்தது மயன். மயன் அமைத்த நகரென்றால் கூறவும் வேண்டுமா..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : மயன் அமைத்த நகரென நீங்களும் அதற்கு மேலும் மகுடம் சூட்டி என்னுள் எரியும் பொறாமைத் தீயை தூண்டி விடுகின்றீர்களே..

சகு : பாசமிகு மருமகன் என்பதற்காக வெண்மையைக் கருமை என்று கூறமுடியுமா..

துரி : அதுமட்டுமில்லை மாமா.. உங்களுக்கு மட்டும்.. அருகில் வாருங்கள்.. யாராவது மூன்றாவது நபர் கேட்டால் வெட்கம்..

சகு : கூறு மருமகனே..

துரி : அங்கே அந்தப் பளிங்குத் தரையில் நான் நடந்து செல்லும் போது அதை தண்ணீர் என்று நினைத்து விட்டேன். நீர் நிறைந்த குளம் என்று கருதி எனது ஆடைகளை உயர்த்திக் கொண்டேன். பின்பு அதற்கப்பாலிருந்த பளிங்கு போன்ற இதழ்களைக் கொண்ட தாமரைகளுடன் கூடிய குளத்தைக் கண்டு தரை என்று கருதி எனது ஆடைகளுடன் உள்ளே விழுந்து விட்டேன்

சகு : அப்படியா..? அப்புறம்..?

துரி : இவற்றை அவள் திரௌபதி கண்டுவிட்டாள். கண்டது மட்டு மல்ல ஏளனச்சிரிப்பு வேறு..

சகு : அப்படியா..?

துரி : ஆம் மாமா.. தூங்கும் போதும் அவளது ஏளனச் சிரிப்புத் தான் கண்முன்னே தோன்றி மறைகின்றது.. அவமானம் என் மனதை வாட்டி வதைக்கின்றது.. இவ்வளவு அவமானங்களையும் தாங்கிக் கொண்டு இனியும் உயிர் வாழத்தான் வேண்டுமா என்று எண்ணத் தோன்றுகின்றது..?

சகு : எதையும் தவறாக எடைபோட்டு அவசரப்பட்டு விபரீதமான முடிவுகளை எடுத்து விடாதே.

துரி : ம். இதுதான் விதியோ.. யாருமற்றவன் வேறு என்ன தான் செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : மருமகனே.. இதில் நீ வருத்தப்பட என்ன இருக்கிறது? உனக்கு யாருமே இல்லை என்று நீ சொன்னாய். அங்கே தான் தவறிழைக்கின்றாய்.. பார் துரியோதனா, உனது தம்பிகள் அனைவரும் உனக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். பெரும் வில்லைத் தாங்கும் துரோணரும் அவரது மகன் அஸ்வத்தாமனும், ராதையின் மகன் கர்ணன், பெரும் போர் வீரரான கௌதமர், மற்றும் நான் என்றும் உனக்கு உற்ற நண்பர்களாக இருக்கிறோம். கவலையை விடு. அனைவருடனும் ஒன்றிணைந்து முழு உலகத்தையும் வெற்றிகொள்.

துரி : புரிகின்றது சகுனி மாமா, தாங்கள் உத்தரவிட்டால் நான் இவர்களனைவரையும் வைத்து பாண்டவர்களை அடக்குவேன். நான் அவர்களை இப்போது வீழ்த்தினால், இந்திரப் பிரஸ்தமும் அதில் இருக்கும் அனைத்து ஏகாதிபதிகளும் எனதாவார்கள், அனைத்து செல்வங்களும் நிரம்பிய அந்த சபா மண்டபத்துடன் கூடிய மாளிகையும் எனதாகும்.

சகு : உண்மைதான்.. ஆனால் எதனையும் புத்திசாதுரியத்துடன் அணுக வேண்டும்..

துரி : விளங்கவில்லை.. கூற வந்ததை சரியாகப் புரியும்படி கூறுங்கள்

சகு : மருமகனே மனம் கலங்காதே.. உன்தாய்.. என்னைத் தூக்கி வளர்த்தவள்.. அந்தக்கடமை எனக்கும் இருக்கின்றது. இந்தச் சுபலனின் மகன் சகுனி இதற்காகத்தானே உன்னுடன் இருக்கின்றான். நான் என்றுமே உன்னுடன் தான். அதனை மறந்திடாதே.. (தனக்குள்) ம்.. நெய்திரண்டு வரும் வேளை.. ம்.. தந்தையார் கூறியபடி மிக அவதானமாய் கையாள வேண்டும்..

துரி : என்ன மாமனாரே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : (தடுமாறி) இல்லை இல்லை.. திரௌபதி ஏளனச் சிரிப்புச் சிரித்தாளா..? அதுதான் இந்தச் சந்தர்ப்பத்தை கவனமாகக் கையாள வேண்டும் என்றேன்..

துரி : ஆம்.. ஆம்.. அந்தச் சிரிப்பு அவளது ஏளனச் சிரிப்பு.. இன்னும் என் கண்முன்னே நிழலாடுகின்றது.

சகு : அப்போ.. திரௌபதியைப் பழிவாங்கவும் வேண்டும்.. இந்திரப் பிரஸ்தத்தை அடையவும் வேண்டும்.. அப்படித்தானே..

துரி : என் உள்ளக்கிடக்கையைச் சரியாக உணர்ந்துள்ளீர்கள் மாமனாரே..

சகு : உண்மை தான் அதனை நிறைவேற்ற.. அடைவதற்கு வழி என்னவென்று கேள்.. உன் மாமன் கூறுகிறேன்.. (தனக்குள்) ம்.. எரியும் நெருப்பில் தானே எண்ணெய்யை ஊற்ற வேண்டும்.. கூறுகிறேன் கேள்..

துரி : (ஆவலுடன்) கூறுங்கள் மாமா.. கூறுங்கள்..

சகு : இதோபார்.. அறத்தில் தருமர் உயர்ந்தவராக இருக்கலாம்.. ஆனால் அவரிடம் ஒரு பலவீனமும் உள்ளது. இவ்விடயத்தில் நாம் தருமரின் பலவீனத்தைத் தான் குறிவைக்க வேண்டும்..

துரி : அது என்ன என்பதை நாம் அறிந்திருக்க வேண்டுமே..

சகு : நான் அறிந்தது.. தருமருக்கு சூதாட்டம் மிகவும் விருப்பமான தொன்று.

துரி : அப்படியா.?

சகு : ஆம்.. அதுவே எமது பலம்.. அவரின் பலவீனமும்..

துரி : புரியவில்லையே..

சகு : தருமரை சூதாட்டத்திற்கு அழையுங்கள். அவர் மிகவும் விரும்பி வருவார்.

துரி : ஆனால் அவருடன் ஆட என்னால் முடியாதே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : உனக்குப் பதிலாக நான் ஆடுகிறேன்.. நான் தாய ஆட்டத்தில் எவ்வளவு கெட்டிக்காரன் என்பது உனக்குத் தெரியும். எனது தந்தையின் விரல்களின் எலும்புகளினால் ஆன இந்தத் தாயப் பகடைகள் நான் நினைத்த படி விழக் கூடிய சக்தி கொண்டவை. அதை நினைவில் வைத்திரு ஒவ்வொரு வெற்றியுடனும் பாண்டவர்கள் வசமுள்ளனவற்றை ஒவ்வொன்றாகப் பெற்று இறுதியில் இந்திரப் பிரஸ்தத்தையே வெற்றி கொண்டு தருகின்றேனே.. நீயே முடிசூடிக்கொள்..

துரி : கேட்கும் போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது.. இது நடக்கக் கூடியதா.. இந்திரப் பிரஸ்தத்திற்கு நானே முடிசூடிக் கொள்வதா.. பாண்டவர்கள் வம்சம் அழிவைச் சந்திக்கப் போகின்றதா..

சகு : (மனதுள் வஞ்சனையாக) அது மட்டுமல்ல நீயும்.. உன் குருவம்சமே அழிவதற்கு இந்த தாய விளையாட்டும் அஸ்தினாபுரமும் தான் அடிகோலும் என்பதை அறிந்து கொள்.. என் தந்தையின் விரல்கள் வெற்றியைத் தேடித் தருவது குருவம்சத்தை அழிக்கவேயன்றி தழைக்கச் செய்யவல்ல..

துரி : என்ன கூறுகிறீர்கள் மாமனாரே..

சகு : (தடுமாறி) இல்லை.. அஸ்தினாபுர முடிசூடலுடன் குருவம்சம் தழைக்கும் என்றேன்..

துரி : தங்களின் ஆசியிருந்தால் அது நிச்சயம் நடக்கும் மாமா..

சகு : எந்தனது ஆசி மட்டுமல்ல என் தந்தை சுபலனின் ஆசியும் எப்போதும் இருக்கும். அதுவே அவரின் இறுதி ஆசையும் கூட..

**....... காட்சி மாற்றம் .......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 3**

**களம் : துரியோதனனின் அரண்மனை**

**பாத்திரங்கள் : துரியோ, சகுனி, தருமர், திருதராட்டிரன், பாஞ்சாலி, கிருஷ்ணர்**

துரி : தருமரே.. உணவு சமைக்கும் வரையில் நாம் பொழுதினை உரிய வகையில் மகிழ்வாகப் போக்கலாம் தானே..?

சகு : சும்மா தானே இருக்கிறோம்.. இந்தத் தாயத்தை உருட்டிக் கொண்டு இருக்கலாமே

தரு : (தனக்குள்) இவர்கள் மாமனும் மருமகனும் வம்புக்கு இழுத்து வலையில் மாட்டிவைக்க பேச்சுத் தொடங்கியிருக்கிறார்கள் போலும்

சகு : என்ன உமக்குள்ளே கதைக்கிறீர்.. தோல்வியை எண்ணி அச்சமா...

தரு : இல்லை இல்லை.. சூதும் வாதும் வேதனை செய்யும். அதனாலே சமையல் தாமதமானாலும் பரவாயில்லை.. சூது வேண்டாம்.. கலகலப்பாகப் பேசிக்கொண்டே இருப்போம்.

துரி : (ஏளனமாக) ம்.. பாவம் ! தருமராசர் சகோதரர்களுடன் வேள்வி செய்தவர் தானே. அதனால் பொருள் விரயம் ஆகி இருக்கும். அதனால் வைத்து ஆடுவதற்குப் பொருள் இல்லைப் போலும்.. யோசிக்கிறார். அப்படித்தானே சகுனிமாமா..?

சகு : ம். அப்படியும் இருக்கலாம். பரவாயில்லை.. தருமரே.. நீர் ஒன்றும் பொருள் வைக்க வேண்டாம் தாயத்தை உருட்டத் தான் சொல்கிறேனே தவிர வேறேதும் சொல்லவில்லையே. (கேலியாக) நான் தோற்றால் பொன்னும் பொருளும் தருகிறேன். நீர் தோற்றால்.. ம்.. கையை விரித்தால் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு : வீட்டைக் கட்டி விட்டோம் என்று விருந்துக்கு அழைத்தீர் அழைப்பை ஏற்று வந்தோம்.. இப்போது விருந்திற்கான சமையல் தாமதம் என்று கேளிக்கை பேசிச் சூது வழியாக பொறிவைக்கத் திட்டம் போடுகிறீர்களோ என எண்ணத் தோன்றுகின்றது..

சகு : (மனதுள்) எனது திட்டம் சரிவராது போலிருக்கின்றதே.. அடிக்குமேல் அடி அடித்தால் தான் அம்மியும் நகரும்.. முயன்று பார்ப்போம். தருமரே.. எம்மைத் தவறாக எடை போட வேண்டாம்.. நாம் எவருக்கும்.. எதற்கும் பொறிவைக்க வேண்டிய அவசியமில்லை.. எம்மிடமில்லாத செல்வமோ?.. அதை மறந்துவிட வேண்டாம்..

துரி : தோற்றுவிடுவேனோ என்ற பயம்.. அதற்கு ஒரு நொண்டிச் சாட்டு.. காரணம்..

சகு : வெற்றி தோல்வி என்பது இருவருக்கும் பொது. தருமரே.. நீங்கள் வெல்ல மாட்டீர்கள் என்று நினைப்பது தவறு. சிந்தித்தது போதும். வந்து அமருங்கள். பணயத்தை வைத்து தாயத்தை ஆடுங்கள், காயை நகர்த்துங்கள்

துரி : (பெருமையுடன்) என் மாமனுக்காக எவ்வளவு வைக்க வேண்டுமானாலும் நான் வைக்கிறேன்.. அஸ்தினா புரியையே அடகு வைக்கச் சொல்கிறாயா.. அதற்கும் தயார். கேவலம் பொருள் விரயம் ஆகும் என்று அஞ்சிப் பின் வாங்குவது பெருமைக்கு இழுக்கு. அதை நினைவில் வைத்திரும்..

தரு : ம்.. சரி.. சம்மதிக்கிறேன்.. இந்த முத்து மாலை பந்தயப் பொருள்.. ஆரம்பியுங்கள்..

துரி : ம்.. ஆடுங்கள்..

சகு : (எதிரொலி) தந்தையே ஆம்.. உனது எண்ணம் நிறைவேறும் காலம் கனிகின்றது போலிருக்கின்றதே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : மாமா.. முதல் ஆட்டத்திலேயே தருமனுக்கு தோல்வி !

சகு : ஆம்..

துரி : ம் பிறகென்ன.. பணயப் பொருளாம் முத்து மாலை தருமனிடமிருந்து மாமா சகுனியின் கைகளுக்கு மாற வேண்டியது தானே..

சகு : அடுத்து பந்தயப் பொருள் என்னவோ..

துரி : மகிழ்ச்சி.. இரண்டாவது பந்தயமாகக் கண்ணபிரானால் தருமராசருக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட தேர்.. ம்.. பார்த்தீர்களா மாமா.. தருமராசரின் ரசனையை..

சகு : எங்கே தாயத்தை உருட்டுங்கள்.

தரு : சரி..

துரி : இரண்டாம் பந்தயத்திலும் வெற்றி சகுனி மாமாவின் பக்கமே.

தரு : மீண்டுமா..

துரி : என்ன தருமா.. மாமாவினுடன் தாயம் ஆடுவதற்குப் பயப்படுகின்றாய் போல

தரு : இல்லைப் பயமில்லை.. அடுத்த சுற்றில் வெல்வேன்.. இழந்த பொருள்களை மீட்க வேண்டும் அனைத்தையும் மீட்டெடுப்பேன்.

துரி : என்ன மாமா. சூதாட்டக் காய்களை மந்திரம் கூறி வசியப்படுத்தி விட்டீர்களோ.. மீண்டும் மீண்டும் வெற்றி உங்களுக்கே.. தருமன் தன்னுடைமைகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக வைத்தான்.. எல்லாவற்றையும் பறிகொடுத்தான். ஆனால் நீங்களோ சிரித்துக் கொண்டே ஆடி மீண்டும் மீண்டும் தொடர்ந்து வெற்றியைக் குவிக்கின்றீர்களே...

சகு : அது என் தந்தையின் ஆசி.. தந்தையின் கொடை

துரி : நீங்கள் சந்தோசத்தின் உச்சியில் தந்தையின் கொடை என்கிறீர்கள்.. தருமரோ, அடுத்து என்ன செய்வது? எதைப் பந்தயமாக வைத்து ஆடுவது? என்று தெரியாமல் கலங்கிய மனத்தோடு தயங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : ஏன் தயங்குகிறாய் தருமா? உன்னையே வைக்கலாம்தானே.. ஏன் தயக்கம்.

தரு : (யோசித்து விட்டு) (தனக்குள்) அதுவும் சரிதான்.. இந்த ஆட்டத்திற்கு என்னையே பந்தயமாக வைக்கிறேன். விளையாடுங்கள் பார்க்கலாம்..

சகு : அப்படியா.. மிக்க நல்லது. தற்போது தான் தாங்கள் தாயத்தின் உண்மையான முகத்தைச் சிறிது சிறிதாக உணருகிறீர்கள் போலிருக்கின்றது.. அப்புறமென்ன நானும் காய்களை உருட்டுகின்றேன்.

தரு : நல்லது..

சகு : (சிரித்து) பிறகென்ன.. இம்முறையும் எனது பகடைகள் என்னை ஏமாற்றவில்லை.. வெற்றி என்பக்கம் தான்.. (ஏளனமாக). தங்களை வைத்து ஆடினீர்கள்.. தோற்றும் விட்டீர்கள்.

துரி : அப்போ அடுத்து..

சகு : பொறு மருமகனே.. தம்பிமார்கள் இருக்கிறார்கள் தானே..

தரு : இன்னொரு முறை முயற்சித்துப் பார்ப்போமே.. கவலை வேண்டாம். என் தம்பிமார் நால்வரையும் பந்தயமாக வைக்கிறேன். ஆடுங்கள்..

சகு : தருமருக்கு சூதாட்ட வெறி பிடித்து விட்டது. இனி நான் நினைத்தது அனைத்துமே நிறைவேறும்.

துரி : (ஏளனமாக) என்ன தருமா! இம்முறையும் தோல்வி.. எல்லாவற்றையும் தோற்றாகிவிட்டது. இனிமேல் தோற்பதற்கு ஒரு பொருளும் இல்லை போலிருக்கிறது?.. ம். தம்பி மார்களையும் தோற்றவுடன் திக்பிரமைபிடித்தவர் போல் இருக்கிறார் தருமராசன்

சகு : வெந்த புண்ணில் புண்ணில் வேல்பாய்ச்சாதே.. கொஞ்சம் பொறு துரியோதனனே. நான் சொல்கிறேனென்று கோபித்துக் கொள்ளக் கூடாது தருமா ! உண்மையில் உன்னுடைய நன்மைக்காகத் தான் நான் இதை உனக்குச் சொல்கிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு : (எரிச்சலுடன்) கூறுங்கள் எதுவென்றாலும் கூறுங்கள்..

சகு : நீ இதுவரை என்னிடம் தோற்றுப் போய் இழந்த எல்லாப் பொருள்களையும் திருப்பிப் பெற வேண்டுமானால் என்னுடைய இந்த யோசனையை நீ புறக்கணிக்காமல் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்..

தரு : என்ன யோசனை அது?. பீடிகை போடுவதை விடுத்து என்னவென்று சொல்லேன்

சகு : ஒன்றும் பெரிய யோசனை இல்லை. சாதாரணமானது தான் !.. உங்கள் மனைவி திரௌபதியைப் பந்தயமாக வைத்து இன்னும் ஒரே ஓர் ஆட்டம் ஆடினால், ஒவ்வொன்றாக இழந்த பொருள்களை மீண்டும் பெற்று விட முடியும்...

தரு : என்ன திரௌபதியையா..? முடியாது..?

சகு : இவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள்.. ஒரே ஒரு தடவை.. இறுதித் தடவை..

தரு : சரி.. ம்.. திரௌபதியே பந்தயம். இறுதியாட்டம் இது தான்! விளையாடு

சகு : ம்.. (பெருமூச்சுடன்) தருமர் இழந்த அனைத்தையும் மீளப் பெறலாமென்று தன் மனைவியை வைத்து ஆடினார். அதிலும் தோல்வி..

துரி : தன் மனைவியையல்ல தம் மனைவியை.. தோற்றபடியால் இப்போ அவள் எமது அடிமை..

சகு : துரியோதனா..

துரி : ஆம். மாமா.. தருமன் யாவற்றையும் எங்களிடம் தோற்று விட்டான். இது அவனுடைய போதாத காலத்தைத்தான் காட்டுகிறது. இப்போது இவர்களுடைய கர்வம் ஒடுங்கும் நேரம் வந்து விட்டது. என் அடிமைகள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகு : ஆம் மருமகனே.. நான் நினைத்தது நடந்துவிட்டது. (தனக்குள்) நான் தந்தைக்குக் கொடுத்த வாக்கு நிறைவேறும் தருணம் அண்மித்து விட்டது போலிருக்கின்றது.. இருவரும் பகைமையின் உச்சக்கட்டத்திற்கு வந்து விட்டார்கள்.. ஆம்.. ஆம்.. பணயம் வைத்து ஆடித் தோற்றால் பணயப் பொருள் எமக்கே சொந்தம்.. அதில் தவறில்லை..

துரி : (எக்காளமிட்டுச் சிரித்து) பணயப்பொருள் எமக்கே சொந்தம்.. அடிமை.. அவள் எமது அடிமை.. துச்சாதனா அவளை அழைத்து வா. எமது சபைக்கு அவளை அழைத்துவா.. வரத்தவறின் குவளை விழியாளைத் தர தர என்று இழுத்து வா.. பலவந்தமாகவாவது இழுத்து வந்து இங்கே நிறுத்து...

சகு : தருமர் என்னிடம்.. சூதில் தோற்று விட்டார்.. தம்பிகளையும் உன்னையும் பணயமாக வைத்து துரியோதனனிடம் சூதில் தோற்றுப் போனார் என்று கூறு..

துரி : அன்று நான் பளிங்கைத் தண்ணீரென்று நினைத்து ஆடையை உயர்த்திய போதும், தடாகத்தை பளிங்கு என்று எண்ணித் தடுக்கி விழுந்த போதும் எள்ளி நகையாடி ஏளனச் சிரிப்புச் சிரித்தாயே ! வா.. இங்கே சூதில் தம்மை இழந்த உன் கணவர்கள் முன் வந்து அவர்கள் அல்லல் கண்டு சிரி.. அடிமையாகி விட்ட அவர்கள் நிலைமை பார்த்துச் சிரி.. கட்டிய கணவர்கள் கை கட்டிக் கொண்டு சேவகம் செய்வதைப் பார்த்துச் சிரி.. விற்பிடித்த கையும், கதை எடுத்த தோளும், வாள் பிடித்த கரங்களும், கோல் பிடித்த முடியும் சபையில் வால் பிடித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்துச் சிரி..

பாஞ் : (வந்து கொண்டு) விடு.. என்னை விடு.. யாரென்று நினைத்துக் கொண்டாய்.. அற்ப பதரே.. துச்சாதனா என்னை விடு.. (கதறி அழுது கொண்டு சபைக்கு வரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : ம்.. வருகிறாள். என்ன அங்கே ஆணவப் பேச்சு.. வாடி எந்தன் வடிவுக்கரசி.. வாடி இங்கே பாரடி.. உன் கணவர்கள் அரச உடை களைந்து சபையிலே வாடி இருப்பதை பாரடி.

பாஞ் : சீ.. எடு கையை.. வெட்கமாயில்லை..

துரி : ம்.. (ஆணவத்துடன்) வெட்கமா.. எனக்கா.. வெட்கப்பட வேண்டியவன் நான் இல்லையடி உன் கணவர்கள்.. என் அடிமைகள்.. அதை நினைவில் வைத்திரு அன்று என்னைப் பார்த்து சிரித்த ஏளனச் சிரிப்பு நினைவிருக்கிறதா? அன்று சிரித்து இகழ்ந்த உன் வாயை இன்று அழுது கதறும் படியாகச் செய்கின்றோம் பார்.

பாஞ் : (அழுது) உன்னுடன் பேசி பயனில்லை.. நல்ல உள்ளம் கொண்டவர்களே.. ! சான்றோர்களே..! நேர்மை நெறியறிந்த மன்னர்களே.. ! சூதாட்டத்தில் என் கணவர் என்னைத் தோற்று விட்டதாகச் சொல்லி இங்கே கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார்கள். தோற்றிருக்கலாம்.. ஆனால் தோற்பதற்கும் ஒரு முறை வேண்டாமா? ஒரு நீதி வேண்டாமா? தம்மைத் தோற்குமுன் என்னைத் தோற்றிருந்தால் அது முறையான தோல்விதான். ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒருவர் தம்மையே தோற்றுவிட்ட பிறகு தமது மனைவியை வைத்து ஆடித் தோற்க அவருக்கு என்ன அருகதை இருக்கிறது? இது இந்த அவையிலுள்ள சான்றோர்களுக்குத் தெளிவாகவே விளங்குமென்று எண்ணுகிறேன். எனக்கு நியாயம் வழங்குங்கள்.. இதற்கு நியாயம் கூறுங்கள்..

(சபையில் சிறிது சலசலப்பு)

பாஞ் : கல்விக்கு ஆசான் என்று சொல்லிக் கொண்டு கலைமகளை வழிபடும் துரோணரே ! என்னை விலை மகளினும் கீழாக நடத்துவதைக் கண்டு சிலையாக நிற்கிறீரே ஏன்? வில்லிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகம் உடையவர் என்று வீரம் பேசும் விதுரரே ! ஏன் அடங்கிவிட்டீர். கண் இழந்து வாழ்வில் ஒளி இழந்து இருப்பதைத் தவிர வெளுப்பு ஏதும் காணாத வேந்தன் திருதராட்டிரரே.. உமது செவிகளும் பார்வை இழந்து விட்டனவோ?

துரி : நீ எனது அடிமை.. மற்றையவர்கள் உனது கேள்விக்குப் பதிலிறுக்கப் போவதுமில்லை.. அவர்களது போதனையை நான் ஏற்கப் போவதுமில்லை.. நீ எனது அடிமை.. அதை மறந்து விடாதே.. உன் கதறலை நிறுத்து..

பாஞ் : சபையோரே.. இவ்வளவு நடந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களே.. உங்கள் வித்தகம் மெத்தனம் அடைந்தது ஏன்?..

துரி : துச்சாதனா.. விட்டால் இவள் எல்லோருக்கும் பாடம் எடுப்பாள் போலிருக்கின்றது..

சகு : இங்கிருப்பவர்கள் எல்லோரும் கொலைகாரர்கள் என்று நினைத்துக் கொண்டாயா நீ? ஏன் இப்படி ஓயாமல் அழுது தொலைக்கிறாய்?.

துரி : இந்தக் கிள்ளை மொழி பேசும் வள்ளிக் கொடியாளை வெள்ளைத் துகில் உரித்துக் காட்டு.. அப்பொழுது எழும் அழுகுரல் பாட்டினை இந்த அவையோர் கேட்கட்டும்.

தரு : துரியோதனா..! துச்சாதனா..! அடிமைகள் என்றுமே அடிமையாக இருப்பது இல்லை. புரட்சிக்கனல் எழுந்தால் உங்கள் புரட்டுகள் பொசுங்கி விடும். இந்த மருட்டுகளை விட்டு ஆண்மை யோடு நடந்து கொள்ளுங்கள். பேடிகளைப் போல அவர்களைக் கட்டிப் போட்டுவிட்டு மல்யுத்த வீரர்கள் என்று நீங்கள் வாய் கிழியச் சொன்னால் அது குதர்க்கம் ஆகுமே தவிர தருக்கம் ஆகாது.

துரி : (ஏளனமாக) என்ன அடிமை வாதம் புரிகின்றதா.. எம்மையும் உமது இல்லை இல்லை உங்களது முன்னாள் பத்தினியையும் பேச விட்டது என் தவறு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு : உங்கள் பேச்சில் ஏமாந்து சூது மயக்கத்தில் அவளை பணயம் வைத்து ஆடி சூதினை இழந்தபடியால் அவள் அடிமையாக இருக்கலாம் ஆனால் எளிதில் அவளை வென்று விடமுடியும் என்று பகற்கனவு காணாதீர்கள். மதி இழந்தவன் நானே.. அவளல்ல.. அதை மறந்து விடாதீர்கள்.

துரி : துச்சாதனா.. போதும்.. இனியும் பேச்சு ஏதும் தேவையில்லை.. முதலில் இந்தப் பாண்டவ அடிமைகளின் ஆடையை அகற்று.. (சலசலப்பு)

சகு : (சிரித்து) பார்த்தாயா.. அடிமைகளின் விசுவாசத்தை.. துச்சாதனன் அணுக முன்னரே அவர்கள் ஆடைகளைக் களைந்து கௌபீனத்துடன் நிற்கும் அழகைப்பார்.

துரி : ம்.. அடுத்து இவள் திரௌபதியின் ஆடைகளை அவிழ்த்துப் போடு.. அனைவரும் கண்குளிர ரசிக்கட்டும்.

திரௌ : (அழுதல்) கண்ணா.. என். அண்ணா.. இனி யார் எனக்குக் கதி. உன்னையல்லாது நான் இனி யாரை அழைப்பேன். என்னைக் காப்பாற்று கண்ணா..

சகு : கண்ணனாவது இங்கு வருவதாவது.. அவனும் அங்கே பொழுது போக்காக ருக்மணியுடன் சூது சொக்கட்டான் ஆடிக் கொண்டிருப்பான்.. (சிரித்தல்)

கண் : ருக்மணி.. பார்த்தாயா திரௌபதி என்னை வாயால் அழைத்தாலும்.. என்னிலும் பார்க்க புடவையை நம்புகிறாள்.. அதனாற் தான் அதன் தலைப்பை இறுகப் பற்றிக் கொண்டுள்ளாள்.

திரௌ : ஐயோ.. கண்ணா.. எனது புடைவைத் தலைப்பு துச்சாதனன் கையில்.. என் மானம் காப்பாற்று.. என்னைக் காப்பாற்ற இங்குள்ள யாருமே தயாரில்லை.. கட்டியவர்களும் கையறுந்து, செயலிழந்து நிற்கின்றனர். கண்ணா.. உன்னால் மட்டும்தான் என் மானத்தைக் காப்பாற்ற முடியும்.. உன்னால் மட்டும்தான் என் மானத்தைக் காப்பாற்ற முடியும்.. உன்னால் மட்டும்தான் காப்பாற்ற முடியும் கண்ணா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் : பார்.. இப்போது தான் புடவைத் தலைப்பை விட்டுவிட்டு என்னையே நம்பி இருகரம் கூப்பி நிற்கின்றாள். நாங்கள் இங்கே பொழுது போக்கிற்கு சொக்கட்டான் ஆடுகிறோம். அதே நேரம் அங்கே என் பக்தை இதே ஆட்டத்தால் தன் துகிலையே இழக்கப் போகின்றாள்.. பார் இதோ.. ம்.. துகில் வளரட்டும்.. அக்சய.. வளரட்டும்.. அக்சய.. துகில் வளரட்டும்..

துரி : அடிமை கண்ணனை வேண்டி நிற்கிறாள். அந்த மாயக் கண்ணன் புடவையை வளரச் செய்கிறான்.

சகு : கலங்காதே.. புடவை வளர்வது கண்ணனின் மாயம்..

துரி : புடவை வளர்கின்றதே என்று கலங்காதே.. அவளை இழுத்து வந்து என் தொடையில் அமர்த்து.. என்ன செய்கிறாள் பார்ப்போம்

பாஞ் : சீ.. வெட்கமில்லை.. பலர் கூடியிருக்கும் இந்தப் பேரவைக்கு இழுத்து வரப்பட்டேன் நான். என்னுடைய கூந்தலையும் சேலையையும் மற்றொருவன் தொட்டு இழுக்கும்படியான அவமானத்தையும் இன்று அடைந்தேன். இவைகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தவன் இதோ இந்த அவைக்குத் தலைவனாக வீற்றிருக்கும் கொடிய அரசனே ஆவான். இவனைச் சரியானபடி பழி வாங்காமல் விட மாட்டேன். என் கணவன்மார்களால் போர்க்களத்தில் இவனைக் கொல்லச் செய்து இவன் தொடையினின்று பீறிட்டெழும் குருதியைப் பூசினாலொழிய என் சினம் தீராது. இன்று விரிக்கப்பட்ட என்னுடைய இக் கூந்தல் இந்தச் சபதம் நிறைவேறினாலன்றி முடிக்கப்படாது. இது உறுதி. சத்தியம்.

திரு : அம்மா ! நீ பெண் தெய்வம். தர்ம பத்தினி. உன் சக்தி பெரிது. அதை அறிந்து கொள்ளத் தெரியாமல் மூடர்களாகிய என் பிள்ளைகள் ஏதேதோ தீங்குகளை உனக்குச் செய்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக அவற்றைப் பொறுத்துக் கொள். என் புதல்வர்களின் குற்றத்தை மன்னித்து விடு.. பாண்டவர்களே உங்கள் ஆட்சி, அரசு, உடைமைகள் எல்லாவற்றையும் திருப்பித் தருகிறேன். என் புதல்வர்களின் குற்றங்களை மன்னித்து மறந்து விட்டு நகருக்குச் செல்லுங்கள் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

சகு : (தனக்குள்) என்ன..? பாண்டவர்கள் மைத்துனர் திருதராட்டினரின் வேண்டுதலுக்கு இணங்கிவிட்டால் எனது திட்டம் என்னாவது.. என் தந்தையின் இலட்சியம் நிறைவேறுவது எப்படி.. கிருஷ்ணரும் இல்லாத இப்படியான சந்தர்ப்பம் ஒருபோதும் கிடைக்காது.. விடக்கூடாது.. பகை மூளவேண்டும்.. இருவர் குலமும் அழிய வேண்டும்.. (மனதுள்) தந்தையின் விரலான தாயப் பகடைக் காய்களினால் ஏற்பட்ட போட்டி, யுத்தத்தில் முடிய வேண்டும் அப்போது தான் தந்தையின் ஆத்மா சாந்தியடையும்.

துரி : தந்தையே.. சகுனி மாமா என்ன இது..

சகு : இல்லை.. விடுதலை செய்யக் கூடாது. அவர்கள் சூதாட்டத்தில் இழந்தவைகளைத் திரும்பக் கொடுத்து விடுவதும் முறையல்ல. பாண்டவர்கள் நமக்கு எதிரிகள். நம்மைத் தொலைத்து விடுவதற்கே முயற்சி செய்வார்கள். பாண்டவர்களை இப்படியே விட்டு விட்டால் நாம் செய்திருக்கும் அவமானங்களுக்கெல்லாம் பழி வாங்குவதற்காக உடனே படையெடுத்து வரத் தயங்க மாட்டார்கள்.. ஆகவே நன்கு சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். பாண்டவர்களை விடக்கூடாது. நான் வருகிறேன்.

துரி : ஆம் மாமா.. நானும் உடன்படேன்.. விரும்பினால் யுத்ததத்தில் வென்று இழந்தவற்றைப் பெற்றுக் கொள்ளட்டும். நானும் வருகிறேன்.

....... **காட்சி மாற்றம்** .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 4**

**களம் : யாகசாலை**

**பாத்திரங்கள் : தருமர், கிருஷ்ணன், திருதராஷ்டிரன்**

(மகாபாரதப் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் யாகத்திற்கு கிருஷ்ணன் வருகிறார்)

தரு : மகாபாரதப் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் ஆத்மா வீரசுவர்க்கம் அடையும் பொருட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யாகத்திற்கு போரின் நாயகனான தங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் கிருஷ்ண பரமாத்மாவே..

கிரு : எல்லாம் சரிதானே.. யாகத்தினைத் தொடங்கலாமே...

தர் : ஆம் எல்லாம் சரி.. தங்கள் வருகைக்காகத் தான் காத்திருந்தோம்.

கிரு : ஆ.. அப்படியா.. நல்லது.. அது சரி சொர்க்கத்தை அடைய அவரவர்க்குரிய பாகத்தை வைத்தாயிற்று அல்லவா?..

தர் : ஆயிற்று கண்ணா. முதலில் பீஷ்மர் பிறகு துரோணர்

கிரு : (என்னது) முதலில் பீஷ்மரா?..

தர் : ஆம்.. வேறு யாருக்கு.. குலத்தின் தோன்றலுக்கு காரணமான பீஷ்மரின் பெயரில் தான்.

கிரு : (கோபத்துடன்) ஆ.. என்னது பீஷ்மரின் பெயரிலா?.. வீரமரணம் அடைந்தவர்க்காக நடத்தும் யாகத்தில் முதல் பாகம் சகுனியின் பெயரில் அல்லவா இருக்க வேண்டும்..

தர் : முதல் பாகம் என்பது நாம் அளிக்கும் மிகப் பெரிய மரியாதை. அதை அந்தப் பாவி சகுனிக்கா முதலில் வழங்குவது?..

கிரு : ஆம்.. சகுனியே.. அதற்குத் தகுதியானவன் சகுனியே..

தர் : (ஆச்சரியத்துடன்) பிதாமகர் பீஷ்மரை விட சிறந்தவனா சகுனி? நயவஞ்சகமே உருவானவனுக்கு வீரமரண மரியாதையா?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரு : தருமா.. நீ கேட்பதன் அர்த்தம் புரிகின்றது.. நான் கூறுவதைக் கேள்.. வீரமரணம் என்பது போர்க்களத்தில் எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதி உயிர் துறத்தல் என்பது மட்டுமல்ல. தான் கொண்ட கொள்கைக்காக எத்தகைய தியாகங்களையும் புரிந்து, எத்தனை தடைவரினும் தகர்த்து, தன் இலட்சியம் நிறைவேறிய பின் கடமை முடிந்ததென தன் உயிர் துறப்பது தான் வீரமரணம்.. இதில் பீஷ்மரை விட உயர்ந்தவன் சகுனியே.. அதனை நினைவில் வைத்திரு..

தர் : பீஷ்மரின் லட்சியம் நிறைவேறாமல் போயிருக்கலாம். போரில் பாண்டவர் தோற்கவில்லை.. ஆனால், எங்களை அழித்துவிட வேண்டும் என்ற சகுனியின் லட்சியமும் வெல்லவில்லையே..?

கிரு : இந்தப் போரில் உடன்பிறந்தவர், உற்றார் உறவினர், பெற்ற பிள்ளைகள் என அனைவரையும் இழந்து நிற்கும் நீங்கள் ஐவரும், எல்லாம் இருந்தும், எதுவும் இல்லாதவர்கள்தான் தர்மா.. நீங்கள் என் தயவில் நடைப்பிணமாய் வாழ்பவர்கள். உங்கள் வாரிசுகளை அழித்த பின்னும் சகுனியின் ஆசை நிறைவேறவில்லை என்றா சொல்கிறீர்கள்..?

தர் : அப்படிப் பார்த்தால் சகுனியின் லட்சியம் எங்களை அழிப்பதை விட துரியோதனனுக்கு வெற்றியைத் தேடித் தருவதில்தானே இருந்தது. அதுவும் நிறைவேறவில்லையே. கௌரவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டனரே

கிரு : தர்மா..! எதை நினைத்து தன் வாழ்வை சகுனி ஆரம்பித்தானோ அதை முடித்தே சென்றான். ஒருபுறம் நூறு எதிரிகள். இன்னொரு புறம் ஐந்து எதிரிகள். உங்கள் ஐவரை அழிப்பதாக கூறியே, பல செயல்கள் மூலம் தனது நூறு எதிரிகளை உங்கள் மூலமே அழித்து உங்களையும் நடைபிணமாக்கியவன் சகுனி என்பதை அறியாமல் பேசுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு : என்ன.. கௌரவர்களை அழிப்பதே சகுனியின் இலட்சியமா?

கிரு : திருதராஷ்டிரரே ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள். கௌரவர்களை மட்டுமல்ல. உங்கள் ஒட்டுமொத்த குலத்தையும் வேரறுப்பதே அவன் நோக்கம். இலட்சியம். அதை நிறைவேற்ற தனி ஒருவனாக அவனால் முடியாது என்பதால். கௌரவ பாண்டவர்களுக்கிடையே விரோதத்தை வளர்த்து தன் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டான்.. புரிகின்றதா..?

திரு : நச்சுப் பாம்பென்று தெரியாமல் பால் வார்த்து நானே என் பிள்ளைகளின் அழிவிற்கு காரணமாகிப் போனேனே கிருஷ்ணா..

கிரு : இல்லை. நச்சுப் பாம்பல்ல சகுனி.. அடிபட்ட புலி அவன். பழிவாங்க பதுங்கிக் காத்திருந்தான். நேரம் வாய்த்ததும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டான் அவ்வளவு தான்.

திரு : துரோகி. நல்லவன் போல் நடித்து ஏமாற்றிவிட்டானே..

கிரு : இல்லை.. இங்கிருக்கும் அனைவரையும் விட சகுனி நல்லவன். உங்கள் மகன் துரியோதனனைக் கொன்றதற்காக பீமனைக் கொல்ல நினைத்த நீங்கள் நல்லவர் என்றால், அபிமன்யுவைக் கொன்ற ஜயத்ரதனை கொன்று பழிவாங்கிய அர்ஜுனன் நல்லவன் என்றால். பாஞ்சாலியின் சபதத்தை நிறைவேற்ற துரியோதனனைக் கொன்ற பீமன் நல்லவன் என்றால்.. தன் கண் எதிரிலேயே தன் குடும்பத்தினர் ஒவ்வொருவராய் உணவின்றி உயிர் துறப்பதை பார்த்திருந்த ஒரு சாம்ராஜ்யத்தின் இளவரசனான சகுனி, அதற்கு காரணமான உங்கள் குலத்தையே அழிக்க நினைத்து அதற்காகவே உயிர் வாழ்ந்த சகுனி, எல்லோரையும் விட நல்லவனே..

திரு : (பதறியபடி) என்ன சொல்கிறாய் கண்ணா.? எங்கள் குலத்தால் சகுனியின் குடும்பம் அழிந்ததா..? இதை நம்பவே முடியவில்லையே.

கிரு : அது எனக்கும், பீஷ்மருக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம். தப்பிப் பிழைத்தவன் சகுனி, இல்லை குடும்பத்தினாலேயே பிழைக்க வைக்கப்பட்டவன். தன் லட்சியம் வெல்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்வியலை மாற்றிக் கொண்டான். வீரனாக, நல்லவனாக, ஒழுக்கமானவனாக இருந்த சகுனியை இந்த நிலைக்கு ஆளாக்கியதே பீஷ்மர்தான் என்பதை அறிவீர்களா? (கோபத்துடன்) போரை வெல்ல நாம் செய்த அதர்மங்கள் எல்லாம் தர்மங்களாகும் போது. அவன் கொண்ட லட்சியம் வெல்ல சகுனி செய்த செயல்களும் தர்மங்களே..

தர் : (கேலியாக) பாஞ்சாலியைத் துகிலுரிக்க வைத்தது தான் சகுனி செய்த தர்மமா..?

கிரு : இது கேலியாகக் கேட்கும் விடயமல்ல தர்மா.. வரம்புமீறிப் பேசுகிறாய். யோசித்துப் பார் அன்றைய நிகழ்வை, எனக்குப் பதிலாக என் மாமன் சகுனி தாயம் உருட்டுவார் என துரியோதனன் சொன்னவுடன், எங்களுக்கு பதிலாக கண்ணன் தாயம் உருட்டுவான் என உங்களில் எவரேனும் கூறியிருந்தால், அது நடந்தே இருக்காது. அங்கு போட்டி தர்மனுக்கும் துரியோதனனுக்கும் இடையே தான் நடந்ததே தவிர சகுனியுடன் அல்ல. அந்த இடத்தில் தாயக்கட்டைகளைப் போல் சகுனியும் ஓர் கருவியே. பாஞ்சாலியின் அவமானம் சகுனியால் திட்டமிடப்பட்டதல்ல. அதற்கு முழுக்கப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் நீயும் துரியோதனனும்தான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மற்றையவர்களைப் போலவே சகுனியும் பார்வையாளன்தான். பழிகாரன் அல்ல. புரிந்து கொண்டு பேசுங்கள்.. அந்தத் தாயக்கட்டைகளின் தாற்பரியமாவது யாருக்காவது புரியுமா..?

தர் : கூறுங்கள்..

கிரு : சகுனியின் தந்தை சுபலனின் விரல் எலும்புகள்.. குரு வம்சத்தையே அழிக்கவென்று தாயப்பகடைகளாய் மாறிய மந்திர எலும்புகள். தனி ஒருவனாலேயே மாபெரும் இராச்சியம் அழிக்கப்பட வேண்டுமென உருவாக்கப்பட்ட தாயக்கட்டை.. ஆம் அந்த விரல் நினைத்ததை முடித்து விட்டது. எண்ணியதை நிறைவேற்றிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர் : கிருஷ்ணா..

கிரு : துரோகி, சதிமன்னன் என வர்ணிக்கப்பட்டாலும் சகுனி உண்மையானவன். சகுனி பீஷ்மரை அழிக்க வேண்டும் என்ற திட்டத்தில் சிறிதும் பிசகாமல் இறுதிவரை அதற்காகவே திட்டங்களை வகுத்தான். நேரிடையாகப் பார்க்கும் போது சதியாகப் பட்டாலும் அவனைப் பொறுத்த வரையிலும் அது நியாயமானதே.. தந்தையின் புகட்டலின்படி தன்னைச் சுற்றியிருந்த அனைத்துப் பாத்திரங்களையும் பகடைக் காய்களாக மாற்றி தன் அறிவாற்றலால் பீஷ்மரை வென்ற சகுனியின் இலட்சியம் தவறியதா.. கூறுங்கள்.

தர் : ஏற்றுக் கொள்ளுகின்றோம்..

கிரு : அது மட்டுமின்றி. இந்தப் பிரபஞ்சத்திலேயே அவன் காலம் முழுதும் என்னையே, அடுத்து நான் என்ன செய்வேன் என்பதையே அனுதினமும் நினைத்துக் கொண்டிருந்தவன். அது பக்தியாக இல்லாவிட்டாலும் கூட..

திரு : நாராயணா..

கிரு : ஆம்.. என் ஒவ்வொரு அசைவிற்கும் பொருளறிந்தவன் சகுனி ஒருவனே... அவன் உயிரோடு இருக்கும் வரை என்னால் அவனுக்காக எதுவும் செய்ய முடியவில்லை. அவனை என் பக்தனாக.. அவன் விரும்பாவிடினும். அவனை நான் ஏற்றுக் கொண்டதனால். யாகத்தின் முதல்பாகத்தை அவனுக்கு அளிக்க வைத்து பெருமைப்படுத்த எண்ணினேன். ஆம்.. நான்செய்ய வேண்டியதை.. குறைக்க வேண்டிய பூமாதேவியின் பாரத்தை அந்த விரல் குறைத்து விட்டது. சகுனிக்கே யாகத்தின் முதற்பாகம்

தரு, திரு : தங்கள் எண்ணம் அதுவென்றால் அதற்கு எதுவித ஆட்சேபணையும் இல்லையே..

**நிறைவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வாக் குறுதி




செந்தில் - கோபிகா - பொன்னம்பலம் - ரஜீவன்



லோசன் - ரஜினி - அம்பலம் - லூக்கஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வாக்குறுதி

**நாடக மாந்தர்கள் :**

- **செந்தில்குமரன்** – **அரசியல்வாதி**
- **கோபிகா** – **செந்தில்குமரனின் காதலி**
- **ரஜீவன்** – **செந்தில்குமரனின் நண்பன்**
- **பொன்னம்பலம்** – **கோபிகாவின் தந்தை**

**காட்சி : 1**

**இடம் : கோவில் தீர்த்தக்கரையோரம்**

**பாத்திரங்கள் : செந்தில்குமரன், கோபிகா**

செந் : (சிறிது கோபத்துடன்) கோபிகா.. கோபி.. இஞ்சைபாரும் இப்ப என்ன நடந்தது எண்டு முகத்தை உம்மெண்டு வைச்சுக்கொண்டு இருக்கிறீர்.. சந்தோசமாய்க் கதைப்பம் எண்டு வந்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தால்..

கோபி : (அழுதுகொண்டு) கதை.. கதை.. ஓம்.. இஞ்சைபாரும் செந்தில்.. கதைச்சுக் கதைச்சே இண்டைக்கு என்ரை வாழ்க்கை கந்தலாய்ப் போச்சுது.. இன்னும் எத்தினை நாளைக்குத்தான் கதைச்சுக் கொண்டே இருக்கப்போறமோ தெரியாது..

செந் : ஏன் அப்பிடிச் சொல்லுறீர் கோபிகா.. எண்டைக்கோ நீர் எனக்குச் சொந்தமாகப் போகிறவ. அப்பிடியிருக்க கந்தலாய்ப் போச்சுதெண்டு கண்ணீர் விட்டால்..

கோபி : (இடைமறித்து) சொந்தமாக முன்னமே கந்தலானதாலை தான் சொல்லுறன் செந்தில்.. நானும் தாயில்லாப் பிள்ளை.. ஐயாவின்ரை பென்சனிலை சீவிக்கிற ஏழைக்குடும்பம்.. நீங்களோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : (இடைமறித்து) என்ன..? செயமன்ரை மகன் எண்டு சொல்ல வாறீர் ஆக்கும். இஞ்சைபாரும்... பதவியள் இண்டைக்கு வரும்.. நாளைக்குப் போகும். இண்டைக்குப் பதவியிலை இருக்கிறவை.. நாளைக்கு எதிர்க்கட்சியாகலாம். நாளையிண்டைக்கு.. கட்டுப் பணமுமில்லாமல் நடுத்தெருவுக்கும் வரலாம்..

கோபி : நான் உந்தப் பதவியளைப் பற்றிக் கதைக்கேலை.. அதுகள் எனக்குத் தேவையுமில்லை..

செந் : (பகிடியாக) ம்.. உமக்கு இப்ப பதவியள் தேவையில்லை.. ஆனால் செயமன்ரை மனைவி எண்டு சொல்ல விருப்பம் இல்லாமலே..

கோபி : அதுதானே இல்லை எண்டு சொல்லுறனே..

செந் : இஞ்சை பாரும்.. அப்பாவுக்கு பதவி.. பரம்பரை.. அதுகள் தான் முக்கியம்.. ஆனால்..

கோபி : ஆனால்..

செந் : எங்கடை விசயத்திலை உமக்கு நான்.. எனக்கு நீர்.. செந்தில் குமரனுக்கு கோபிகா.. கோபிகாவுக்கு செந்தில்குமரன்.. அதிலை மாற்றமில்லை.. அவ்வளவுதான் என்னாலை சொல்லேலும்..

கோபி : செந்தில்குமரனுக்கு கோபிகா.. கோபிகாவுக்கு செந்தில்குமரன்.. ம்.. கேக்க நல்லாயிருக்குது தான்.. நானும் அப்பிடியிருக்க வேணுமெண்டு தான்.. இருக்கும் எண்டுதான்.. ஒரு பெண் கலியாணத்துக்கு முதல் எதை இழக்கக்கூடாதோ.. அது எல்லாத்தையும் இழந்தன்..

செந் : ஏன்.. இப்ப.. என்னிலை நம்பிக்கையில்லையே..?

கோபி : நம்பிக்கை இல்லாமலில்லை.. (அழுது) நம்பிக்கை இல்லாமலே நான் என்னை முழுசாகவே உங்களிட்டை.. ஒப்படைச்சனான்.

செந் : பிறகென்ன.. என்னிலை நம்பிக்கையிருந்தால் ஏன். கண்ணீரும் அழுகையும்.. சொல்லும் பாப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி : வாழ்வே கண்ணீரும் கம்பலையும் ஆகக் கூடாதே.. அதுக்காகத் தான்..

செந் : அப்ப இப்பவும் என்னிலை சந்தேகப்படுகிறீர் போலை..

கோபி : சந்தேகம் எண்டில்லைச் செந்தில்.. பயப்பிடுறன்..

செந் : பயமோ.. என்னிலையோ.. என்னத்துக்கு..

கோபி : ஒருத்தரிலுமில்லை.. என்னிலைதான்.. உண்மையைச் சொன்னால் முள்ளிலை சேலை விழுந்தாலும் சேலையிலை முள்ளு விழுந்தாலும் சேதம் சீலைக்குத்தான் எண்ணுவினம்.. இண்டைக்கு என்ரை நிலைமையும் அதுதானே.. அதை நினைக்கத்தான் பயமாயிருக்குது.

செந் : உதெல்லாம் பழங்கதை கோபிகா.. என்னை நம்பும்.. என்ன கஷ்டம் வந்தாலும் நான் உம்மைக் கைவிடமாட்டன். அதைப் புரிஞ்சு கொள்ளும் (கோயில் மணி அடித்தல்). அங்கை கோயில் மணியும் அடிக்குது. நல்ல சகுனம் தானே.. சும்மா மனதைப் போட்டு அலட்டாமல் கண்ணைத்துடையும்.

கோபி : (கண்ணைத் துடைத்து) ம்.. ஏதோ.. என்ரை மனமே என்னைப் பயமுறுத்துது.. என்ரை மனச்சாட்சியே என்னைக் குத்திக்காட்டுது. (பெருமூச்சு) ம்.. இனி என்ன போனது திரும்பி வரப்போகுதே..

செந் : (எரிச்சலுடன்) இஞ்சைபார் இவளவு சொல்லியும்.. பிறகும் பிறகும்.. வேண்டா வெறுப்பாய்க் கதைச்சால்..

கோபி : சரி.. சரி.. ஏதோ.. என்ரை மனச்சாட்சி உறுத்தினதாலை..

செந் : (இடைமறித்து) கண்டறியாத மனச்சாட்சி.. அதையே பிறகும் பிறகும் பைத்தியம் போலை சொல்லாதையும்..

கோபி : (இடைமறித்து) நீங்கள் இப்ப சொன்னியளே.. பைத்தியம் எண்டு.. அப்பிடித்தான் எடுத்துக்கொள்ளுங்கோ.. ஓம் பைத்தியம் தான்.. பைத்தியம்தான்

செந் : எங்கை.. எப்ப ஒரு சொல்லு விழும் பொறுக்குவம் எண்டு பாத்துக் கொண்டு இருக்கிறனீர்.. அப்பிடித்தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி : அப்பிடிச் சொல்லாதையுங்கோ.. அப்பிடி விழுறதுக்கும் உள்மனத்திலை இருக்கவேணும்.. சும்மாய் வராது.. உங்கடை உள்மனத்திலை இருக்கிறது தான் கோபம் எரிச்சல் எண்டு வரேக்கை உங்களை அறியாமலே வெளியிலை வார்த்தையளாய்க் கொட்டுறது.

செந் : உம்மோடை கதைச்சு வெல்லேலாது.. சொறி.. சொறியடா.. போதுமே..

கோபி : நீங்கள் சொறி கேக்க வேண்டாம்.. என்ரைவிதி.. நடக்குது.. ஓம்.. படைக்கேக்கை பிரமன் எழுதினதை ஆராலை மாத்த முடியும் சொல்லுங்கோ பாப்பம்.

செந் : வீணாய்க் கதையை வளக்காமல் எழும்பி வாரும் போவம்.. நான் ஒண்டு சொல்ல அதுக்குப் பதிலாய் நீர் ஒண்ட சொல்ல.. மிஞ்சிறது வீண்.. வியாக்கியானம் தான்..

கோபி : ஓ.. வியாக்கியானம் தான்.. இனி அப்பிடித்தான் சொல்லுவியள்..

செந் : இஞ்சைபார் அதுக்கும்.. வாரும்.. வாரும் கோபி நாங்கள் போவம்..

கோபி : சரி.. சரி.. நிலவுக்கு ஒளிச்சு பரதேசம் போறமாதிரி என்ரை கதைக்கு பயந்து போறமெண்டு சொல்லுங்கோவன்..

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி : 2**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : கோபிகா, பொன்னம்பலம்**

(வெடிச்சத்தம் கேட்டல்... நாயும் குரைத்தல்)

பொன் : என்ன மோனை உவங்கள் வெடிபோட்டுக் கொண்டு ஊர்வலமாய்ப் போறாங்கள்.. காது கன்னம் எல்லாம் கிழிஞ்சுபோற அளவுக்கெல்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிச்சத்தம் கிடக்குது.. எங்கடை நாயைக் கண்டிட்டாங்கள் போலை.. அதுதான் எங்கடை வீட்டுக் கேற்றடியிலை வரேக்கை வேணுமெண்டு கட்டுக்கட்டாய் கொழுத்திப் போடுறாங்கள்..

கோபி : சீச்சீ.. அது இண்டைக்கு பிரதேசசபை எலக்சனுக்குக் காசு கட்டுறாங்களாம்.. அது தான் ஊர்வலமாய்ப் போறாங்கள் போலை ஐயா..

பொன் : ஆ..ஆ.. அப்பிடியே.. அதுதான் உவர் செயர்மன் செல்வவேலற்றை மகன் செந்தில்குமரனும் போனவன்.. தகப்பன் ஊரைக் கொள்ளையடிச்சு முடிஞ்சுது.. இனி மகன்காரன் வெளிக்கிட்டிட்டான் போலை..

கோபி : எங்களுக்கேனய்யா அடுத்தவன்ரை கதையை.. விரும்பினால் போய் வோட்டைப் போடுறது. விருப்பமில்லாட்டில் விடுறது.. நாங்கள் போடேலை எண்டதாலை எலக்சன் நடவாமல் போயிடுமே. ஏனய்யா வீண் சோலியை..

பொன் : நான் என்ன இல்லாத பொல்லாததுகளையே சொன்னனான். செல்லவேலற்றை கொள்ளையடி இந்த ஊரே அறிஞ்சதடி மோனை.. உனக்குத் தெரியாது.. அவங்கடை பரம்பரையே ஊரைத்திண்டவங்களடி..

கோபி : ஐயா.. அவங்கட காதிலை கேட்டுதெண்டால்..

பொன் : என்ன நீயும் எனக்குப் பயங்காட்டுறியோ.. நீயே சொல்லு பாப்பம்.. ஒரு குடம் குடிதண்ணிக்கு இவடத்துச் சனங்கள் எத்தினை கட்டைதூரம் அலையுதுகள்.. அந்த நல்லதண்ணிக் கிணறும் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு கிடக்குது. உந்த வெடியளுக்குக்குடுக்கிற காசை அதிலை ஒரு குழாய்க்கிணறு அடிச்சால் எத்தினை சனமும் மிருக சாதியும் தண்ணி குடிச்சுக் களையாறும் சொல்லு பாப்பம்..

கோபி : செந்தில் எலக்சனிலை வெண்டால் செய்வார் தானே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் : ஓம்.. ஓம்.. செய்வார்.. சொன்னதுகள் நினைப்பு இருக்குதோ எண்ணுறதும் தெரியாது.. உப்பிடி நம்பி நம்பி வோட்டுப் போட்டுத்தான் இண்டைக்கு இந்த ஊருக்கு இந்த நிலை.. அங்கை வடக்கை பார்.. வாசிகசாலை என்ன.. விளையாட்டுக் கழகம் என்ன.. நெசவுசாலை என்ன.. ஏன் சுகாதார நிலையம் என்ன.. அவன் மனிசன்.. தன்ரை ஊர் எண்டு என்ன செய்யேலைச் சொல்லு பாப்பம்.. இதுகளோ.. எங்கை கொள்ளையடிக்கலாம் எண்டு திரியுறதுகள்.

கோபி : நீங்கள் இருந்து பாருங்கோ.. தகப்பன் எப்பிடியோ செந்தில் படிச்சவர்.. ஊரைப்பற்றி நல்லாய்த் தெரிஞ்சவர்.. வெற்றி பெற்றால் எவளவு செய்யிறன் எண்டு சொல்லியிருக்கிறார்.. அதுவும் இந்த முறை வட்டாரமுறையிலையும் தெரிவு நடக்கிறதாலை நிச்சயமாய் ஊருக்குச் சேவைசெய்யிற வாய்ப்புக் கூட.. செந்திலுக்கும் வெல்லுற சான்ஸ் கூடவாம் ஐயா..

பொன் : உப்பிடித்தானே அவன் தகப்பன் காரனும் வட்டார முறையிலை தானே வெற்றி பெற்றவன்.. என்னத்தைச் செய்தான்.. பாம்பின் கால் பாம்பறியும் எண்டது போலை தகப்பன் செய்த திருகுதாளங்களை மகனும் வடிவாய்ப் படிச்சிருப்பன்..

கோபி : இவரிலை தான் பிழை பிடியுங்கோ.. மற்றப்பக்கம்.. எங்களைக் கணக்கெடுப்பாங்களே.. ஓம்.. ஓம்.. ஆரோ ஒரு ஆளுக்கு வோட் போடப்போறம்.. அதை தெரிஞ்ச.. வெல்லுவினம் எண்டு தெரிஞ்சவைக்குப் போட்டால் நல்லது தானே ஐயா..

பொன் : அதெண்டால் சரிதான் பிள்ளை.. எல்லாரும் அது இது எண்டு வாய்ச்சொல்லிலை வாக்குறுதியளை அள்ளி வீசுறதிலை தானடி கெட்டிக்காரங்கள்.. வெண்டா எல்லாரும் ஒண்டுதான்.. (பதிஞ்சு) அது மட்டுமில்லையடி.. அவன் எக்கேடுகெட்டுப் போனாலும் எங்கடை சாதிக்காறனடி.. அதை மறுக்கேலுமே.. இப்ப பணமும் பவிசும் வந்தாப்போலை எங்களை மதிக்கிறேலையே தவிர.. ரத்தமடி.. எவன் வந்தாலும் எங்களுக்கு ஒண்டும் செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறதில்லை.. ஆனால்மற்றச் சாதிக்காறன் வந்தால் நீ சொன்னது மாதிரி எங்களை மதியாதுகளடி மோனை.. அதாலை வேறை ஆருக்கு உவனுக்குத்தான்..

கோபி : ஓமப்பா.. சாதியை இப்ப ஏன் இழுக்கிறியள்... ஆனால் படிச்சவரெண்டு பாருங்கோ.. செந்திலுக்கென்ன குறையப்பா.. அவங்கள் கூடிச் செந்திலுக்குத்தான் போடுவாங்கள்.. நீங்கள் இருந்து பாருங்கோவன்..

பொன் : சரி.. சரி.. நானென்ன அதுக்கிடையிலை சாகவே போறன்.. நீ சொல்லுறதைப்பார்த்தால் நீயும் செந்திலுக்குப் போலைதான் கிடக்குது.. சரி அப்ப நானும் எண்டு சொல்லன். அதுசரி எங்கடை ரெண்டு வோட்டும் வெல்லுறதுக்குக் காணுமெண்டு சொல்லுறியோ..

கோபி : காணுமெண்டில்லை.. வேணும். அது முக்கியம் ஐயா.. ஒரு வோட்டாலை தோத்தாலும் தோல்வி தோல்விதானே.. இந்த எலக்சனுக்கு கொஞ்சவோட்தானே.. ஒண்டு.. ரெண்டெண்டாலும் முக்கியம் தானே..

பொன் : ஒண்டுக் கடுத்தது ரெண்டு எண்டு சொல்லத் தெரியாத எனக்கு எங்கை மோனை உதுகள் புரியப் போகுது.. ஏதோ நானும் போட்டால் அவன் வெல்லுவானெண்டால் போடுறது தான்.. வேறை என்ன..

கோபி : (வேண்டா வெறுப்பாகப் போல் பாசாங்கு செய்து) ஏதோ கொஞ்சம் படிச்சதுகள்வந்தால் நாலுமனிசரைப் போலை எங்கடை ஊரும் வருமெண்டு சொன்னன்.. வேறை என்ன..

பொன் : (மாடு கத்துதல்) இஞ்சைபார் கதையோடை கதையாய் நிண்டிட்டன் (போய்க் கொண்டு) அந்தா குடிலிலை கட்டின மாடும் கத்துது.. அவங்கடை வெடி ஆடம்பரத்திலை எருதுகளுக்கு வைக்கல்போட மறந்துபோனன். நாலு வைக்கல் போட்டிட்டு வாறன்..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 3**

**இடம் : செந்தில் வீடு**

**பாத்திரங்கள் : செந்தில்குமரன், ரஜீவன்**

(இந்த வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் பாடல் வரி ஒலிக்க)

செந் : மச்சான் ரஜீவன்.. திருப்பி ஒருக்காப் போடுமச்சான்.. நிச்சயம் உலகம் பாராட்டும் அதிலை நிப்பாட்டு.. (இந்த வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் பாடல் முதல் நாலு வரி ஒலிக்க)

ரஜீ : சரி இதிலையே..

செந் : உதிலை என்ரை வொயிஸ்கட்போடவேணும்..

ரஜீ : எப்பிடி.. நேரடியாயோ..

செந் : உங்கள் பொன்னான வாக்குகளை எண்டு தொடங்கி..

ரஜீ : ஓம் மச்சான்.. அதுதான்சரி.. அப்பதான் நிச்சயம்.. ஹிட்ஆகும்.. ஸ்பெசலாய் இந்த யங்ஸ்ரேர்ஸ் மத்தியிலை..

செந் : அந்த வயது மட்டங்களைத்தான் நாங்கள் குறிவைக்கவேணும்..

ரஜீ : இப்பவே நீதான் வீரபுலவு வட்டாரத்திலை லீடிங்கிலை இருக்கிறாய்.. உங்கடை பரம்பரை வாக்கு வங்கி.. அது எப்பவும் உன்னோடைதான்.. இதைப் போட்டமெண்டால்.. புதிசாய் போட வாறவையையும் கவரக் கூடியதாய் இருக்கும்.. பிறகென்ன.. இந்த குரல் புது வாக்காளர் அதுதான் இளவட்டங்களின்ரை மத்தியிலை போய்ச்சேர.. இருந்து பார்.. உன்ரை இமேஜ் எப்பிடி ஏறுதெண்டு..

செந் : நீ இமேஜ் எண்டு சொல்லேக்கை தானடா கொஞ்சம் பயமாயிருக்கு... உனக்கு மட்டும்தானடா சொல்லுறன்..

ரஜீ : என்ன அப்பிடி.. என்னவிசயமடா..

செந் : (பதிந்து) கோபி இப்ப நாலுமாதமாம்.. கலியாணத்தைச் செய்யட்டாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜீ : (ஆச்சரியத்துடன்) போயும் போயும் இந்த நேரத்திலை.. இது வேறையேடா.. என்ன விசர் வேலையடா

செந் : (கவலையுடன்) ஓமடா.. என்ன செய்யிறதெண்டே தெரியேலை.. கலியாணம் செய்தாலும் பிழை.. செய்யாமலிருந்தாலும் பிழை.. திரிசங்கு நிலையடா.. அதுதான் யோசிக்கிறன்..

ரஜீ : என்ன நாலு மாதமோ.. இனி அப்பிடி இப்பிடியும் ஒண்டும் செய்யேலாதேயடா..

செந் : (பெருமூச்சு) உண்மைதான்.. எல்லாம் கையைவிட்டுப் போன காலம்.. என்னமச்சான் செய்யிறது..

ரஜீ : எலக்சன் முடியக் கலியாணத்தைச் செய்வமெண்டு சொல்லிச் சமாளியன்..

செந் : அப்பிடித்தான் சொன்னன்.. கேட்டாத்தானே.. எலக்சனுக்கு என்னும் ரெண்டு மாதமிருக்கு.. பிறகென்ன ஆறேழு மாதமாயிடும்.. ஊருலகத்துக்குத் தான் என்ன சொல்லுற தெண்டு ஒரே ஒப்பாரி..

ரஜீ : அதுவும் ஒருவிதத்திலை உண்மைதான்.. உன்ரை நிலைமையைச் சொல்லி.. எங்கையேன் வெளியூருக்கு ஒருகொஞ்ச நாளைக்குப் போயிருக்கச் சொல்லன்.

செந் : நான் என்ரை நிலைமையைச் சொல்ல.. தன்ரை நிலைமையை ஆர் பாக்கிறதெண்டு ஒரே பிடிவாதம்.... குறைஞ்சது ரகசியமாய்.. றெஜிஸ்ரேசனை எண்டாலும் முடிக்கட்டாம்..

ரஜீ : ஓமடா.. அதுகளின்ரை பக்கத்திலை பாத்தா அதுவும் சரிதான்.. ஓ அப்பிடிச் செய்தாலென்ன..

செந் : (உறுக்கி) அப்பிடிச் செய்தாலென்னவோ.. உனக்கென்ன பைத்தியமே.. முந்தியெண்டால் ரகசியமாய் என்ன வெண்டாலும் செய்யலாம்.. இப்பவே.. எங்கை விழும் பொறுக்குவம் எண்டு மூலை முடுக்கெல்லாம் பின்னாலையும் முன்னாலையும் மீடியாக்காறங்கள் திரியுறாங்கள்.. இதுக்கையோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜீ : அதுவும் உண்மைதான்.. ஒளிச்சுச் செய்து.. அவங்களுக்குத் தெரியவந்து அது பத்திறதிலையும் பாக்க வெளிப்படையாய்ச் செய்யிறது நல்லதடா..

செந் : இந்த நேரத்திலை எத்தினை பிரச்சனை சொல்லு பாப்பம்.. அப்பாவின்ரை பிரச்சனை ஒருபக்கம்.. அங்கை சம்பந்தம் வைச்சால் ஊர் ஒருமாதிரி நினைக்கும். அதுவும் இந்த நேரத்திலை எண்டால் எல்லாரும் வித்தியாசமாய் நினைப்பினம்.. அதுக்கையும் நாலுமாதம் எண்டறிஞ்சால். அதுவேறை.. எலக்சன் நேரமெண்டதாலை கட்சித்தலைவர்.. கட்சிக் கட்டுப்பாடு.. யோசிச்சுப்பார்.. எத்தினை சிக்கலெண்டு..

ரஜீ : இப்பவே உதுகளை யோசிக்கிறது.. அது முன்னமே யோசிச்சிருக்க வேணும்.. பொதுவேலையளிலை இறங்கிறவை உதுகளிலை கவனமாயிருக்க வேணும்..

செந் : பொது வேலையெண்டா.. நாங்களும் சாதாரணமனிசர்தானே.. நடந்தது நடந்திட்டுது.. இனி என்ன செய்யலாமெண்டு தான் தெரியேலை..

ரஜீ : அப்பாவோடை கதைச்சுப்பாரன்..

செந் : அந்தாளோ.. எனக்குத் தெரியாதே என்ரை அப்பாவைப் பற்றி.. தன்மானம் தன்மானம் எண்டு முழங்கிறவர்.. அவற்றை காதிலை இது பட்டுதோ.. ஒண்டில் அவர் அல்லது நான் பரலோகம். அது நிச்சயம்.

ரஜீ : அப்ப அம்மா..

செந் : அவ அப்பா கீறின கோட்டைத் தாண்டமாட்டா..

ரஜீ : அப்ப என்ன செய்யப் போறாய்..

செந் : சிநேகிதன் எண்டு உன்னைக் கேட்டன்.. நீ என்னையே திருப்பிக் கேட்டால்..

ரஜீ : உண்மையைச் சொன்னால்.. இண்டைய நிலைமையிலை சொறி தானடா.. மன்னிச்சுக் கொள்ளடா..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : தட்டிக்கழிக்கவும் பயமாய் இருக்குதடா..

ரஜீ : அது துரோகமடா.. எல்லாத்தையும் மறைச்சு அப்பாவின்ரை பெமிசனோடை கலியாணத்தைச் செய்.. அது இன்னும் உன்ரை வாக்கு வங்கியைக் கூட்டும்.. இல்லையோ நீ சொன்னது தான்.. இரண்டிலை ஒண்டு தான் செய்யலாம்..

செந் : நானும் எல்லாத்தையும் யோசிச்சுப் பாத்தன்.. ரெண்டாவது முடிவை யோசிச்சிட்டுத்தான் உன்னோடை கதைச்சன்.. பார்மச்சான்.. இப்பவும் பிரச்சனை.. பிறகு எலக்சனிலை வெண்டாப்பிறகு அவையளோடை சம்பந்தம் வைக்கவும் பிரச்சனை.. நாலைஞ்சு மாதத்திலை குழந்தை கிடைக்க அதுவும் பிரச்சனை... எல்லாத்தையும் யோசிச்சன்.. ஒண்டு ஆரேன் தெரியாத டொக்டர் மாரிட்டை றிஸ்க் எடுத்தெண்டாலும் நீ உனக்குத் தெரிஞ்ச பிள்ளையெண்டு கூட்டிக் கொண்டு போய் ஏதேன் செய்யவேணும்.. தவறினால்..

ரஜீ : இஞ்சைபார் மச்சான்.. என்னாலை ஏலாது.. என்னை உதுக்கை மாட்டிவிடாதை.. நானும் குழந்தைகுட்டிக்காரன்.. எனக்குத் தேவையில்லாத பிரச்சனை வேண்டாம்.. மச்சான் நீ எது சரியெண்டு நினைக்கிறியோ அதைச்செய்..

செந் : மச்சான்.. என்னடா வேண்டா வெறுப்பாய்..

ரஜீ : வேண்டா வெறுப்பெண்டில்லை.. உதிலை நான் ஆலோசனை சொல்லவும் மாட்டன்.. ஈடுபடவும் மாட்டன்.. மச்சான் கோவியாதை நானும் என்ரை குடும்பத்தோடை ஊருக்கை மானம் மரியாதையோடை சீவிக்க வேணும்.. என்னை உதுக்கிள்ளை தொடர்பு படுத்தாதை.. சொறியடா.. என்னாலை ஏலாது..

செந் : மச்சான் ரஜீவன்.. பொறுத்த நேரத்திலை நீயும் கையை விரிச்சால்..

ரஜீ : மச்சான்.. கோபியாதை.. எலக்சன் விசயமோ சொல்லு நான் தேவையான உதவி செய்து தாறன்.. ஆனால்.. உப்பிடியான விசயமோ மன்னிச்சுக் கொள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : (பெருமூச்சு விட்டு) ம்.. சரி.. நீயும் இயலாது எண்டால் நான் என்ன செய்யிறது.. பாப்பம்.. பாப்பம்.. போட்டுவா.. இப்ப சட்டு புட்டெண்டு முடிவெடுக்கேலாது.. நடக்கிறதைப் பாப்பம்..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 4**

**இடம் : பொன்னம்பலம் வீடு**

**பாத்திரங்கள் : கோபி, பொன்னம்பலம்**

(கோபி சத்தியெடுத்தல்)

பொன் : என்ன மோனை.. நானும் விடிய இருந்து பாக்கிறன்.. ஓங்காளிக்கிறாய்.. சத்தி எடுக்கிறாய்.. என்ன மோனை.. என்ன விசேசம்..

கோபி : அது ஐயா.. நேற்று சாப்பிட்டிட்டு வெயிலுக்கை போய்வந்தது.. பித்தமாக்கும்.. அதுதான் வயித்தைப் பிரட்டிக் கொண்டு வருகுது..

பொன் : ஏதோ.. எனக்கெண்டால் உது பித்தம் போலை தெரியேலை மோனை.. பித்தமெண்டால் மஞ்சல் நிறமாயிருக்குமடி..

கோபி : ஓம் ஐயா.. உண்மைதான்.. பாப்பம்..

பொன் : ஏதேன் வித்தியாசமாயெண்டாலும்..? உவர் இராசையா பரியாரியாரிட்டை காட்டுவம் மோனை.. அவர் நாடிபாத்து சொன்னால் தப்பாது..

கோபி : (குழப்பத்துடன்) அது.. அது.. வந்து ஐயா.. பாப்பம்.. இப்ப என்னத்துக்கு இராசையாப் பரியாரியிட்டை அவசரப்பட்டுப் போவான்..

பொன் : இல்லைமோனை.. ஏன் வைச்சிருப்பான்..

கோபி : இண்டைக்குப் பாத்திட்டு குறையாட்டில் நாளைக்குப் போவம்.. (தனக்குள்) செந்திலைக் கேட்டிட்டு சொல்லுற பதிலைப்பாத்து நான் ஓரேயடியாய்ப் போறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் : என்ன பிள்ளை.. உனக்குள்ளையே முணுமுணுக்கிறாய்.. அவர் என்ன தூரந்துலையோ எண்டுதான் சொன்னன். ம்.. தாயில்லாத குமர்ப்பிள்ளையடி நீ.. என்ன செய்யிறது.. என்ரை இயலாத்தன்மையடி.. என்னாலை இயண்டதைச் சொன்னன்.. நீ அதுக்குப்போய் புறுபுறுத்தால்..

கோபி : (சமாளித்து) இல்லை ஐயா.. (திரும்ப சத்தி) நாளைக்குப் போவமெண்டன்..

பொன் : இஞ்சைபார்.. பிறகும்.. சரி.. முகத்தைக் கழுவிப் போட்டு அதிலை சரி.. கொஞ்ச நேரம்.. உதிலை சரிஞ்சு படுத்தால் கொஞ்சம் சுகமாயிருக்கும்..

கோபி : (போய்க் கொண்டு) ஓம் ஐயா.. நீங்கள் பயப்பிடாதையுங்கோ.

......... **காட்சி மாற்றம்** .........

**காட்சி : 5**

**இடம் : கோயிலடி**

**பாத்திரங்கள் : கோபி, செந்தில்**

செந் : (எரிச்சலுடன்) என்னைச்சுத்தி உளவு பாக்கிறதுக்கெண்டே எதிர்க்கட்சிக்காரங்களும் ஊடகங்களும் எந்த நேரமும் திரியேக்கை.. இப்ப என்னத்துக்கு வரச்சொன்னனீர்.. ஆரேன் அவதானிச்சால்..

கோபி : (அழுது) வேறை என்ன.. தெரியாத மாதிரிக் கேக்கிறியள்.. நேற்று முழுதாய் ஒரே சத்தி.. ஐயாவுக்குச் சந்தேகம் வந்திட்டுது.. இராசையாப் பரியாரியிட்டை போவம் எண்டவர்.

செந் : ஐயா தானே.. வரச்சொல்லிக் கேட்டா போமன்..

கோபி : போய் அவர் நாடிபிடிச்சுப்பாத்து நாலுமாசம் எண்டு சொன்னால்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : நல்லது தானே.. எப்பவோ தெரியத்தானே போகுது.. ஐயாவும் மகளுமாய்ச் சேர்ந்து பரியாரியாரிட்டை கதைச்சு இல்லாமல் பண்ணுறதுக்கு ஒரு வழியைப் பாருங்கோ.. அதுதான் இண்டைய நிலைமையிலை சுகமானது..

கோபி : என்ன பகிடியாயே இருக்கு.. நாலு மாசம்..

செந் : நாலில்லை ஐஞ்சு செண்டாலும் என்ன செய்யிறது.. அது தான் வழி.. வேறை வழியில்லை.. அதை மறந்திடாதையும்.. என்னைப் பொறுத்தமட்டிலை உந்த நிலைமையிலை.. நான் இண்டைக்கு இருக்கிற நிலைமையிலை உதைப்பற்றி நினைக்கவே நேரமில்லை.. நாளைக்கு வெற்றிகிடைச்சு செயர்மனானாலும் கலியாணம் செய்து ஐஞ்சு மாதத்திலை குழந்தை கிடைக்கிறதை நான் விரும்பேலை.. என்ரை கட்சி விரும்பாது..

கோபி : செந்தில்.. ஐஞ்சு மாதத்திலை குழந்தை கிடைக்கிறதை நான் விரும்பேலையோ..

செந் : ஓம்.. என்ரை முடிவிலை மாற்றமில்லை.. இப்ப அப்பாவோடை போய் பரியாரியாரிட்டைக் காட்டி ஏதேன் செய்யும்.. வேறை என்ன செய்யச் சொல்லுறீர்.. இண்டைக்கு எனக்குத்தேவை.. வெற்றி.. வெற்றி.. இந்த வீரபுலவின்ரை செயர்மன்.. அவ்வளவு தான்.

கோபி : நீங்கள் அண்டைக்குச் சொன்னது.. தந்த வாக்குறுதியள்..

செந் : அது அண்டைக்கு.. கோபி இஞ்சை பாரும்.. இண்டைக்கும் நான்சொல்லுறன்.. கலியாணம் கட்டுறதும் குழந்தை பெறுகிறதும் வலு சுகம் அது இண்டைக்கு. இப்ப தான் செய்யவேண்டுமெண்டில்லை. எப்ப எண்டாலும் செய்யலாம்.. ஆனால் எலக்சனிலை வெண்டு வீரபுலவுக்கு செயர்மனாகிறதுக்கு.. இப்ப காலம் கனிஞ்சிருக்குது. இப்பதான் முடியும்..

கோபி : செந்தில் நீங்களா இப்பிடி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : ஓம் நான் மட்டுமில்லை எந்தவொரு ஆம்பிளையும் உதைத்தான் சொல்லுவான்.. ஆம்பிளை மட்டுமில்லை பொம்பிளையாயிருந்தாலும் இதைத்தான் சொல்லுவாள்..

கோபி : (கோபத்துடன்) உங்கடை நியாயத்துக்கு மற்றவையை இழுக்க வேண்டாம்..

செந் : வீண்கதை வேண்டாம்.. அதுவும் கோயிலடியிலை.. இப்பவும் நாங்கள் கதைச்சதை ஆர் ஆர் கண்டுதுகளோ.. உம்மடை ஐயாவோடை போய்ப் பரியாரியிட்டைத் தெரியாமல் நடந்து போச்சுதெண்டு சொல்லி காதும் காதும் வைச்சமாதிரி எல்லாத்தையும் செய்யும்.. ஏதேன் காசு தேவையெண்டால் தாறன்.. எலக்சனிலை வெற்றிபெற்றதுக்குப் பிறகு நிலைமையைப் பாத்துச் செய்வம்.

கோபி : (கோபத்துடன் அழுது) செந்தில்.. எலும்பில்லாத நாக்காலை எதுவும் செய்யலாம்.. சொல்லலாம்.. நான் கடைசி மட்டும் ஐயாவோடை பரியாரியிட்டைப் போகப்போறதில்லை.. நம்பிக்கெட்டனான் ஓம் நம்பித்தான் என்னையே தந்தனான்.. உங்களுக்கு இண்டைக்கு அரசியல் எல்லாத்தையும் மறைச்சுப் போட்டுது..

செந் : என்னை மட்டும்தான் நம்பிக்கெட்டீரோ.. இல்லாட்டில்.. வேறை ஆரையும்..

கோபி : செந்தில்..! (கோபத்துடன் அழுது) இப்பிடிக் கேக்க மனம் வருகுதே.. செந்தில்.. அதுவும் கோயில் வாசலிலை மனம் கூசாமல் சொல்லுறீரோ.. ஓம்.. நான்தான் பிழைசெய்தவள்.. பிழைசெய்தவள்.. கெட்டவள்.. கெட்டவள்.. இண்டைக்கு அரசியல் தான் முக்கியம் எண்டீறியள்.. அண்டைக்கு யோசிச்சிருக்கவேணும்.. அரசியல் செய்யுங்கோ.. நல்லாய் அரசியல் செய்யுங்கோ.. ஓம்.. இப்ப புரிஞ்சுது.. எல்லாம்புரிஞ்சுது.. நல்லாய்ப் புரிஞ்சுது.. நான் கெட்டவள்.. கெட்டவள்.. ஒண்டு மட்டும் சொல்லுறன்.. எப்ப உந்தச் சொல்லுச் சொன்னியளோ.. அதே போதும்.. போதும்.. (உரத்து) இதிலை நிக்காதை போ.. போ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : கோயிலடியிலை கத்திக் குழறி என்ரை மானத்தை வாங்காதை.. எல்லாத்தையும் அப்ப.. யோசிச்சு நடந்திருக்க வேணும்.. கதைக்கிறதை அளந்து கதை..

கோபி : ஓம்.. நான் கூடாதவள்.. கெட்டவள்.. நம்பிக் கெட்டவள்.. நடத்தை கெட்டவள்.. ஆண்டவா.. அம்பலத்தாடி வைரவா.. எல்லாத்தையும் பாத்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் தானேயிருக்கிறாய்.. செந்தில்.. போ.. போ.. இதிலை நிக்காதை போ.. போய் செயர்மன் கதிரையிலை இரு.. போ.. நான் கெட்டவள் என்ரை முடிவை எடுக்கிறன்.. இந்த அம்பலத்தாடிவைரவர் உண்மையான கடவுள் எண்டால் உனக்குக் காட்டுவர்.. உனக்குக் காட்டுவர்.. (கோயில்மணி அடித்தல்) (பதிந்து சொல்லுதல்) என்ரை வைரவர் உனக்குக் காட்டுவர்..

(றெயின்போவதும் ஆ...ஆ.. என்ற பெண்குரலையும் சேர்ப்பது நன்றாக இருக்கும்)

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 6**

**இடம் : கோயிலடி**

**பாத்திரங்கள் : செந்தில், ரஜீவன்**

ரஜீ : என்ன செந்தில்.. இப்ப சந்தோசம் தானே.. எத்தினை.. ஒண்டும் ஒண்டும் மட்டுமில்லை. அதோடை தகப்பனும்.. இப்ப சந்தோசம் தானே. இனி உனக்கு ஒரு சோலியுமில்லை.. ஊருக்கோ அல்லாட்டில் உலகத்துக்கோ உன்ரை விசயம் தெரியாது. என்ன பொன்னம்பலத்தாற்றை பெட்டை வைரவர் கோவிலிலை இருந்து அழுததாம்.. கொழும்பிலை இருந்து வந்த றெயினடிச்சுச் செத்ததாம்.. அந்தக் கோலத்தைக் கண்ட் தகப்பன் ஹாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றாக் வந்து செத்ததாம். அதுதானே செய்தி.. உன்ரை பெயர் ஒரு இடத்திலும் வரேலை.. ஆனால் பிரதேசசபைத் தலைவர் வேட்பாளர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் எண்டு வந்தது.. இதைவிட வேறை என்னவேணும். நீ நினைச்சது எல்லாம் சரியாய் நடந்தது தானே.. உன்ரை இமேஜுக்கும் ஒரு பழுதுமில்லைத்தானே.. இதுதானே நீ எதிர்பார்த்தது.

செந் : என்ரை மனம் எவளவு வேதனைப்படுகுது தெரியுமே.. உனக்கே தெரியாட்டில்.. நீயும் அப்பிடி நினைக்கிறியே ரஜீவன். என்னைப்பற்றி எல்லாம் தெரிஞ்ச நீயும் இப்பிடிச் சொன்னால்..

ரஜீ : இல்லாமலே.. கோயிலிலை இருந்து நேரைபோய் கொழும்பிலை இருந்து வந்த ரெயினிலை பாய்ஞ்சதாலை வயித்திலை குழந்தை இருந்ததோ.. குட்டி இருந்ததோ.. உன்ரை குழந்தையோ.. ஆற்றை குழந்தையோ ஒண்டும் தெரியாது.. சதைப்பிண்டத்தை அள்ளி வாளியிலை.. ஆண்டவனே.. செந்தில்.. அதைப்பாத்து தகப்பன்காரன் மயங்கினது தான்.. ஆஸ்பத்திரியிலை காட்அற்றாக் எண்டது தான்ரா றிப்போட்.. பாத்தியே.. உன்ரை நல்ல காலத்தை கருவையும் அதுதான் உன்ரை குழந்தையையும் அடையாளமே இல்லாமல் பண்ணி.. மரண விசாரணைக்குச் சாட்சி சொல்லத் தகப்பனையுமில்லாமல் பண்ணிப் போட்டுது கடவுள்.. கடவுளும் உன்ரை பக்கம் தானடா..

செந் : ரஜீவன்.. வெந்த புண்ணிலை வேல் பாய்ச்சாதை மச்சான்.. திருப்பித் திருப்பி என்ரை பிழையை மட்டும் சொல்லி..

ரஜீ : (ஏளனமாக) என்ன செந்தில் வெந்த புண்ணோ.. என்ன எனக்கே கதைவிடுறியோ.. நான் அரசியல் வாதியில்லையடா.. இண்டைக்கு எத்தினையோ வாக்குறுதியளைக் குடுத்திட்டு நாளைக்கு அதுகளை மறக்கிறதுக்கு.. ஓம் நான் ஏற்றுக்கொள்ளுறன்.. நான் உன்னை மாதிரி அரசியல் வாதியில்லையடா.. நானும் கலியாணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிசிக்காரியோடை சந்தோசமாயிருக்கிற ரெண்டு பிள்ளையளின்ரை தகப்பனடா..

செந் : ஏதோ நான் தான் போய் றெயினிலை தள்ளிவிட்டது எண்டமாதிரிக் கதைக்கிறாய்..

ரஜீ : நீ தள்ளிவிட்டதெண்டு சொல்லேலை.. உன்ரை நடவடிக்கைகள்தான் தள்ளிவிட்டது எண்டு சொல்ல வாறன்...

செந் : என்னிலை பிழைபிடிக்கிறது சரி.. நீ என்ரை பக்கத்திலை இருந்து யோசிச்சுப் பார்..

ரஜீ : என்ன உன்ரை பக்கத்திலை இருந்து பாக்கவேணும் சொல்லு.. கோபிகா உன்னை நம்பிக் காதலிக்கேக்கை உன்னைப்பற்றியும் உன்ரை குடும்பத்தைப்பற்றியும். கோபிகாவின்ரை நிலைமையையும் யோசிச்சிருக்க வேணும்.. கலியாணத்துக்கு முன்னமே பொய் நம்பிக்கையளை வளர்த்து அந்தப் பிள்ளையின்ரை பெண்மையைச் சூறையாடத் திட்டம் போடேக்கை யோசிச்சிருக்கவேணும். உன்ரை குழந்தை தன்ரை வயித்திலை வளருது எண்டு சொல்லேக்கை யோசிச்சிருக்க வேணும் எல்லாத்துக்கும் மேலை கோயில்வாசலிலை வைச்சு என்னை மட்டும்தான் நம்பிக்கெட்டீரோ.. இல்லாட்டில்.. வேறை ஆரையும் எண்டு நாக் கூசாமல் கேட்டிருப்பியே..

செந் : (தழுதழுத்து) அது வந்து வாக்குவாதப் படேக்கை.. கோபியும் கத்த ஆத்திரத்திலை வந்திட்டுதடா..

ரஜீ : நான் சொல்லுறன்.. நான் முந்திச் சொன்ன எல்லாத்தையும் விடு.. இந்த வசனம் உன்ரை வாயாலை வந்ததுதான் இண்டைக்கு இப்பிடியொரு நிலையை உருவாக்கினது. எந்த ஒரு பொம்பிளையும் தன்ரை கருவுக்கு தகப்பனைக்கேட்டு கேலிபண்ணப் பொறுக்க மாட்டாள். அதிலையும் அந்தக் கருவுக்கு சொந்தக்காரனே உப்பிடிக் கேள்வி கேட்டால். சொல்லவும் வேணுமே... எல்லாத்துக்கும் மேலாலை கலியாணம் செய்ய முந்தியே உருவான கருவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதின்ரை சொந்தக்காரனே உப்பிடிக் கேள்வி கேட்கப் பொறுக்க மாட்டாள். அதிலையும் இந்த வீரபுலவின்ரை பெண்பிள்ளையள்.. நீ வீரபுலவின்ரை செயர்மனாகிறதுக்குப் போட்டி போடுறாய்.. ஆனால் வீரபுலவின்ரை பெண் பிள்ளையளைப் பற்றி எந்த அடிப்படையும் தெரியாமல் இருக்கிறாய் (ஏளனச் சிரிப்பு) ம்.. இதுதான் உலகம்..

செந் : ரஜீவன்.. என்னை மன்னிச்சுக் கொள்ளடா..

ரஜீ : ஆரை ஆர் மன்னிக்கிறது செந்தில்.. நீ சொன்னமாதிரி.. உன்னைச் சுத்தி ஊடகங்கள்.. ஊர் முழுக்க உன்ரை ஆதரவாளர்கள்.. நீ வெற்றியின் விளிம்பிலிருக்கிற வீரபுலவின்ரை நாளைய தலைவர்.. உன்னை நான் மன்னிக்கிறதோ..

செந் : நான் உன்ரை நண்பனடா.. சின்ன வயதிலை இருந்து சிநேகிதனடா..

ரஜீ : அது நேற்று வரைக்கும்.. நாளைக்கு வெண்டாப்பிறகு.. நான் ஆரோ.. நீ ஆரோ.. எடேய் அரசியல்வாதியளின்ரை அடிப்படை வரைவிலக்கணமே அதுதானடா..

செந் : இந்தச் சம்பவத்தை மட்டும் வைத்து இப்பிடித் தவறாய் எடை போடாதை ரஜீவன்.. என்னை நம்பு..

ரஜீ : உப்பிடி எத்தினை நம்பிக்கை வசனங்களை இழுத்திருப்பாய்.. எத்தினை சத்தியங்களைச் செய்திருப்பாய். எத்தினை வாக்குறுதியளை இழுத்து விட்டிருப்பாய். சரி கோபிகா தான் தன்னை இழந்தது தவறுதான். ஆனால் அந்தாள் தகப்பன்.. பொன்னம்பலத்தார். அது என்னபாவமடா செய்தது.. பாவமடா.. மிரிச்ச இடத்துப் புல்லும் சாகாது..

செந் : அந்தாளுக்குக் ஹாட்அற்றாக் வந்ததுக்கு நான் என்ன செய்யிறது.

ரஜீ : உன்னாலை தான்.. உன்னாலை தான். ஐஞ்சு வயதிலை தாய் செத்துப்போக கோபிகாவுக்காகவே தன்ரை வாழ்க்கை எண்டு பிறகு கலியாணம் செய்யாமல் எவளவு பவுத்திரமாய் பாசமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்த மனிசன். உந்தக்கோலத்திலை காட்டி அடையாளம் காட்டச் சொன்னால் ஹாட்அற்றாக் ஆருக்குத்தான் வராமல் விடும். உன்னை மாதிரி அரசியல்வாதியளுக்கெண்டால்.. உதுகள் சிம்பிள். ஆனால் அந்தாளைமாதிரி பூவாய் வளத்தவைக்கு.. சொல்லி வேலையில்லை..

செந் : நடந்தது நடந்து முடிஞ்சுது. அதையே திருப்பிச் சொல்லிக்குத்திக்காட்டி என்னிலையே பிழைபிடிச்சால்.. என்னை என்னதான் செய்யச் சொல்லுறாய்..

ரஜீ : நான் என்னத்தைச் சொல்ல.. உதுக்குத் தீர்ப்புச் சொல்லுறது நானில்லையடா.. கோபி கண்ணீர் விட்ட அம்பலத்தாடியான் சொல்லுவன்..

செந் : நான் செய்தது சரியெண்டு சொல்ல வரேலை.. ஆனால்

ரஜீ : சரி செந்தில்.. ஏதோ மன வெப்பியாரத்திலை நானும் கூடக் கதைச்சிட்டன் போலை.. நான் ஆரடா உன்னைத் திருத்தவும். உனக்கு உபதேசம் சொல்லவும் ஏதோ அவன் கணக்கெழுதுறவன் பாப்பான். இப்பநீ உன்ரை வேலையைப் பார். இந்த இழப்பாலை உன்ரை இமேஜுக்கு எந்தப் பாதிப்புமில்லைத்தானே.. பிறகென்ன.. எலக்ஸன் வேலையிலை உசாராயிரு.. இதிலை உன்ரை சம்பந்தம் தொடர்பாய்.. என்னைத் தவிர.. ஒருத்தருக்கும் தெரியாது.. நான் ஒருத்தருக்கும் வெளிவிடன். என்னை நம்பு.. அதைப்பற்றி யோசியாமல் எலக்சன் வேலையைத் தொய்யவிடாமல் கொண்டுபோ.. (போய்க்கொண்டு) வெயிலும் ஏறியிட்டுது. கதைச்சாப்போலை மினைக்கட்டிட்டன்.. வீட்டிலை தேடுங்கள்.. நான் வாறன்.

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 7**

**இடம் : கோயிலடி**

**பாத்திரங்கள் : கோபி, செந்தில், ரஜீவன்**

(பேய் அதனால் கோபமும் ஆத்திரமும் கலந்த பெண் (கோபிகா) வசனங்களும் பயந்த செந்தில் குமரனின் வசனங்களும் அமைதல் வேண்டும்)

ரஜீ : என்ன செந்தில்.. முகமெல்லாம் ஒரு மாதிரிக்கிடக்குது.. எலெக்சன் கிட்டக்கிட்ட வேலை கூடவோ.. (ஏளனமாக) அல்லது பாட்டி கீட்டி ஏதாலும்..

செந் : இல்லை மச்சான்.. (இழுத்து) அதுவந்து.. வந்து..

ரஜீ : என்ன வந்தும் போயும்.. ஏன் என்ன விசேசமடா..

செந் : ராத்திரி நித்திரையே யில்லை..

ரஜீ : முகமும் கண்ணும் சொல்லுது.. ஏன் ஏதும் கூடியிட்டுதோ.. அல்லது பாவிச்சதிலை ஏதும் எக்கச்சக்கமாய்ப் போச்சுதோ.. மச்சான் பாட்டியளிலை கவனமாயிருக்க வேணும்.. ஆரேன் எக்கச்சக்கமாய் ஏத்திவிட்டிடுவாங்கள்..

செந் : உனக்கு எதிலையும் பகிடிதான். நான் பட்டபாடு ஆண்டவனுக்குத் தானடா தெரியும். செத்துப் பிழைச்சதுமாதிரியடா..

ரஜீ : ஏன் ஏதும் வாள் வெட்டுக் கிட்டே..

செந் : அதெண்டாப் பறுவாயில்லையடா.. இது ஐயோ.... இப்ப நினைச்சாலும்..

ரஜீ : வாள் வெட்டே பறுவாயில்லையெண்டா.. வேறை என்னடா..

செந் : மச்சான் நீ.. நம்புறியோ இல்லையோ..

ரஜீ : நீ சொல்லு நான் நம்புறன்.. விடுகதை போட்டது காணும்.

செந் : ராத்திரி.. நித்திரையிலை.. கனவிலை.. கோபிகா வந்ததடா..

ரஜீ : (பயத்துடனான ஆச்சரியத்துடன்) என்ன.. அ.. கோபிகாவோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : ஏனடா.. நம்பேலையே..

ரஜீ : நீ சொன்னால் நம்பத்தானேயடா வேணும்..

செந் : ஓமடா.. அதே கோலம்தானடா.. அப்பிடியே வந்து

ரஜீ : வந்து..

செந் : வந்து.. வந்து..

கோபி : ஏய்.. செந்தில்.. நான் தனிய இல்லையடா.. உன்னாலை.. உன்ரை திமிராலை.. மூண்டு உயிர் ஒண்டாய்ப் பயணம் செய்யிறம். நீ நினைச்சியோ நாங்கள் இந்த உலகத்தைவிட்டே போட்டமெண்டு.. இல்லை.. இல்லை.. உன்னைச் சுத்திச்சுத்தியே திரியிறம். திரிவம். விடமாட்டம்..

செந் : என்னை ஒண்டும் செய்யாதை.. நான் நான்..

கோபி : என்ன.. நான்.. நான் எண்ணுறாய்.. சொல்லு.. அண்டைக்கு நான் சொன்னதை.. என்னைக் கலியாணம் செய்யச் சொன்னதை.. நீ கேக்கேலை.. இண்டைக்கு.. இண்டைக்கு.. நீ சொல்லு.. விடமாட்டன்.

செந் : நான். நான். கலியாணம் செய்ய ஏலாதெண்டு சொல்லேலைத்தானே.. எலக்சன் முடியச்செய்வம் எண்டு தானே சொன்னனான்.

கோபி : சொல்லாதை.. பொய் சொல்லாதை.. எங்களிட்டை பொய் சொல்லாதை.. நீ எத்தினை நாடகமாடினாய்.. எத்தினை வாக்குறுதியளைத் தந்தாய்.. ஓமடா.. எத்தினை வாக்குறுதியளைத் தந்தாய்.. கடைசியிலை என்னையே.. (அழுது) என்னையே தந்தாப்பிறகு.. என்னைக் கந்தலாக்கிப்போட்டு.. என்ரை செல்லம் நாலுமாசமாய் என்ரை வயித்திலை வளருதெண்ண.. என்னடா.. என்னடா சொன்னாய்.

செந் : என்ன.. என்ன.. எலக்சன் முடிய..

கோபி : (அதட்டி) பேய்.. பொய் பொய்.. நான் மனிசனில்லை.. அது தெரியும் தானே.. பிறகும்.. பொய்..

செந் : எலக்சன் முடியுமட்டும்.. எண்டன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி : (இடைமறித்து) எலக்சனோ.. டேய்.. டேய் சொன்னதை நினைச்சுப் பாரடா.. என்னை மட்டும்தான் நம்பிக்கெட்டியோ.. இல்லாட்டில்.. வேறை ஆரையும். (அழுது) எப்பிடியடா மனம் வந்துது. எப்பிடியடா இப்பிடிச் சொல்ல மனம் வந்துது.. நீ.. நீ உன்ரை அலுவல் முடியும் மட்டும் தந்த வாக்குறுதியளெல்லாம் எங்கையடா போனது. எங்கையடா போனது.. (பதிந்து) எங்கையடா போனது. ஓம் ஐயா நெடுகச்சொல்லுவர்..

பொன் : மோனை.. உவங்கள் எங்கடை சாதிக்கராராயிருந்தாலென்ன.. படிச்ச பண்புள்ள வங்களாயிருந்தாலென்ன. அரசியல் எண்டு வந்தால் அவங்களுக்கு வாக்குறுதியளை அள்ளிவீச மட்டும் தான் தெரியும். அதைச் செய்யுறது அதெப்பிடியெண்டு தெரியாது. அதுக்கு கட்சிபேதமோ நிறபேதமோ இல்லையடி..

கோபி : ஓமடா. நீ ஒரு முழு அரசியல்வாதியெண்டு என்ரை வாழ்க்கையிலையும் காட்டிப்போட்டாய்.. உன்ரை வாக்குறுதியளை நம்பி நான்.. அதுதான். ஒரு பெண் எதை கலியாணத்துக்கு முதல் தாரைவார்க்கக் கூடாதோ.. அதை உனக்குத் தாரைவார்த்தனடா.. எடேய்.. இஞ்சை பார்.. இஞ்சைபார்.. என்னோடையே கூடத்திரியுற செல்லக் குஞ்சு.. கேட்பானடா.. இஞ்சை பார்.. அவன் கூப்பிடுறதைக் கேள்.. (குழந்தையொன்று அம்மா அம்மா.. அப்பா.. அப்பா..)

செந் : ஐயோ.. ஐயோ.. (தொடர்ந்து பயத்தில்..) போ.. போ.. என்னை விடு..

கோபி : கத்தாதை.. நீ கத்தினால் ஊர் முழுக்கக் கூடினால் உனக்குத்தான் வெக்கம்.. (உரத்து) கத்தாதை.. என்ரை செல்லத்தின்ரை குரலைக் கேள்.. கேள்.. (குழந்தையொன்று அப்பா.. அப்பா..) விடமாட்டான்.. உன்னை விடமாட்டான்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : இல்லை.. இல்லை.. நான்.. நான்.. செய்தது.. சொன்னது.. எல்லாம்.. தவறு.. ஐயோ என்னை.. என்னை.. சந்தோசமாய்.. வேண்டாம்.. வேண்டாம். நிம்மதியாய்.. இருக்க விடு..

கோபி : நீ நிம்மதியாய் இரு எண்டுதான் நான் றெயினிலை பாய்ஞ்சன்.. ஆனால் என்ரை செல்லம் என்னை விடுறானில்லையே.. (மனிதர் வரும் சத்தம்) அங்கைபார்.. கத்தாதை கத்தாதை எண்டன்.. கேட்டியே.. நீ பொய்வாக்குறுதியளைக் குடுத்து உன்னை நம்பி உன்ரை வாக்குறுதியளை நம்பி உனக்கு வோட்டுப்போடக் காத்திருக்கிறதுகள் வருகுதுகள்.. (உரத்து) கத்தாதை எண்டன்.. கேட்டியே.. எனக்கு வாற மனிசரைத் தெரியுது.. ஆனால் அவைக்கு என்னைத் தெரியாது.. நான்.. நான்.. நாங்கள் இப்ப போறம்.. உன்னை விடமாட்டம்

செந் : ஆண்டவனே..

ரஜீ : பிறகு

செந் : பிறகென்ன... ஆக்கள் வந்த உடனை ஒண்டையும் காணேலை.. வந்தவையும் ஏதோ ஆரோடையோ கொழுவுப்பட்டதெண்டிட்டு.. கவனமாயிருக்கச் சொல்லிப்போட்டுப் போட்டுதுகள்.. பெடியள் ரெண்டு பேர் காவலுக்கு என்ரை அறையுக்கைதான் படுக்கை..

ரஜீ : உது நினைவடா.. நீ அதையே நினைச்சுக் கொண்டு கிடந்திருப்பாய்.. அதுதான் கனவிலை வந்துதாக்கும்..

செந் : இல்லையடா.. குரல்.. குரல்.. அப்பிடியே கோபிகாவின்ரை குரல்தானடா.. உண்மையிலை மச்சான் நான் கோபிகாவைப் பற்றி நினைச்சுக் கொண்டு கிடந்தாலும்.. குழந்தை.. அது அப்பா எண்டு கூப்பிட்டது..

ரஜீ : எல்லாம் மனப்பிரமையடா.. பேயும் பிசாசும்.. உந்தப் பேயும் பிசாசும் உண்மையெண்டால் இப்ப எங்கடை நாட்டிலை எத்தினை பேயள் திரியும் நினைச்சுப்பார்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : அதுவும் உண்மைதான்.. ஏதோ.. பிறகு நித்திரையே வரேலை..

ரஜீ : நீ கனவைக்கண்டு வீண் பிரமையயை வளக்கிறதை விட்டிட்டு எலக்சன் வேலையைப்பார். அப்பிடியும் பயமெண்டால் உந்த அம்பலத்தாடி வைரவர் கோயில் பூசாரியிட்டை ஒரு மூண்டுநேரப் பார்வை பாத்து நூலும் முடிஞ்சா எந்தப் பேய் பிசாசும் அண்டாது.. போசியாதையடா.. நான் வாறன்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 8**

**இடம் : கோயிலடி**

**பாத்திரங்கள் : கோபி, செந்தில், ரஜீவன்**

ரஜீ : எப்பிடி மச்சான்.. வைரவர்கோயில் நூல் கட்டினதுக்குப் பிறகும் கோபிகா நேரையோ கனவிலையோ வாறதோ.. அல்லாட்டில்

செந் : இப்ப ஒரு பிரச்சனையுமில்லை.. ஏதோ அண்டைக்கு.. உண்மையிலையடா நான் பயந்தே போயிட்டன். ஆனால் என்னாலை நம்பவும் முடியேலை.. நம்பாமல் இருக்கவும் முடியேலை..

ரஜீ : அது ஒண்டுமில்லை.. வீண் மனப்பிரமையடா.. உன்ரை மனச்சாட்சியே உன்னைக் கேள்வி கேட்டது. அவளவுதான்..

செந் : அதோ.. அல்லாட்டில் நூல்கட்டினதோ.. நிம்மதி..

ரஜீ : இன்னும் என்ன ஒருகிழமைதானே இருக்கு எலக்சனுக்கு.. எல்லாத்தையும் ஒருபக்கத்திலை விட்டிட்டு கூடக்கவனமெடு..

செந் : ஓமடா.. இரகசியக் கணிப்பீடுகள் எனக்குச் சந்தர்ப்பம் கூட எண்டு காட்டுற போதும்.. நம்பேலாதடா.. கடைசி நேரத்திலை கவிழ்த்து விட்டாலும் ஆச்சரியப்படுறதுக்கில்லை..

ரஜீ : இல்லை மச்சான்.. எலக்சன் எண்டுவரேக்கை ஒரு கொஞ்சப் பேர் இருக்கினம் கடைசி நேரத்திலை முடிவெடுக்கிறவை, அதோடை முதல்தரம் வோட்பண்ணுறவை. அவைதானடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியைத் தீர்மானிக்கிறவை.. அதை மறந்திடாதை.. திருப்பியும் அது இது எண்டு கத்திக் குழறி.. ஊரையே கூட்டி உன்ரை இமேஜைக் கெடுக்காமல் கவனமாயிரு..

செந் : ஏதோ வேணுமெண்டு செய்தமாதிரியெல்லோ நீ கதைக்கிறாய்.. உண்மையாய் மச்சான்.. எனக்குப் புரியுது ஆனால் நினைக்கப் பயமாயிருக்குதடா..

ரஜீ : இஞ்சை பார் செந்தில் இப்பதான் நீ சரியான கவனமாயிருக்கவேணும். கோபிகாவின்ரை விசயம் உனக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும். நீ சொல்லுறதைப்பாத்தா நீயே கத்திக் குழறிக் காட்டிக் குடுத்திடுவாய் போலை கிடக்குது..

செந் : ஏனடா அப்பிடிச் சொல்லுறாய்..

ரஜீ : வேறை எப்பிடிச் சொல்லச் சொல்லுறாய்.. நடந்தது நடந்திட்டுது.. அதையே நினைச்சுக் கொண்டிராமல் நடக்க வேண்டியதைப்பார்.. ஒண்டைமட்டும் மறந்திடாதை இந்த விசயம் உன்ரை வாயாலையோ அல்லாட்டில் வேறையாராலையுமோ தட்டித் தடுமாறி சனத்துக்குத் தெரியவந்துது, அதே போதும் இருக்கிற வோட்டையும் அள்ளிக்கொண்டு போறதுக்கு. அதை மறந்திடாதை. எனக்கெண்டால் நீ உழறிவிட்டிடுவியோ எண்டு தான் பயமாய்க்கிடக்குது.

செந் : என்னை நம்பு மச்சான்..

ரஜீ : இது பிரதேசசபைத் தேர்தலெண்டதாலை.. கொஞ்சம் தனிப்பட்ட வாழ்க்கையும் பிரதிபலிக்கும்.. அதை மறந்திடாதை..

செந் : ஓம்.. ஓம்.. கொஞ்சமில்லை.. அது தான் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.. தெரியும் மச்சான்.

ரஜீ : இருக்கிற சப்போட்டை இழக்காமல் அதேநேரத்திலை.. அந்த மதில்மேலை பூனை எண்ணுவினமே அப்பிடி இருக்கிறவையைக் கவருறது தான் ஒரே இறுதிநேர நோக்கமாயிருக்க வேணும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி ஓவரிலை கடைசிப்பந்திலை சிக்ஸர் அடிச்சு வெல்லுற மாதிரித்தான் இதுவும்..

செந் : சரி.. சரி.. உன்னட்டைத்தானே சொல்லுறன். உன்னோடை மட்டும் தானடா இதுகளைப்பற்றிக் கதைக்கேலும்.. கதைக்கிறன்..

ரஜீ : சரி.. எல்லாத்தையும் மறந்திட்டு புதன் கிழமை பாட்டிக்கு ஆயத்தமாயிரு.. நான் வாறன்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 9**

**இடம் : வாசிகசாலையடி.. வாக்கு எண்ணுமிடம்..**

**பாத்திரங்கள் : கோபி, செந்தில், ரஜீவன்**

(வெடிச்சத்தம்)

செந் : ம்.. (பெருமூச்சு கவலை) வெண்டவன் வெடிபோடுறான்.. என்ரை பலன்.. தோல்வி.. தோல்வி.. என்ன செய்யுறது.. இந்த வீரபுலவிலை தோல்வியே காணாத அப்பா.. என்னிலை நம்பிக்கை வைச்சு.. என்ரை தகுதியிலை நம்பிக்கை வைச்சு.. கட்சியிலை போராடி வாங்கித் தந்தது.. கடைசியிலை.. இப்பிடிப் போச்சு தேயடா..

ரஜீ : உண்மைதான் செந்தில்.. நான் உனக்குத் தான் வெற்றி எண்டதைப் பூரண நம்பிக்கையோடை நம்பியிருந்தன்.. ஆனால்.. ஆனால் கடைசியிலை இப்பிடியாகியிட்டுதே.. என்ன ஒரு சின்ன வித்தியாசம்.. சிலவேளை திரும்ப எண்ணச் சொன்னால் வெற்றி கிடைக்கலாம்.

செந் : இல்லையடா.. தோல்வி தோல்வி தான்

ரஜீ : அதுவும் சரிதான்.. திருப்பித்திருப்பி எத்தினை தரம் எண்ணினாங்கள்.. அதாலைதானே முடிவு சொல்லவே இவளவு பிந்தினது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந் : சிலவேளை அப்பா வேட்பாளராய் நிண்டிருந்தாரெண்டால் வெண்டிருப்பாரடா..

ரஜீ : என்னடா இப்பிடிச் சொல்லுறாய்.. அதுதானே நான் முன்னமே சொன்னமாதிரி பிரதேசசபை எலக்சனெண்டால் உப்பிடித்தான்.. கொஞ்ச வாக்குகள்.. நல்லாய் அறிஞ்ச முகங்கள்.. சாதி சமயங்கள்.. தனிப்பட்ட உறவுகள். அது இது பரிமாற்றங்கள். இப்பிடி எத்தினையோ..

செந் : ஓமடா.. இப்பவும் அதைத்தான் சொல்லுறன். சிலவேளை அப்பா வேட்பாளராய் நிண்டிருந்தாரெண்டால் அவர்தான் வெண்டிருப்பார்.. நான் வீணாய் தலைப்போட்டு அவருக்குக் கிடைக்க வேண்டியதையும் இல்லாமல் பண்ணி.. அவரையும் தலைகுனியவைச்சு.. அவருக்கு கட்சியிலை இருந்த பெருமையையும் கெடுத்திட்டனடா..

ரஜீ : ஏன் அப்பிடி நினைக்கிறாயடா.. அது நீ நிண்டாலென்ன.. அப்பா நிண்டாலென்ன ஏறத்தாழ ஒரே மாதிரித்தானேயடா ஊருக்கை செல்வாக்கு..

செந் : (அழுது) இல்லை ரஜீவன்.. நான் பெரிய வித்தியாசத்திலை தோத்திருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டன். இப்பிடி ஒரு தோல்வி.

ரஜீ : சும்மாய் வியாக்கியானம் செய்து அழுது கொண்டு..

செந் : வியாக்கியானமில்லையடா.. விளங்காத.. ஓம் மற்றவைக்கு விளங்காத உண்மையடா..

ரஜீ : என்ன செந்தில்.. முடிவு வந்து என்னும் பத்து நிமிசமாகேலை.. அதுக்கிடையிலை அப்பிடிப் பெரிய உண்மையை.. அதுதான் மற்றவைக்கு விளங்காத உண்மையைக் கண்டுபிடிச்சனி..

செந் : இதுக்கு பெரிய அறிவோ.. ஆராய்ச்சியோ தேவையில்லை..

ரஜீ : அப்ப.. சொல்லு.. எனக்கெங்கை உந்த ஆராய்ச்சியள் கணக்குகள் ஏறப்போகுது.. இந்த மரமண்டையுக்கை ஏறத்தக்கதாய் சொல்லு..

செந் : நான் தோற்றது எத்தினை வோட்டாலை சொல்லு பாப்பம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜீ : போயும் போயும் இரண்டு வோட்டாலை.. என்ன ஆரும் கள்ள வோட்டெண்டு சொல்லப் போறியே.. அதுதான் திருப்பித்திருப்பி ஆயிரம் தடவை எண்ணினாங்களே..

செந் : இல்லையடா.. யோசிச்சுப்பார் கோபிகா வீட்டிலை எத்தினை வோட்..

ரஜீ : (ஆச்சரியத்துடன்) இரண்டு.. ஓமடா.. இரண்டு..

செந் : இப்ப சொல்லு.. இந்தத் தோல்விக்கு ஆற்றை வோட்டுகள் காரணமெண்டு சொல்லு..

ரஜீ : (தழுதழுத்து) ஓமடா.. கோபிகா.. தகப்பன்.. ரெண்டு..

செந் : ஓம்.. குடுத்த வாக்குறுதி நிறைவேற்றவில்லை எண்டு தேர்தலுக்கு முன்னரே பறிபோன வாக்குகள். புரியுது தானே.. இதுவும் வாக்குறுதியின் விளையாட்டடா..

......... **நிறைவு** .........

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் 02.09.2019 அன்று இரவு 9.30 இற்கு முதன் முதலில் ஒலிபரப்பாகியது)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பங்குபற்றிய கலைஞர்கள் ஒலிப்பதிவின் போது



லோசன், லூக்கஸ், ரஜினி, அம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. வடிகால்கள்




இந்திரா - மயூரன் - மனோகரன் - குமுதினி - ராதை - சபேசன்



ஜெயஜோதி-அஜிவன் -அம்பலம் - ரஜினி - புஸ்பராணி - கவிசாந்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. வடிகால்கள்

**நாடக மாந்தர்கள் :**

- **மனோகரன் – தகப்பன்**
- **இந்திரா – தாய்**
- **மயூரன் – மகன்**
- **குமுதினி – ஆசிரியை**
- **சபேசன் – மயூரனின் வகுப்பு நண்பன்**
- **ராதை – சபேசனின் தாய்**

**காட்சி : 1**

**இடம் : மனோகரன் வீடு**

**பாத்திரங்கள் : மனோகரன், இந்திரா**

மனோ : இஞ்சேரும் இந்திரா உண்மையிலேயே தம்பி மயூரன் ஓ எல்லிலை 9ஏ எடுத்தவ னெண்டால் அது உம்மடை முயற்சியாலை தான். அதுக்கான பெருமை தனிய உமக்குத்தான் கிடைக்க வேணும்

இந் : ஏன் என்னை மட்டும் பிரிச்சு சொல்லுறியள். உங்களுக்கும் தான். (சிரித்து) என்ன இருந்தாலும் எக்கவுண்டன்ரை பிள்ளையெல்லே.. புலிக்குப் பிறந்தது பூனையாகுமே..

மனோ : எக்கவுண்டன்ரை பிள்ளை எண்டதை நான் இல்லையெண்டு சொல்லேலை.. ஆனால் உம்மடை முயற்சியாலை தானப்பா அவன் படிச்சவன்.. மனம் வைச்சுப் படிச்சவன். (சிரிச்சு) அவன் உம்மைக் கொண்டே வாசிச்சு உம்மட்டையே கேள்வி கேக்கேக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நினைக்கிறனான். படிக்கிறது நீரோ அல்லது அவனோ எண்டு. ஆனால் ஆடிற மாட்டை ஆடிக் கறக்கவேணும் பாடிற மாட்டைப் பாடிக் கறக்கவேணும் எண்டது இப்பதான் புரியுது..

இந் : அவன்ரை போக்குக்கு விட்டுப்பிடிச்சன். ரீச்சேசும் நல்லாய் வந்து வாய்ச்சினம்.

மனோ : தெரியாமலே தாரமும் குருவும் தலை விதிப்படி எண்டு சொல்லுறது. மயூரன் குரு விசயத்திலை குடுத்துவைச்சவன்

இந் : அது மட்டுமே நீங்களும் ரீச்சேசோடை நல்ல மாதிரிப் பழகிறதாலை அவையும் கொஞ்சம் எக்ஸ்றா கவனம். ரெண்டு பக்கத்திலையும் சப்போட் கிடைச்சுது. நீங்களும் ஒரு குறையும் விடாமல் பாத்தியள்.

மனோ : அப்பா விடுற குறையை மாமா பாத்தார். மாமா டொக்டர் எண்டதாலை உளவியல் பக்கத்தாலும் சப்போட் குடுத்தார்.

இந் : அதைத்தான் நானும் சொல்லுறன். இந்த அச்சீவ்மென்ற் உண்மையிலை எனக்கு மட்டுமில்லை.. எல்லாரின்ரை கூட்டு முயற்சிக்கு கிடைச்ச பலன் எண்டு சொல்லுங்கோ

மனோ : என்ன அம்பலத்தாடி வைரவரை விட்டிட்டீர்

இந் : அவர் கண்ணுக்கு முன்னாலை நாங்கள் காணுற கடவுள் எல்லோ.. அவர் இதிலை மட்டுமில்லை.. எங்கடை குடும்பத்தின்ரை ஒவ்வொரு அசைவிலையும் இருக்கிறார் எண்டது நீங்கள் சொல்லியே தெரியவேணும்.

மனோ : (பெருமூச்சு).. உண்மைதான். அதை இல்லை எண்ணேலை.

இந் : அவர் எனக்கு என்னத்திலை குறைவைச்சார்.. கண்ணிறைஞ்ச கணவன். பிச்சுப் புடுங்கலில்லாத குடும்பம். பேர்சொல்ல லவகுசன் மாதிரி ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள். இதைவிட வேறை என்ன வேணும் சொல்லுங்கோ பாப்பம்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ : இரண்டு ஆம்பிளைப் பிள்ளையள் எண்டு சொன்னியே.. அங்கைதானப்பா நீ குடுத்து வைச்சனி

இந் : ஏன் உங்களுக்கில்லையாக்கும்.

மனோ : ஓம் இந்திரா.. உண்மையைத் தான் சொல்லுறன். நான் அநேகமான நேரத்திலை அப்பிடி உணருறன்.

இந் : ஏன் அப்பிடிச் சொல்லுறியள்

மனோ : ஆம்பிளைப் பிள்ளையளுக்கு அப்பன் சித்தப்பன் பொம்பிளைப் பிள்ளையளுக்கு அப்பா ஆருயிர்த்தோழி எண்டு எங்கையோ வாசிச்சனான் அதை இப்ப அனுபவத்திலை கண்டு பொறாமைப்படுறன் (பெருமூச்சு) இல்லை இந்திரா கவலைப்படுறன்

இந் : ஆ.. இது தான் சங்கதியோ.. என்ன பொம்பிளைப் பிள்ளை இல்லையெண்டோ.. ஏன் இப்ப அப்பிடிச் சொல்லுறியள்.. என்ன நடந்தது.

மனோ : இல்லை இந்திரா.. உள்ளதைத்தான் சொல்லுறன். அவங்கள் உம்மட்டை மனம் விட்டு எல்லாக் கதையளும் ஒரு நண்பனிட்டைச் சொல்லிற மாதிரிச் சொல்லி கொட்டமடிச்சு ரசிச்சு சிரிச்சு கொண்டாடேக்கை ஒரு பக்கம் சந்தோசப்படுற அதேநேரம் நான் அதிலை பங்குபற்ற முடியேலையே எண்ணேக்கை...

இந் : அப்பிடியில்லை.. அது வந்து.. நீங்கள் வேலைக்குப் போடுவியள்.. நான் தான் எப்பவும் வீட்டிலை நிக்கிறனான். அதாலை தான்..

மனோ : ஓம் அது சரி.. பிள்ளையள் தாயோ தகப்பனோ ஒரு ஆளுக்கு எண்டாலும் ஒளிவு மறைவில்லாமல் இருக்கிறது பெற்றாருக்கும் நல்லது.. பிள்ளையளுக்கும் நல்லது.. அப்பிடிப் பாக்கேக்கை உம்மோடை அவங்கள் எல்லாத்தையும் ஒளிவு மறைவில்லாமல் சொல்லுறதை பிழை எண்டு சொல்ல வரேலை.. ஆனால் என்னைப் பிறத்தியாரா நீங்கள் பாக்கேக்கை தான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் : (மறித்து) ஏன் உங்களைப் பிறத்தியாரா பாக்கிறாங்கள் எண்டு நீங்களே தப்புக் கணக்கு போடுறியள்.

மனோ : என்ன.. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையாக்கிடக்குதோ..

இந் : அவங்களுக்கு உங்களிலை ஒரு தனி மரியாதை.. அதாலை தான் அப்பிடி..

மனோ : ம்.. அப்பிடி எண்டு நீர் சொல்லுறீர். சரி சரி.. ஏதோ சொல்லிச் சமாளியப்பா.. (பெருமூச்சு விட்டு) உண்மையைச் சொன்னால் ஏனோ நான் தனிமைப் படுத்தப்படுறன் எண்டு மட்டும் உணருறன்..

இந் : சிவசத்தியமாய் நாங்கள் வேணுமெண்டு செய்யிறேலை.. ஏனோ நீங்கள் தான் அப்பிடிச் சொல்லுறியள்.. நினைக்கிறியள்..

மனோ : ஏனெண்டால் நானும் சாதாரண மனிசன் தானே.. ஏதோ நான் ஊமையாய் அழுகிறன் அவளவு தான்.. ஒரு மனிசனாய் மனசுக்கு ஒத்தடத்தைத் தான் எதிர்பார்க்கிறன்.. வேறை ஒண்டுமில்லை..

**....... காட்சி மாற்றம் .......**

**காட்சி : 2**

**இடம் : மனோகரன் வீடு**

**பாத்திரங்கள் : மயூரன், மனோகரன், இந்திரா**

மயூ : அம்மா வாறகிழமை ஸ்கூலிலை சொசைற்றியளுக்கு புது போட் செலக்ற் பண்ணுகினம். எனக்கு நல்லாய் ஆர்ட் தெரியுமெண்டதாலை ஆறு மன்றத்திலையும் எடிற்றோறியல் போட்டுக்கு போடுவினம் போலை கிடக்குது.

இந் : என்ன ஆறு மன்றத்திலையுமோ.. ஏன் உன்னை விட்டால் ஸ்கூலிலை வேறை ஆருமில்லையோ.. அல்லாட்டில் உனக்கு எடிற்றோறியலை விட வேறை தெரியாதோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : இல்லையம்மா .. ஒண்டுக்கு செயர்மன்சிப் சரிவரும் போலை கிடக்குது.. ஏதோ பாப்பம்..

இந் : உதுகள் படிப்பைக் குழப்பிப் போடும் மயூரன்.. பிறகு யோசிச்சு கவலைப்பட வேண்டி வரும்..

மயூ : அப்பிடி நடவாது.. இவளவு காலமும் சொசைற்றி செய்தது ஆர்.. ரீச்சேஸே.. அண்ணாமார் தானே.. அவை என்ன பண்ணேலையே.. அம்மா இதுகளிலைதானே லீடர்சிப் குவாலிற்றியை வளர்க்கலாம், எக்ஸ்போஸ் பண்ணலாம் எண்டு அண்டைக்கு பேரன்ற்ஸ் மீற்றிங்கிலை சொன்னதைக் கேக்கேலையே..

இந் : அது சரி.. ஆனால் மன்றங்களிலை இன்வோல்வ் ஆகினால் படிப்பு பாழாகிப்போகிடும் எண்டு உங்கடை கிளாஸ் மாஸ்ரர் அப்பாவுக்கு சொன்னவர் எண்டு நெடுகச் சொல்லுறவர். அதை மறந்திடாதை.

மயூ : அது வந்தம்மா

இந் : அது வந்தில்லை உண்மையும் தான். உங்கை 9ஏ எடுத்து மன்றங்கள் செய்து கவிண்டு கொட்டிட்ட எத்தினையோ பேரைக் கண்ணாலை கண்டனாங்கள். அதுகளை நினைவிலை வைச்சிரு மயூரன்.. அதை மறந்திடாதை..

மயூ : எல்லாரும் அப்பிடியில்லை.. போனமுறை சிங்கள மீடியத்திலை ஐலண்ட் பெஸ்ற்.. எத்தினை சொசைற்றியிலை இருந்த அண்ணா தெரியுமே..

இந் : அது சரி தம்பி.. எல்லாரும் அப்பிடி வரேலுமே. மன்றத்தையும் செய்து கொண்டு படிப்பையும் கொண்டு போறதெண்டால் லேசானதில்லை.. பிறகு அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல் எல்லாம் சிதறிப்போகிடும். எதிலையும் போறதுக்கு முதல் யோசிக்க வேணும். பிறகு தேவையில்லாத பிரச்சனைவரும். வீண்பேர் கேக்க வேண்டிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : அம்மா அதெல்லாம் மனேஜ் பண்ணலாம்.. நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதை யுங்கோ..

இந் : அதுசரி.. எதுக்கும் அப்பா ஓமெண்டு சொல்ல வேணுமே.. இப்பவே தனக்கொண்டும் சொல்லுறேலை எண்டு முணு முணுப்பு வேறை..

மயூ : அந்தாளைப் பற்றி தெரியாதே.. ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லிக் கொண்டிருப்பார். எதுக்கெண்டாலும் முதல் தரத்திலையே ஓமெண்டு சொல்லுற பழக்கம் அவருக்கிருக்கே சொல்லுங்கோ பாப்பம்.

இந் : தம்பி.. அவர் எல்லாம் உங்கடை நன்மைக்குத் தானே செய்யிறவர். அவர் சொல்லுற ஒவ்வொண்டிலையும் ஏதோ ஒரு காரணம் இருக்கும்..

மயூ : என்ன.. தான் பட்ட கஷ்டத்தை சொல்லிப் புலம்பி அதைச் செய்யாதை இதைச் செய்யாதை எண்டு பழங்கதை சொல்லும்.

இந்தி : அவர்பட்ட கஸ்டம், படுகிற கஸ்டம் உனக்குத் தெரியாதடா.. அவர் உங்களிலை வைச்சிருக்கிற பாசம்.. உங்களுக்குத் தெரியாதடா.. ஒரு பாசக்காரத் தகப்பனாய் மனதுக்கை பாசத்தை அடக்கிவைச்சு கண்டிப்பான தகப்பனாய் கண்டிப்பை மட்டும் வெளியிலை காட்டிறார். அதுதான் அப்பிடி.. அவற்றை உண்மையான மனது உங்களுக்குப் புரியேலைத் தம்பி..

மயூ : ஏதோ அம்மா.. நான் என்ன தேடிப்போறனே.. இல்லையே.. செயர்மன்சிப் கேட்டும் தனக்குக் குடுக்கேலை எண்டு எத்தினை பேர் அடிபடுகிறாங்கள் தெரியுமே.. செயர்மன்சிப் எடுத்து எல்லாம் வடிவாய் பிளான் பண்ணிச் செய்து எங்கட சொசைற்றிக்கு ஏ கிறேட் வாங்கவேணும்.. ஓ

இந் : நீ மன்றத்துக்கு ஏ கிறேட் வாங்கிறதிலை இரு.. அவர் ஏ எல்லிலை எத்தினை ஏ எடுக்கிறாய் எண்டு எண்ணட்டும். நான் நடுவிலை அரைபடுறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : அவரும் தன்ரை காலத்திலை இருந்ததெண்டு விலாசம் காட்டுவர்.. ஏன் இப்பவும் எத்தினையிலை இருந்து இராப் பகலாய் முறியிறார்.. ம். அவருக்கொரு ஞாயம். மற்றவைக்கொரு ஞாயம்.

இந் : அந்தக் காலம் மாதிரி இல்லைத் தம்பி இந்தக் காலம்.. படிச்சு வாசிற்றி என்ரர் பண்ணினாத்தானடா எதிர்காலம்.. அப்பா எக்கவுண்டனாயிருக்கிறார் உதுகளிலை ஈடுபடுறார். நீயும் முதல்லை கவனமாய் படி.. என்ரபண்ணு.. பிறகு ஆசைதீர எந்த மன்றத்தை எண்டாலும் செய்.. நான் மறிக்கேலை.. அவரும் மறியார்..

மயூ : அந்தாளைத் தான் நாய்வால் மாதிரி நிமித்தேலாதெண்டால்.. நீங்களுமே அம்மா..

இந் : தம்பி.. அவரை அப்பிடிச் சொல்லாதையடா தம்பி

மயூ : பின்னை.. முதல்லை ஸ்கொலசிப் எண்டு நித்திரை கூடக் கொள்ள விடேலை.. பிறகு.. ஓ எல் வடிவாய்ப் பாஸ்பண்ணு எல்லாம் செய்யலாமெண்டியள்.. இப்ப ஏ எல்லை வடிவாய்ச் செய்து என்ர பண்ணு பிறகெல்லாம் செய்யலாமெண்ணுறியள்.. எல்லாம் முடிய எவன் கேக்கிறான் எங்களை வரச்சொல்லி.. அந்தந்த நேரத்திலை.. சந்தர்ப்பம் கிடைக்கேக்கை தானம்மா உதுகளைச் செய்யவேணும். அந்தாள் சொல்லுற மாதிரி காத்துள்ள நேரம்தானம்மா தூத்த வேணும்.

இந் : ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் ஆருக்கோ கோவமெண்டது போலை ரெண்டு பேரும் சொல்லுறதும் சரியாய்த் தான் கிடக்கு.. ஏன் மயூரன்.. ஒரு மன்றத்திலை மட்டும் இருந்தால் காணாதேடா.. ஏதோ அப்பாட்டைச் சொல்லிச் சமாளிக்கிறன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : உங்களுக்கு இதுகள் புரியாதம்மா.. அவை கேக்கேக்கை மறுக்காமல் மற்றதுகளிலையும் இருந்தால் தான் எங்கடை சொஸைற்றிக்கு எல்லாரும் புல் சப்போட் பண்ணுவாங்கள்.. அப்ப தான் ஒவ்வொண்டும் நல்லாய் பிளான் பண்ணி வடிவாய்ச் செய்யலாம்.

(கார்வரும் ஓசை.. நிறுத்தும் ஓசை)

இந் : உந்தா அப்பா தான் வந்திட்டார் போலை கிடக்குது.. நீயே அவரிட்டை கேள்.. எனக்குத் தெரியாது.. தகப்பனும் மகனும் பட்டபாடு..

மயூ : எனக்கெண்டால் ஏலாது.. அவரைக் கேட்டுத்தான் செய்ய வேணுமெண்டால் நீங்களே கேளுங்கோ.. நான் போறன்.. (போய்க் கொண்டு) எத்தினை தகப்பன்மார் தன்ரை பிள்ளைக்குச் செயமன்ஸிப் கிடைக்க வேணுமெண்டு எவளவைச் செய்யுதுகள். இது தேடிவாறதையும் தட்டிக் கொண்டு.. எல்லாத்துக்கும் அவற்றை பெமிசன் வேறை..

இந் : உனக்கென்ன நீ சொல்லிப் போட்டுப் போறாய்.. இஞ்சை நான் கிடந்து படுறபாடு.. உரலுக்கு ஒரு பக்கம் தான் இடி.. மத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் எண்ணுறது போலை நான் உங்கள் ரெண்டு பேருக்கும் நடுவிலை கிடந்து சாகிறன்.

மனோ : (வந்து கொண்டு) என்ன இந்திரா.. ஆர் செத்தது.. எங்கை ரெண்டு பேருக்கும் நடுவிலை கிடந்து செத்தது..

இந் : (தடுமாறி) ஆ.. வந்திட்டியளே.. வாங்கோ.. அது ஒருத்தரும் இல்லையப்பா.. உவன் தம்பி மயூரன் ஏதோ மன்றமாம். செயர்மனாம்.. அதுதான்..

மனோ : நான் சொன்னாப் போலை.. தாயும் மகனும் முடிவெடுத்தால் என்ன மாத்தவே போறியள். ஏதோ தகப்பனெண்ட முறையிலை சொல்ல வேண்டிய கடமைக்குச் சொல்லுறன்.. உந்த மன்றம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயர்மன், அதுஇது எண்டு வெளிக்கிட்டு படிப்பைக்குழப்ப வேண்டாம்.. இந்தா பார்! படிச்சு நல்லாயிருந்தால் உதுகளெல்லாம் தானாய் வரும். இப்ப படிப்பைப் பாக்கச் சொல்லு பிறகு மற்றதுகளைப் பாக்கலாம்.

இந் : இப்பவே பழகினால் தான் நல்லதாம்.. மாணவர் மன்றங்களுக்கு மாணவர் தானே இருக்க வேணும்.. அதிலையும் இருக்கிறது கொஞ்சப் பெடியள்.. அதுகளும் எல்லாரும் மாட்டமெண்டால்.. பிறகு உதுகளை ஆர் கொண்டு நடத்திறது.. நீங்களே சொல்லுங்கோ பாப்பம்..

மனோ : சரி..சரி.. நீங்கள் படிப்பைக் குழப்பி மன்றம் வளர்க்க வேணுமெண்டால் தாராளமாய் வளவுங்கோ.. அனுபவத்தைப் பெறுங்கோ.. வேண்டாமெண்டேலை கடைசியிலை தெருக் கூட்டுறவங்களின்ரை மன்றத்துக்குத் தான் செயமனாக இருக்க வேண்டி வரும்.. அதைமட்டும் நினைவிலை வைச்சிருங்கோ.. ஓ

இந் : ஏன் எல்லாத்தையும் எடுத்தெறிஞ்சு பேசிறியள்.. அவன்ரை பக்கத்தையும் பாருங்கோ.. எல்லாப் பிள்ளையளும் செய்யேக்கை அவனை மட்டும் மறிச்சால்.. அவன்ரை மனத்தையும் பாருங்கோ.. நீங்கள் வேண்டாமெண்டு மறிக்க அவன் ஏதேன் ஏறுக்கு மாறாய் முடிவெடுத்தால்..

மனோ : உப்பிடியே சொல்லிச் சொல்லி என்னை அடக்கிப்போடும்.. ம் அவனும் ஆசைப்படுறான் எண்டால் ஏதோ ஒண்டிலை இருந்து மற்றவை சொல்லுற பறையுறதை ஒழுங்காக் கேட்டு சரியாய்ச் செய்யட்டும். ஆனால் படிப்பையோ கிளாசுகளையோ கட் பண்ணிறதில்லை. அதை நினைவிலை வைச்சிருக்கட்டும். அங்கை பேரன்ற்ஸ்மீற்றிங்கிலை பிள்ளை கிளாசுக்கு வரேலை அது இது எண்டு கிளாஸ்மாஸ்ரர் சொல்லட்டும்.. அப்ப தெரியும் மனோகரன் ஆர் எண்டு.. ஓ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் : சொல்லுறதைச் சந்தோசமாய் சம்மதம் எண்டு சொல்லுங்கோவன். ஏன் சும்மாய் எகிறிக் குதிக்கிறியள்.. உதாலைதானே அவங்களும் உங்களுக்கு என்னண்டாலும் சொல்லப் பயப்பிடுறது. பிறகு நீங்கள் எங்களிலை குற்றம் கண்டு பிடிக்கிறது.

....... காட்சி மாற்றம் .......

**காட்சி : 3**

**இடம் : பாடசாலை**

**பாத்திரங்கள் : மயூரன், சபேசன்**

மயூ : எப்பிடி மச்சான் சபேசன். கானலயம் எந்தமட்டிலை இருக்கு. அண்ணாமார் எப்பிடி.. சப்போட் தாறவங்கள் தானே.. எங்கட புறோக்கிறாமை எழுப்பிறது கானலயம் தான். அதை மறந்திடாதை..

சபே : அண்ணாமார் புல் சப்போட் தான்.. ஆனால் குமுதினி ரீச்சருக்கெண்டால் கொஞ்சமும் விருப்பமில்லை.. அவ அத வெட்டு இதை வெட்டு எண்டு ஒரே அட்வைஸ். ஆனால் அவ சொல்லுற மாதிரிச் செய்தால் கடைசியிலை கானலயமில்லை கனலயமும் போட ஏலாது மயூரன். விழா சப்பெண்டு போயிடும்..

மயூ : அங்கை குமுதினி ரீச்சர் கானலயத்தை வெட்டெண்டு சொல்லுறா.. இன்னொரு பக்கம் வீட்டிலை அப்பா எல்லாத்தையுமே வெட்டெண்டு ஒரே அறுவை.. இதுகளெல்லாம் எங்களுக்கு எண்டு ஒரு இமேஜ், என்ரற்ரெயின்றமெற் ரேஸ்ற் எங்களுக்கு உள்ளையும் ஒரு ரலன்ற்.. வித்தியாசமான திறமை.. இருக்கு தெண்டதை ஏற்குதுகளில்லை. பிறீயாச் சிந்திக்க விடுகுதுகளில்லை. செயற்பட விடுகுதுகளில்லை.. எதுக்கெடுத்தாலும் அட்வைஸ் எண்ட பேரிலை அறுவை அறுவை அறுவை.. ஏன்தான் இப்பிடி அறுவையோ தெரியாது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபே : ஓம் மச்சான்.. உதைத்தான் ஜெனறேசன் கப் எண்ணுறது. உன்ரை அப்பா எண்டால் பறுவாயில்லை அறுவை மட்டும் தான்.. எங்கடை வீட்டிலை வில்லன் பாத்திரம் தான். ஏதோ அம்மாவின்ரை கண்ணீராலை நான் தப்பிச்சுக் கொள்ளுறன்.

மயூ : உதுகளை விடு.. வீட்டுக்கு வீடு வாசல்படி தான்.. இந்தமுறை எல்லாரும் மூக்கிலை விரல் வைக்கிற மாதிரி என்ன கஷ்டம் வந்தாலும் புறோகிறாம் ஓர்கனைஸ் பண்ணவேணும்.. செய்து காட்ட வேணும். எங்கடை ரலன்றைக் காட்ட வேணும்.. நாங்கள் ஆர் எண்டதை உந்த அறுவை வட்டம் மட்டுமில்லை சீனியர் பச் அண்ணாமாரும் புரியவேணும். அதை மறந்திடாதை

சபே : நானும் அதைத்தான் சொல்லுறன் மயூ.. என்ன தடை வந்தாலும் கணக்கெடுக்கிறதில்லை.. ஒன்லி ராக்கெற் இஸ் புறோக்கிறாம். ஓகே.. டோன்ற் வொறிடா.. வாறண்டா..

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி : 4**

**இடம் : வீதி**

**பாத்திரங்கள் : இந்திரா, ராதை**

ராதை : என்ன இந்திரா. கும்பிட்டிட்டு வாறியள் போலை..

இந் : இல்லை.. இப்பதான் வாறன்.. தாய்க்கு ஏதோ சுகமில்லை யெண்டு இவர் கண்டிக்குப் போட்டார்.. மயூரனும் இண்டைக்கு ஸ்கூலுக்குப் போகேலை.. ஏதோ புத்தகம் அடிக்கிற வேலை பிறஸ்சுக்குப் போகவேணும் எண்டான்.. அதுதான் பிந்திப் போச்சுது.. நீங்கள்..

ராதை : அதை ஏன் கேக்கிறியள்

இந் : என்ன ராதை முகமெல்லாம் வாடிக்கிடக்குது.. என்ன ஏதேனும் சுகமில்லையே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை : அப்பிடியொண்டும் இல்லை இந்திரா.. உண்மையிலை உங்களுக்குச் சொன்னால் என்ன.. எண்டைக்கு உந்த மன்றத்தை பாரமெடுத்தாங்களோ.. அண்டைக்கே வீட்டிலை நிம்மதி போச்சுது.. சபேசன்ரை படிப்பும் போச்சுது..

இந் : சபேசன் கெட்டிக்காரன் தானே.. விட்டாலும் பிறகு பிக்கப் பண்ணியிடும்..

ராதை : சரிக்குச் சரி வாயுமெல்லே காட்டப் பழகியிட்டுதுகள்.. ஒருத்தற்றை சொல்லுக் கேக்கிறதில்லை..

இந் : உண்மைதான் ராதை.. வீட்டுக்கு வீடு வாசல் படிதான்.. எங்கடை வீட்டிலை சொல்லவே தேவையில்லை. மாக்ஸைப் பாத்திட்டு தகப்பன் என்னிலை பாய்ச்சல்.. உப்பிடி மாக்ஸ் எடுத்து தன்ரை மரியாதையைப் போக்கிறதிலும் விட மற்றவை செய்யிற மாதிரி இப்பவே மறிச்சு எங்கையேன் பொறின் யுனிவேசிற்றிக்கு அனுப்புவம் எண்டு ஒரே புறுபுறுப்பு.. இந்த கண்டறியாத மன்றத்தாலை தகப்பனும் மகனும் கதைக்கிறதேயில்லை.. வாய் திறந்தா பாம்பும் கீரியும் தான்..

ராதை : எங்கடை வீட்டிலை அதிலுயும் மேலை.. ராத்திரியும் வீட்டை சபேசன் வரேலை எண்டு என்னோடை கொழுவல். (அழுது) உண்மையிலை கலியாணம் செய்து 20 வருசமாகுது.. ஒரு நாள் என்னை நீ நான் எண்டு கதைக்காத மனிசன்.. இப்ப இவன்ரை.. இந்த மன்றத்தாலை என்னை நாயே பேயே எண்டெல்லே பேசுது.. சீராய்ச் சாப்பாடும் இல்லை.. அவன்ரை படிப்பை விடுங்கோ.. இப்பிடி பேசுவார்.. எங்களுக்கை ஒரு இடைவெளியை உண்டாக்கும் எண்டு நான் உந்தச் சிவ சத்தியமாய் கனவிலையும் நினைக்கேலை..

இந் : (பெருமூச்சு) ம் என்னத்தைச் சொல்ல.. ஆற்றை சோகத்தை ஆருக்கு சொல்லி அழ.. ஏதோ தகப்பனையும் பிள்ளையையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிக்க வேணுமெண்டு ஒரு சிலதை மறைக்க.. அந்தாள் அதை எங்கையோ தூண்டு துரவு பிடிச்சு அறிஞ்சு போட்டு ரெண்டு பேரும் ஒழிச்சுப் போடுறம் எண்டு வாய்க்கு வந்த படியெல்லே பேசுறார்.

ராதை : ஏதோ எல்லாத்துக்குமாய்த் தான் சிவனிட்டை வந்து அழுதிட்டுப் போறது. வேறை என்னத்தை நாங்கள் செய்யுறது சொல்லுங்கோ பாப்பம்.. ஆரிட்டை போய்ச் சொல்லுறது..

இந் : ஆனால் ராதை.. ஒண்டைமட்டும் நாங்கள் மறக்கக்கூடாது.. தகப்பன்மார் புடுங்குப்பட்டாலும் நாங்கள் கண்ணிலை எண்ணை விட்டுக் கவனிக்காட்டில் பிள்ளையள் வேறை வழிக்குப் போயிடும். உங்கை யாழ்ப்பாணத்திலை நடக்கிறதைப் பற்றி ஒவ்வொரு நாளும் பேப்பரிலையும் நியூசிலையும் பாக்கிறியள் தானே..

ராதை : அதெண்டால் உண்மைதான் இந்திரா.. பிள்ளையளின்ரை விருப்பங்களை திறமையளை நாங்கள் கட்டுப்படுத்தக் கூடாது. கொஞ்சம் விட்டுப்பிடிக்கத்தான் வேணும்.

இந் : ஓம் ராதை.. இல்லாட்டில் அதுகள் எப்பிடியும் ஏதோ ஒரு விதத்திலை வடிகால்களைத் தேடிப்போகும். அந்த வடிகால்கள் சாக்கடையாய் இருந்தால் அவளவுதான்.

ராதை : அதுதான் கடைசியிலை வன்முறையிலை முடியுறது..

இந் : ஓம்.. சரியாய்ச் சொன்னீர்..

ராதை : முக்கியமாய் தாய்மார் தான் பிள்ளையளை இதிலை இருந்து பாதுகாக்க வேணும்.

இந் : ஓம் ராதை.. மாட்டை ஓடுதே எண்டு கட்டி வைச்சா இன்னும் மூர்க்கம் தான் கூடும். அதை நாணயத்தைக் குத்தி அதின்ரை பாட்டிலை விட்டுக் கட்டுப்படுத்தினமெண்டால் நாங்களும் பயனைப் பெறலாம். அதுகளும் சந்தோசத்தை அடையும். மூர்க்கத்தனம் குறையும். தாங்கள் நினைச்ச மாதிரி அனுபவிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையில்லாத வழிக்குப் போகாமல் எங்கடை சொல்லைக் கேட்டு கட்டுப்பாட்டுக்கை நிக்கும். அதுமாதிரித்தான் இதுவும்..

ராதை : ஓமப்பா.. அதுகளின்ரை எண்ணத்துக்கு விட்டு நாங்கள் கட்டுப் படுத்தேக்கை அவங்கள் நாங்கள் கட்டுப்படுத்திறமெண்டதை உணராங்கள். எல்லாத்தையும் எங்களிட்டைச் சொல்லி சந்தோசப்படுகுதுகள்.

இந் : அப்பதான் நாங்களும் சொல்லுறதைக் கேட்குங்கள். அவங்கடை திறமைக்கும் ஒரு வடிகாலாய் அமையும். பிரயோசனமான முறையிலை வெளிப்படுத்தி அதனூடாக உண்மையான இலக்கை அடைய உந்துசக்தியாய் அமையும்.

ராதை : ஆனால் வேண்டாம் எண்டால் முரண்டுதான்.. நீங்கள் சொன்ன மாதிரி வின் வின் சொலுசன் எண்ணுவினமே.. அது தான் இருவருக்கும் வெற்றியே எண்டு..

இந் : சரியாய்ச் சொன்னீர்..

ராதை : அவங்களுக்கு குமுதினி ரீச்சரும் வந்து வாய்ச்சா.. நல்ல மனிசி.. எப்பிடி அவங்களிட்டை வேலை வாங்கிறது.. எப்பிடி அவங்களின்ரை திறமையளை வெளிக்கொண்டு வாறது.. எப்பிடி அவங்களை கட்டுப்படுத்துறது.. எண்டு விலாவாரியாய்த் தெரிஞ்ச ரீச்சர்..

இந் : அதெண்டால் உண்மைதான்.. தாய்மார் எப்பிடி பிள்ளையளுக்கு தகப்பனையும் அனுசரித்து பிள்ளையளுக்கு ஒரு வடிகால்களாய் இருக்கவேணுமெண்டது அவசியமோ, அதே மாதிரி மறு பக்கத்தில ரீச்சேசும் மாணவர்கள் எண்ட ரீதியிலை மட்டுமில்லை எதிர்காலச் சமூகம் எண்ட ரீதியிலை பிள்ளையளின்ரை வழியிலை போய் அதுகளை சாக்கடையிலை விழாமல் காப்பாற்றுற ஒரு வடிகால்கள் எண்டுறதுக்கு குமுதினி ரீச்சர் தானப்பா நல்ல உதாரணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை : அதெண்டா உண்மைதான் ராதை.. நாங்கள் ரெண்டு மூண்டோடையே இந்தப்பாடு.. அவ 35, 40 ஐக் கட்டி அவிழ்க்கிற தெண்டால்..? (கோவில் மணி அடித்தல்)

இந் : கதைச்சுக் கொண்டு நிண்டதிலை நேரம் போட்டுது.. அங்கை பூசையாகப் போகுது..

ராதை : ஓம் ஓம்.. ரீச்சர் மாதிரி ஆண்டவன் வழிபாடும் நல்ல வடிகால்கள் தானப்பா.. அதுகளைத் தவறவிடக் கூடாது. அவங்கள் தான் ஈடுபாடு குறைவெண்டாலும் அவங்களுக்காக நாங்கள் தன்னும் ஏலக்கூடிய மட்டிலை ஈடுபடவேணும்.. அப்பதான் எல்லாம் பூரணத்துவமாய் அமையும்

இந் : அதை இல்லையெண்ணேலுமே.. வாரும்.. உதிலை காலைக் கழுவி விட்டுப்போவம்.

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி : 5**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : இந்திரா, மயூரன், சபேசன்**

இந் : ஏன் மயூரன். இப்ப எத்தினை நாள் நித்திரை இல்லாமல் முழிச்சிருக்கிறியள் சொல்லுங்கோ பாப்பம். ஏதேன் வருத்தம் கிருத்தம் வந்தா பிறகு படிப்பும் போச்சு.. மன்றமும் போச்சு.. அப்பான்ரை பேச்சாலை நான் இஞ்சை இருந்த பாடில்லை.. அதை மறந்திடாதை.. ஏதேன் உதவி தேவையெண்டால் ஆரையேன் கேட்டுச் செய்யுங்கோ.. தனிய இருந்து முறியாதையுங்கோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : ஆரையேன்கேட்டுச் செய்யிறதிலையும் பாக்க சொஸைற்றியே வேண்டாம் எண்டிட்டிருக்கலாம்.

இந் : ஏதோ நீங்கள் படுற கஷ்டத்தைப் பாக்க எனக்குத் தான் மனம் கேக்குதில்லை.. சொன்னன்.

சபே : இல்லை அன்ரி.. அதிலை பிரச்சனை ஒண்டும் இல்லை.. நாங்கள் செய்வம்.. எங்களாலை தனிய மனேஜ் பண்ண முடியும்.. யூனியேசும் நல்ல சப்போட்.. ரீச்சரும் நல்ல இன்வோல்வ்மென்ற் ஆய் இருக்கிறா..

மயூ : அம்மா இது ஸ்ருடன்ற்ஸ் சொசையிற்றி.. நொட் எ பேறன்ற் சொசையிற்றி.. பிளீஸ் அண்டர்ஸ்ரான்ட் அம்மா.. நாங்களே பிளான் பண்ணி நாங்களே நடத்த வேணுமம்மா.. இவிண் எங்கடை ரீச்சர் கூடி எவளவு பிறீயா வேக் பண்ண எலௌ பண்ணியிருக்கிறா.. திஸ் பொற் அவற் எக்ஸ்போசற் அம்மா..

இந் : நீங்களாச்சு உங்கடை மன்றமாச்சு.. (போய்க் கொண்டு) உங்களோடை கதைச்சுக் கொண்டிருந்தால் எனக்குத் தான் பைத்தியம் பிடிக்கும். ஒண்டில் மற்றவை சொல்லுறதைக் கேட்டு நடக்க வேணும் அல்லாட்டில் தாங்களாச் சிந்திச்சு நேரகாலத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்ய வேணும். இது இதுவுமில்லை.. அதுவுமில்லை.. பட்டுத்தெளிஞ்சாத்தான் தெரியும்.. ஓ

மயூ : அவபோட்டா.. நீ சொல்லு சபேஸ்.. எப்பிடி கானலயம் எழுப்பமே.. கலக்குமோ.. மச்சான்

சபே : நீ இருந்து பார் மச்சான்.. ரீச்சர் கைவைக்காட்டில் சரி.. நாங்கள் ஒரு ஐடியா வைச்சிருக்கிறம்.

மயூ : என்ன சபேஸ்

சபே : ரீச்சருக்கு றிகேசல் காட்டேக்கை ஒரு போசன் தான் காட்டிறது. கடைசி நாள் தான் முழுதும்.. அப்பதான் திறில்லாயும் இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : ஆனால் அது றிஸ்க் மச்சான். பிறகு ஏதும் அப்பிடி இப்பிடி பிரச்சனை எண்டு வந்தால் ரீச்சரோடை காலந்தள்ளேலாது.

சபே : ரீச்சரோ.. அவ அப்பிடித்தானடா.. (சிரிச்சு) இந்த உலகத்திலையே அவ தானடா எங்களைப் பற்றி நல்லாய்ப் புரிஞ்சு தெரிஞ்சு வைச்சிருக்கிற ஒரே ஒரு ஆள்

மயூ : அதெண்டால் உண்மைதானடா.. அதாலை தான் சொல்லுறன்.. அவவுக்கு நாங்கள் ஒருநாளும் பொய் சொல்லக் கூடாது.. உண்மையிலை சபேஸ் எனக்கெண்டால் அம்மாவுக்கும் குமுதினி ரீச்சருக்கும் ஒளிக்கிறதோ.. பொய் சொல்லுறதோ துளியும் விருப்பமில்லை.. உடன்பாடில்லை.. நாங்கள் சொல்லி கொன்வின்ஸ் பண்ணுவம்..

சபே : ஓமடா.. உண்மைதான்.. அவ எங்களுக்காக பிரின்சிப்பலிட்டை எவளவு ஆகியூ பண்ணினவா எண்டு தெரியும் தானே.. அவவுக்கு ஒளிக்கிறது.. நாங்கள் செய்யிற மாபெரும் துரோகமடா..

மயூ : ஏதோ எங்கடை ஒப்பீனியனைக் கேக்கக் கூடியவையிட்டை நாங்கள் ஜெனியுனாயிருக்க வேணும். பிரச்சனை வராமல் சமாளிக்க வேணுமடா. அப்பர் அறுவை தான்.. ஆனால் நெடுகச் சொல்லுவர்..

மனோ : தம்பி அப்பா சொல்லுறது கசப்பாய்த் தான் இருக்கும். ஆனால் ஒண்டை மட்டும் மறந்திடாதை.. இது பொது அலுவல்.. பள்ளிக்குட அலுவல். எதுக்கும் காலை விடமுந்தி ஆழமறிஞ்சு விடவேணும்.. எல்லாம் நல்லாய் நடந்தால் ஒவ்வொருவரும் தான் தான் பாடுபட்டது எண்டு சொந்தங் கொண்டாடுவினம். ஆனால் பிரச்சனை எண்டு வந்தால் தலைவற்றை தலையிலை கட்டிப் போட்டு இருந்த இடமே தெரியாமல் நழுவி விடுவினம். பிறகு உங்களுக்கும் பிரச்சினை.. ரீச்சருக்கும் பிரச்சனை.. அதை மறந்திடாதை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : அதுதான் யோசிக்கிறனடா..

சபே : உன்னை அப்பா அளவுக்கு மிஞ்சி பயப்பிடுத்திப் போட்டார்.. கெற் றிலாக்ஸ். இன்னும் ரெண்டு நாளாலை பார் எல்லாரும் தலையிலை வைச்சுக் கொண்டாடுவினம்.. (போய்க் கொண்டு) வெயிற் அன்ட் சீ.. பாய்டா..

....... **காட்சி மாற்றம்** .......

**காட்சி : 6**

**இடம் ; வீடு**

**பாத்திரங்கள் : இந்திரா, மயூரன், சபேசன்**

ராதை : தம்பி சபேசன்.. மயூரன்ரை அம்மா கண்டவ

சபே : என்ன.. கானலயம் வேண்டாம்.. தேவையில்லாத சிக்கல் வரும் எண்டு கண்ணீர் விட்டிருப்பா.. அப்பிடித்தானே

ராதை : ஓமடா.. தகப்பன் குமுதினி ரீச்சருக்கும் கொம்பிளையின் பண்ணினவராம். எனக்கும் தேவையில்லாத பிரச்சனை வருமோ எண்டு பயமாயிருக்குது

சபே : அம்மா.. எல்லாரும் எங்களைப் பயங்காட்ட நாங்கள் அசையேலை எண்டாப் போலை உங்களுக்குத் தூபம் காட்டியிருக்கினை போலை

ராதை ; இல்லையடா.. நானும் ரீச்சரோடை கதைச்சனான். அவவும் சொன்னவா.. ஏனடா தேவைவயில்லாத பிரச்சனைக்குப் போறியள்

சபே : அம்மா.. அப்பா இருக்கிறமாதிரி நீங்களும் சத்தம் போடாமல் இருங்கோ.. மற்றவை சொல்லுறதுக்கெடுபடாமல் சொந்தப் புத்தியிலை நடவுங்கோ.. மயூன்ரை அம்மா அவனுக்கு எவளவு சப்போட் தெரியுமே.. நீங்கள் அப்பிடி இருக்க வேண்டாம்..நச்சுப் பல்லி மாதிரி எடுத்ததுக் கெல்லாம் நெகரிவ்வாய் இருக்காமல் விட்டால் சரி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை : இல்லையடா.. அவை சொல்லுறதும் சரி எண்டு தான் நினைக்கிறன். அதுமட்டுமில்லை மயூரன்ரை அப்பா உன்னாலை தான் தன்ரை மகன் கெடுறான் எண்டு வேறை குமுதினி ரீச்சரிட்டைச் சொன்னவராம்.

சபே : ஏன்.. என்ரை பிள்ளையையும் மயூரன் தான் கூடிக் கெடுக்கிறான் எண்டு சொல்லி நீங்களும் அழுது இருக்கலாம் தானே..

ராதை : தாய் தேப்பனுக்கு விருப்பமில்லாமல் இருக்கேக்கை..

சபே : (இடைமறித்து) அம்மா.. இது மாணவர் மன்றம்.. இதிலை ரீச்சேசோ பேறன்ட்சோ தலையிடத் தேவையில்லை.. தங்கடை ரசனையளைப் புகுத்தத் தேவையில்லை.. குமுதினி ரீச்சர் மாதிரிக் கைடன்ஸ்சைத் தந்தால் காணும்.. விரும்பினால் பேறன்ற்ஸ் ரீச்சேர்ஸ் மன்றம் எண்டு ஒண்டைத் தொடங்கி உங்கடை விலாசத்தைக் காட்டுங்கோ.. நாங்களும் பாக்க வாறம்

ராதை : தம்பி சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராதெண்ட மாதிரி.. மற்றவை சொல்லுறதையும் கொஞ்சம் தன்னும் கேளுங்கோ

சபே : அது தானே பழங்கதை வேண்டாமெண்ணுறன்.. பிறகும் சிறுபிள்ளை வேளாண்மை அது இதெண்டால்

ராதை : சரி உன்னோடை கதைச்சு வெல்லேலாது.. நான் வாறன்.. பட்டபாடு.. உப்பிடித்தான் ஒருத்தற்றை சொல்லும் கேக்காமல் கப்பல் வைச்சிருக்கிறம்.. பிளேன் வைச்சிருக்கிறம்.. கைலாயம் காட்டுறம் எண்டவை.. இப்ப இருந்ததும் இழந்து நடுத்தெருவிலை.. ஓ.. எதுவும் பட்டுத் தெளிஞ்சாத்தான் புரியும்..

....... **காட்சி மாற்றம்** .......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 7**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : இந்திரா, மயூரன்**

மயூ : அம்மா நாங்கள் கானலயம் போடுறது போடுறது தான்.. அதிலை மாற்றமில்லை.. சீனியேர்ஸ் எங்களிலும் பாக்க உசாராய் இருக்கினம்.. பிறகு அப்பா போய் என்னத்துக்கு குமுதினி ரீச்சரோடை உரஞ்சினவர்..

இந் : அது வந்தடா..

மயூ : வந்தும் போயும்.. எத்தினை நாள் நான் சொல்லிப் போட்டன் இது மாணவர் மன்றம்.. பெற்றார் மன்றம் இல்லை எண்டு..

இந் : அது சரி மயூரன்.. அதுதானே அவர் உங்களோடை கதைக்காமல் ரீச்சரோடை கதைச்சவர்

மயூ : அம்மா.. அப்பா ரீச்சரோடை கதைச்சது சரி எண்டிறியளோ.. மனேசே இல்லையம்மா.. அவ.. சீனியர் அண்ணாமார் யூனியெர்ஸ் எல்லாருக்கும் முன்னாலை சொல்லேக்கை எவளவு வெக்கமாய் இருந்ததம்மா.. இவரைத்தவிர வேறை ஆர் எண்டாலும் உப்பிடி ஆரிட்டை எண்டாலும் வந்து கொம்பிளயின் பண்ணியிருக்கினமோ சொல்லம்மா.. என்ன பிறப்புகளோ

இந் : சபேசன்ரை அம்மாவும் அண்டைக்கு அழுதா

மயூ : அது உங்களோடை எல்லோ.. எங்கை ரீச்சரிட்டை வந்தோ.. இல்லையே..

இந் : அப்பா மற்றவையை மாதிரி இல்லை.. ஓப்பிண் மைன்ட் அடா பிழை எண்டு தெரிஞ்சால் மற்றவையிட்டைச் சொல்லாமல் நேரை கேக்கிற மனசடா.. அதாலை தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : அதை அவற்றை ஒவீசிலை வைச்சிருக்கச் சொல்லுங்கோ..

இந் : அவரும் பிறசர்க்காரன்.. ரீச்சரும் வேண்டாமெண்ணுறா.. சபேசன்ரை அம்மாவும் தன்ரை பிள்ளையைக் கெடுக்கிறது நீதான் எண்ணுறா.. அதாலை தான் ஏன் தேவையில்லாத றிஸ்க் எண்டு சொன்னன்

மயூ : அம்மா அப்பாவுக்குப் பிறசரெண்டால் ஹொஸ்பிற்றலுக்குப் போய் மருந்தெடுக்கச் சொல்லுங்கோ.. ரீச்சரிட்டைப் போய் சொண்டுரைஞ்சிறதை விட்டிட்டு..

இந் : சபேசன்ரை அம்மாவும் தன்ரை பிள்ளையைக் கெடுக்கிறது நீதான் எண்ணுறா.. அதாலை தான் ஏன் தேவையில்லாத றிஸ்க் எண்டு சொன்னன்

மயூ : அவவிட்டை என்னைத் திருத்த முந்தி அவயின்ரை மகனைத் திருத்தச் சொல்லி சொல்லுங்கோ..

இந் : நான் என்ன கறுமம் செய்தனோ.. உரலுக்கொருபக்கம் இடி.. மத்தளத்துக்கு ரெண்டு பக்கமும் இடி..

மயூ : என்னண்டாலும் என்னும் ஒரு நாளைக்குத்தானே.. பிறகு பாருங்கோவன்.. (போய்க் கொண்டு) நான் வாறன்.. சுவனியர் எடுக்கப் போக வேணும் லேற்றாகுது

இந் : (பெருமூச்சு விட்டு) தண்ணியோ.. சாப்பாடோ.. ஆன நித்திரையோ.. எண்டைக்கு இந்த செயர்மன் போஸ்ற் எடுத்தான் அண்டைக்குப் பிடிச்ச சனியன்.. எப்ப தான் இந்த விழா முடியும்.. நாங்கள் பழைய மாதிரி சந்தோசமாயிருப்பம்.. அம்பலத்தாடி வைரவரே.. நீயும் எல்லாத்தையும் பாத்துக் கொண்டு தானே இருக்கிறாய்..

....... **காட்சி மாற்றம்** .......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 8**

**இடம் : பாடசாலை**

**பாத்திரங்கள் : குமுதினி ரீச்சர், மயூரன், சபேசன்**

குமு : பிள்ளையளே.. ஒரு மாதிரி நவரச விழாவும் முடிஞ்சுது. அதிபருக்கு நல்ல சந்தோசம். சரியான நேரத்துக்குள்ளை முடிச்சு வெளிப் பள்ளிக்கூடப் பிள்ளையளை நேரகாலத் தோடை விட்டதெண்டும்.. நல்ல சந்தோசம்.. எங்கை செயர்மன்.. மயூரன்.. கெட்டிக்காரன்.. கொங்கிறாயுலேசன்ஸ்.. பிறின்சிப்பல் ஸ்பெசலாய் உம்மைப் பற்றிச் சொன்னார்..

மயூ : தங்க் யூ மிஸ்.. ஆனால்..

குமு : என்ன.. அதுக்கை ஒரு ஆனால்..

மயூ : ஆனால் நீங்கள் எனக்கு மட்டும் நன்றிசொல்லிறதிலை எனக்கு உடன்பாடில்லை

குமு : ஏன் மயூரன்.. பிறின்சிப்பல் சொன்னதைச் சொன்னன்..

மயூ : இல்லை ரீச்சர்.. பிரின்சிப்பல் சொல்லியிருப்பார்.. அதை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளலாம்.. அவருக்கு அந்த இரண்டு மணித்தியாலயம் தான் அளவிடை.. ஆனால் நீங்கள்..

குமு : ஏன் மயூரன் பிறகும் நீங்கள் எண்டு இழுக்கிறீர்.. என்னை என்னண்டு சொல்லச் சொல்லுறீர்..

மயூ : நீங்கள் ஆரம்பம் முதலே எல்லாம் தெரிஞ்சனீங்கள். உப்பிடி எனக்கு மட்டும் விஷ் பண்ணலாமே.. ரீச்சர். இது எங்கடை குழு முயற்சிக்குக் கிடைத்த முழு வெற்றி.. ஒவ்வொருத்தற்றை திறமையும் ஒருங்கிணைந்த ஒருங்கமைத்து வெளிக்கொணர்ந்த ஒரு வெற்றி.. இது மற்றவைக்குத் தெரியாதது.. உங்களுக்கு மட்டும் தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபே : அது மட்டுமில்லை வீட்டிலை எங்கடை பேறன்ற்ஸ்ஸே எங்கடை உணர்வுகளைப் சரியாய்ப் புரிஞ்சு கொள்ளாமல் இருந்த நேரத்திலை அவையையும் சமாளிச்சு மற்றப் பக்கத்திலை அதிபரையும் சமாளிச்சு எங்கடை திறமைகளையும் உணர்வுகளையும் சரியாகப் புரிஞ்சு வழிநடத்தின உங்களுக்குக் கிடைத்த வெற்றி..

மயூ : ஓம் ரீச்சர் மொத்தத்திலை சிறந்த புரிந்துணர்வுடனான முகாமைத்துவமும் குழுமுயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் எண்டு நிரூபிச்சுக் காட்டியிருக்கிறம்..

சபே : தடைபோடாமல் தட்டிக் கொடுத்தால் எதனையும் சாதகமாக்கலாம் எண்டு தெளிவாய்ப் புரியவைச்சிருக்கிறம் ரீச்சர்

குமு : எல்லாம் சரி.. ஆனால் இந்த விழாவின் வெற்றி மட்டும் தான் உங்கடை வெற்றி எண்டு நினைக்காதையுங்கோ..

மயூ,சபே : அப்ப..

குமு : உங்கடை எதிர்பார்ப்பினை உங்களுக்கு சாதகமாக்கினதை மாதிரி உங்கடை பெற்றாற்றை எதிர்பார்ப்பையும்.. ஏன் அதுவும் உங்கடை எதிர்காலம் தான்.. அதையும் சாதிச்சுக் காட்டினால் தான் என்ரை மனது சந்தோசமடையும்

மயூ : என்னணண்டு சொல்லுங்கோ ரீச்சர்.. முயற்சி செய்து பாப்பம்.. இயலாது எண்டு எதையும் சொல்லேலாது தானே..

சபே : விழா சக்ஸஸ் ஆனது உண்மைதான்.. அது தான் வெளிப்படை.. ஆனால் எங்கடை மனதும் இந்த விழாவாலை பண்பட்டிருக்குது ரீச்சர். தைரியமும் கிடைச்சிருக்குது.. சொல்லுங்கோ ரீச்சர்.. என்ன செய்ய வேணுமெண்டு சொல்லுங்கொ..

குமு : எனக்குத் தெரியும் நீங்கள் எல்லாம் நல்ல கெட்டிக்காரர் எண்டு.. ஓ எல் லிலை எல்லாரும் எட்டோ ஒன்பதோ ஏ எடுத்தனீங்கள்.. உங்கடை கெட்டித்தனம் இந்த மன்ற நடவடிக்கையளாலை மழுங்கடிக்கப்பட்டு விட்டுது எண்ட தப்பபிப்பிராயம் இருக்குது போலை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : உதை விடுங்கோ ரீச்சர்.. போலை இல்லை வீட்டை போனால் கேக்கிற பல்லவி உதுதான் ரீச்சர்..

குமு : உண்மைதான்.. எக்சாமுக்கு என்னும் ஆறு மாதம் இருக்கு.. வடிவாய்ப் படிச்சு அதையும் பாஸ் பண்ணினால் அதுதான் உண்மையான வெற்றியும்.. உங்களுக்கான எதிர்காலமும்.. அதை நினைவிலை வைச்சிருங்கோ.. அதுதான் உங்கடை பெற்றாரின்ரை எதிர்பார்ப்பும்.. முக்கியமாய் அப்பாவையின்ரை எதிர்பார்ப்பும்..

மயூ : விளங்குது ரீச்சர்.. அப்பாவின்ரை எதிர்பார்ப்பாய் இருக்கலாம்.. அவர் எல்லாம் வெளிப்படை... (பதிந்து) ஆனால் அம்மா மனதுக்கை புழுங்குறது எங்களுக்கு வடிவாய்த் தெரியுது. உணரமுடியுது..

சபே : எங்களுக்காக எவளவு ஏச்சுப் பேச்சுகளை வாங்கி.. எவளவைத் தியாகம் செய்திருக்கிறா..

மயூ : ஏன் ரீச்சர்.. நீங்கள்.. (அழுது) எங்களைப் பற்றி அறிஞ்ச.. எங்களை சரியாய் அளவிட்ட தாய்க்குத் தாய் ரீச்சர். இண்டைக்கு எங்களை இன்னாரெண்டு அடையாளம் காட்டினது நீங்கள் தான்..

சபே : நிச்சயமாய் நாங்கள் முயற்சி செய்து இதையும் நிறைவேற்றி வைப்பம் ரீச்சர்

குமு : ஏன் இப்ப அழுகிறியள்.. சீ.. குழந்தைப்பிள்ளையள். மாதிரி.. கண்ணைத் துடையுங்கோ..

மயூ : ரீச்சர்..

குமு : சரி பிழை எதெண்டு வேறுபடுத்தி அறியக்கூடிய பருவம்.. உங்களிட்டை அதீத திறமை இருக்கு.. முயற்சி செய்யுங்கோ.. நிச்சயம் முயற்சி திருவினை ஆக்கும்.. வேறை என்ன.. சரி வாறன்

இரு : சரி ரீச்சர்

....... காட்சி மாற்றம் ......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி : 9**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : மனோகரன், இந்திரா**

மனோ : என்ன.. இந்திரா மன்றமும் முடிஞ்சு மாதமாகுது.. என்னும் புத்தகம் எடுத்துப் படிக்க மனமில்லையே..

இந் : அவன் படிக்கிறானப்பா.. அவங்கள் கொம்பைன் வேக் பண்ணுறாங்கள்

மனோ : கொம்பைன் ஸ்ரடியோ.. அல்லாட்டில் மன்றவேலை என்னும் முடியேலையோ தெரியாது..

இந் : உங்களுக்கு அவங்களிலை பிழை பிடிக்காமல் இருக்கேலாது.. உப்பிடித் தான் விழா முடியுமட்டும் இரவும் பகலும் அருச்சனை.. இப்ப

மனோ : இஞ்சை பாரும்.. என்னாலை சொல்லக் கூடியதைச் சொல்லுறன்.. படிப்புத்தான் வாழ்க்கை.. எதிர்காலம்.. உந்த விழாக்கள் மன்றங்கள் எல்லாம் படிச்சுப் பதவியில் இருந்தால் தானாய் வரும். அதை மறந்திடாதையும்..

இந் : உண்மைதான்.. ஆனால் படிப்பு படிப்பு எண்டு புத்தகப் பூச்சியாய் தனிய இருந்தும் பிரயோசனம் இல்லையப்பா.. மன்றம் செய்து தான் கவிழவேணுமெண்டுமில்லை.. அதேபோலை மன்றம் செய்யாதவங்கள் எல்லாம் வெட்டி விழுத்தினதும் இல்லை.. அதை மறந்திடாதையுங்கோ..

மனோ : இந்திரா என்ன இருந்தாலும்.. மன்றங்களும் விழாக்களும் சோறு போடாது. அதையும் மறந்திடாதையும்

இந் : கோபப்படாதையுங்கோ.. உண்மைதான்.. ஆனால் அதுகள் தான் மனதைப் பண்படுத்தும்.. புத்தூக்கத்தைத் தரும்.. படிக்கத் தூண்டும்.. மொத்தத்திலை உளவியல் ரீதியிலையும் மனதைப் பண்படுத்தும்.. அதை மறந்திடாதையுங்கோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ : (போய்க் கொண்டு) ஏதோ.. நாய்வாலை நிமித்தேலாதெண்டு தெரியாமலே சொன்னாங்கள்.. என்னண்டாலும் செய்து முடியுங்கோ..

...... காட்சி மாற்றம் ......

**காட்சி : 10**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : மனோகரன், இந்திரா**

குமு : என்ன மயூரன்ரை அப்பாவும் அம்மாவும் வந்திருக்கிறியள்.. என்னவாம் மயூரன்

மனோ : ஏதோ உங்கடை ஊக்கத்தாலையும் கடவுளின்ரை செயலாலையும் தான் இந்த றிசல்ற் வந்தது.. அதுதான்..

குமு : இஞ்சை பாருங்கோ மயூரன்ரை அப்பா.. நீங்கள் இப்பவும் நல்ல றிசல்ற் வந்தும்.. உங்கடை மகன்ரை திறமையிலை நம்பிக்கை வைக்கேலைப் பாருங்கோ

மனோ : ரீச்சர்..

குமு : ஓம் நல்ல றிசல்ற் வந்துது.. அதுவும் ஐலன்ட் றாங்க் 50க்குள்ளை எண்டால் சும்மாவே..

இந் : அதுதானே ரீச்சர்

குமு : ஆனால் அப்பா.. என்ரை ஊக்கத்தையும் கடவுளின்ரை செயலையும் சொல்லுறாரே தவிர.. மயூரன்ரை திறமையைச் சொல்லுறாரில்லையே..

இந் : உதுதான் ரீச்சர்.. ஏதேன் அவனிலை பிழை பிடிக்கிற தெண்டால் முன்னுக்கு நிப்பர். ஆற்றையேன் பிழையைக்கூட அவன்ரை தலையிலை போடுறதுக்கு முன்னுக்கு நிப்பர். ஆனால் அவன்ரை திறமையை அப்பிறசியேற் பண்ணுறதிலை ஒரு கொஞ்சம் தன்னும் அக்கறையில்லை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ : என்ன இந்திரா நீரும்.. அது வந்து ரீச்சர்..

இந் : வந்தும் போயும்.. உண்மையைத் தானே சொன்னன்.. அவன் வந்து சொல்லி அழுறது என்னோடையெல்லோ.. இப்ப எண்டாலும் புரியுங்கோ அவனைப்பற்றி..

குமு : கொஞ்சம் பொறுங்கோ இந்திரா.. அது தகப்பன் மாற்றை குணம்..

இந் : தகப்பனாய் இருக்கலாம். ஆனால் பிள்ளையளின்ரை மனோ நிலையையும் அறிஞ்சு நடக்கிற பக்குவமிருக்கவேணும்.. அதுமுக்கியம்

குமு : அதெண்டா உண்மைதான் மயூரன்ரை அப்பா.. நாங்கள் பெற்றார் கண்டிப்பாய்த்தான் இருக்க வேணும். ஆனால்அதே நேரம் கொஞ்சம் அவையின்ரை பக்கத்துக்கும் விட்டுப் பிடிக்க வேணும். சுதந்திரமாய்ச் சிந்திக்க விடவும் வேணும். அப்பதான் அவயளின்ரை மனோதிடமும் உறுதியாகும்..

இந் : ஓம் ரீச்சர்..

குமு : பிள்ளையளுக்கு அதுவும் முக்கியமாய் எங்கடை பிள்ளையளுக்கு படிப்புத்தான் முக்கியம். அதை இல்லை எண்ணேலை. ஆனால் நாங்கள் அழுத்தம் குடுக்க குடுக்க அவைக்கு அதிலை மேலும் மேலும் வெறுப்புத்தான் வருமே தவிர ஒரு நாளும் மனதளவிலை ஈடுபாடு வராது.

இந் : அதுமட்டுமில்லை அது ஆராய் இருந்தாலும் இப்பிடிச் சொல்லுறவையிலையும் வெறுப்புத் தான் வரும். எங்கடை வீட்டிலையும் உதுதான். உவர் சொல்லுறதிலை நியாயமில்லை எண்டு சொல்லவரேலை. ஆனால் தான் சொல்லுறதுதான் சட்டம் எண்ணுறமாதிரிச் சொன்னால்.. அவனுக்கு கோபம் வராமல் விடுமே.. அதுகளும் ஓரளவுக்கு நாலும் தெரிஞ்சதுகள் தானே.. நீங்களே சொல்லுங்கோ ரீச்சர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ : எல்லாரும் எல்லாம் சொல்லுவியள். ஆம்பிளைப் பிள்ளையள் கெட்டுநொந்து போனால் அரிச்சனை கிடைக்கிறது அப்பா மாருக்குத்தான். அதாலைதான் சொன்னன்

குமு : ஓம் ஓம்.. மயூரன்ரை அப்பா சொல்லுறது பிழை எண்டு சொல்ல வரேலை.. நாங்கள் பெற்றார் தான்.. ஆனால் பிள்ளையளின்ரை எதிர்காலத்தைப் பற்றி அவையளும் தாங்களாய் யோசிச்சு சுயமாய் முடிவெடுக்க விடவேணும். சந்தர்ப்பம் குடுக்க வேணும்.. அந்தச் சுதந்திரத்தைப் பறிக்கக் கூடாது.

மனோ : ரீச்சர்

குமு : ஓம்.., அப்பா அம்மாவுக்காகப் பிள்ளை படியாமல், தனக்காகத் தனக்கு விருப்பமானதை படிக்கிறதைத் தெரிவு செய்யிற சுதந்திரம் இருக்க வேணும். அப்பதான் பிள்ளையும் ஊக்க மெடுத்து விருப்பமாய்ப் படிக்கும்.

இந் : சரியாய்ச் சொன்னியள் ரீச்சர்

குமு : பெற்றாரும் ஆசிரியர்களும் ஒரு வழிகாட்டியளாய், வடிகால்களாய் இருக்கவேணுமே தவிர வலிந்து திணிக்கிறவையாய் இருக்கக் கூடாது. அப்பதான் பிள்ளையள் தாங்களே விரும்பி சந்தோசமாய் படிக்கத் தொடங்கும்.

இந் : பிள்ளையள் தாங்களே தங்கடை வேலையைச் செய்தால் எங்களுக்கும் சந்தோசம் தானே.

குமு : அதுமட்டுமில்லை எடுத்ததுக்கெல்லாம் படி படி எண்டுமட்டும் சொல்லுறதை விட்டு அவையளும் எதிலை இன்ரறஸ்ற் எண்ணுறதை நாங்கள் கூர்ந்து கவனிச்சு அதுக்கும் நாங்கள் வடிகால்களாய் மட்டுமில்லை உந்துசக்தி குடுக்கிறவையாயும் இருந்தமெண்டால் நிச்சயமாக மாணவர்கள் அதுதான் உங்கடை பிள்ளையளை திறமையான நல்ல பிரஜையளாய் உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் : அதெண்டால் உண்மைதான் ரீச்சர்.. அது மட்டுமில்லை அவங்கள் தங்கடை சுகதுக்கங்கள் ஏற்ற இறக்கங்களை எங்களிட்டை வந்து சொல்லேக்கை நாங்கள் எவ்வளவு வேலையாய் இருந்தாலும் ஆறுதலாய்க் கவனமாய்க் கேட்டு ஒத்தடம் குடுக்கிற மாதிரிக் கதைச்சமெண்டால் ஒருநாளும் வழிதவறிப் போகாதுகள்

குமு : ஓம் இந்திரா, பெற்றாரும் ஆசிரியர்களும்.. அதுதான் ஒருபடி மேலை போய்ச் சொல்லுறதெண்டால் குடும்பச் சூழலும் பாடசாலைச் சூழலும் தங்கடை எண்ணங்களை பிள்ளையளிட்டைத் திணிக்கிறதை விட்டிட்டு பிள்ளையளின்ரை எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிச்சு வடிகால்களாயும் உந்து சக்தியாயும் இருந்தால் ஒரு வளமான எதிர்காலச் சந்ததியை உருவாக்கலாம் இது நான் அனுபவத்திலை கண்ட உண்மை.

**நிறைவு**

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையில் 19.09.2016 இரவு 9.30ற்கு முதன்முதலில் ஒலிபரப்பானது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப் படங்கள் : நான் பிறந்த மண் மறவன்புலோவின் அடையாளங்கள்

முன் அட்டை : பிறந்த இல்லத்து முற்றத்து ஒற்றைப்பனை 'ஆலாவடலி'


பின் அட்டை : நீச்சல் பழகி பெரும்பாலான காலங்களில் உடற்சுகத்தை பேண வழிசமைத்த 'எருக்கலையன்குளம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயூரன் – அஜீவன் சிவானந்தன், தாய் –AMC ஜெயஜோதி,
ஆசிரியை – ரஜனி பொன்னம்பலம், ராதை – புஸ்பராணி சிவலிங்கம்,
சபேசன் – கவிசாந்த் மனோகரன்




மயூரன்– அஜீவன் சிவானந்தன், தயாரிப்பாளர் சிவராசா–தக்கீசன்
தாய் – AMC ஜெயஜோதி, ஆசிரியை – ரஜனி பொன்னம்பலம்,
தகப்பன் – செ.அம்பலவாணர், சபேசன் – கவிசாந்த் மனோகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மனவைரம்” சிறந்த நாடகநூலுக்கான சாகித்திய விருது
அரச இலக்கிய விருதுவழங்கல். -2019






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“விதி” நாடகத்திற்காக சிறந்தவானொலி நாடகப்பிரதிக்கான ஜூரி விருது

அரச வானொலி விழா -2019






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை

விதைத்தவர் அறிமுகம்



பொறியியல் துறையினோடு
பொழுது போக்காகத் தானே
வானில் ஒலித்திடும் நாடகத்தை
எழுதியும் நடித்தும்
மற்றும்
திருமுறை ஓதி
சிவன் திருவடித்தொண்டு செய்தும்
அவனியில் பெயர் பதித்த அன்பன்
அம்பலவாணர் தன்னை
அளவிலா மகிழ்ச்சியுடன்
அவரின் விதையின்
அட்டைதன்னில்
அறிமுகம் செய்கின்றேனே...



இ. ஸ்ரீஸ்கந்தராசா

ISBN 978-955-42626-6-9
விலை.500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org